உயிரிலும் மேலான நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அன்னவர்களை புகழ் பாடும், உலக புகழ் பெற்ற சுப்ஹான மௌலிதின் தமிழாக்கம்.


இதனை அழகு தமிழில் மொழிபெயர்த்து அனைவரும் பயனடைய செய்த ஆலிம் கவிஞர் தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹிக்கும் வெளியிட்ட சுலைமானியா பப்ளிஷருக்கும் அல்லாஹ் காலமெல்லாம் அருள் புரிவானாக...

WWW.MAILOFISLAM.COM

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

# சுந்தரத் தமிழில்

# சுப்ஹான மவ்லீத்




ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹி

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

# مَوْلِدُ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

للشّيخ الخطيب محمّد المدني وقيل لحجة الاسلام
الغزّالي رحمهما الله تعالى

## سُبْحَانَ مَوْلِدُ

வெளியீடு:

**சுலைமானியா பப்ளிஷர்ஸ்**

81 அங்கப்பன் தெரு, சென்னை - 600 001.
தொலைபேசி : 52 70 550

அச்சு அமைப்பு, கிடைக்குமிடம்:

**சுலைமானியா பப்ளிஷர்ஸ்**

81, அங்கப்பன் தெரு,
சென்னை - 600 001.

உரிமைப் பதிவு : ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : 1998 ஜூன்
ஹிஜ்ரி 1419 ரபியுல் அவ்வல் பிறை 1

மூன்றாம் பதிப்பு : 2004 ஏப்ரல்
ஹிஜ்ரி 1425 ரபியுல் அவ்வல் பிறை 2

நான்காம் பதிப்பு : 2008 மார்ச்
ஹிஜ்ரி 1429 ரபியுல் அவ்வல் பிறை 1

ஹதியா ரூ 40.00

சென்னையில் எங்களின் அனைத்து நூல்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்

**தாஜுல் புக் சென்டர்**

184/6, அங்கப்பன் தெரு, சென்னை - 600 001.
போன் : 252 400 70

அச்சு அமைப்பு

**சுலைமானியா பப்ளிஷர்ஸ்**

சென்னை - 1
தொலைபேசி : 252 70 660
செல் : 94445 [illegible]

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

# நுழைவாயிலில்...!

*அலகில்லா அருளும் அளவில்லா அன்பும்*
*துலங்குமுன் பெயரால் தொடங்குவேன் அல்லாஹ்*
*அகமதில் நிறைந்த அருள்நபி மீது*
*புகழ்ஸல வாத்தைப் பொழிந்தருள் அல்லாஹ்*

அல்லாஹ்வின் அருமைத் தூதுவர், அனைத்துலகின் அருட்கொடை, பூவுலக மாந்தர்க்குப் புனிதவழி காட்ட வந்த புண்ணிய பூமான், நம் உயிருக்கு உயிரான உயிரினும் மேலான - கண்மணி, எம் பெருமானார் முஹம்மது முஸ்தபா றசூலே கரீம் (ஸல்) அவர்களை நினைத்தாலே நெஞ்சம் இனிக்கிறது. அவர்களின் நிகரற்ற நாமத்தை உச்சரித்தாலே நாவுகள் நறுமண மலராகின்றன. அவர்களை, உரைநடையால் ஊறும் கவிநடையால் - உளமாரப் புகழும் போதெல்லாம் ஊற்றெடுக்கும் உமிழ்நீரும் கூட 'உளூ' நீரைப் போன்றல்லவா உன்னதம் அடைகிறது. இந்த உண்மையை உணர்ந்த உத்தம ஸஹாபாக்கள் பூமான் நபி (ஸல்) அவர்களை, அவர்களின் முன்னிலையிலேயே போற்றிப், புகழ்ப் பாக்கள் பாடிப் புளகாங்கிதமடைந்தனர். இத்தகையவர்களில் அப்பாஸ் (ரலி) அவர்கள், ஹஸ்ஸான் இப்னுதாபித் (ரலி), கஃபு இப்னு ஸுஹைர் (ரலி), கஃபு இப்னு மாலிக் (ரலி) அப்துல்லாஹிப்னு ரவாஹா (ரலி), அப்துல்லாஹிப்னு ஸப்அரீ (ரலி) நாபிகா பனீஜஃதா (ரலி) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

இவர்களில் கஃபு இப்னு ஸுஹைர் (ரலி) அவர்கள், தாஹா நபி (ஸல்)யின் தங்கமேனியைத் தழுவிய மேலாடையை அவர்களின் அருட்கரங்களாலேயே போர்த்தப் படும் பெரும்பேறு பெற்றார்கள் என்பதும், 'ஹஸ்ஸான் இப்னுதாபித் (ரலி) அவர்கள், அருமை நபி (ஸல்) அவர்

களால் அமைக்கப்பட்ட தனி மேடையில் (மிம்பரில்) நின்று, கருணை நபி நாதரைப் புகழ்ந்து கவிதை மழை பொழியப் பொழிய, அதைக் கேட்டுச் சுவைத்த நபியவர்கள், "அல்லாஹ்வின் தூதரைப் புகழும் காலமெல்லாம், பரிசுத்த ஆவியை (ஜீப்ரீலை)க் கொண்டு ஹஸ்ஸானை நிச்சயமாக அல்லாஹ் வலிமைப்படுத்துவானாக!" என்று, கவிஞர் ஹஸ்ஸானை வாயார வாழ்த்தியதும் வரலாற்றில் வைரமணி எழுத்துக்களால் இலங்கும் உண்மையாகும்.

மாநபி (ஸல்) அவர்கள், மண்ணக வாழ்வைத் துறந்த போது மனம் கலங்கிய மாண்பு ஸஹாபாக்களில், நாற்பெரும் கலீபாக்களும், நங்கையர் திலகம் நாயகி பாத்திமா (ரலி) அவர்களும், ஸபிய்யா பின்த் அப்தில் முத்தலிப், அபூ சுப்யான் இப்னு ஹாரிஸ் போன்றோரும் உருகிப் பாடிய இரங்கற் பாக்கள் இலக்கியத்தில் இலங்குகின்றன. இம்மை மறுமை வாழ்வில் ஏற்றம் பெற நாடி, எம்பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றிப் பாடிய ஏந்தல்கள், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் நோக்கில் இயற்றிய நூல்கள், 'மவ்லிது கிதாபு'களாக மணம் பரப்பி வந்தன. இன்றும் மணம் பரப்பி வருகின்றன.

ஹிஜ்ரி 8-வது நூற்றாண்டிலிருந்து இயற்றப்பட்டு மவ்லிதுகிதாபுகளை உருவாக்கிய ஒப்பற்ற மாமேதைகளில் சிரியா நாட்டு மேதை இப்னு நாஸிறுத்தீன், ஈராக் மேதை ஹாஃபிழுல் இராகிய்யி, எகிப்து நாட்டு மேதை ஸகாவி, எமன் நாட்டு மேதை வஜீஹுத்தீன் அப்துர்ரஹ்மான் இப்னு அலிய்யுல் முஹம்மதுஷ் ஷைபானி, திருமறை ஆய்வாளர் இமாதுத்தீன் இஸ்மாயில் இப்னு உமர் இப்னு கதீர், ஹதீஸ் கலை விற்பன்னர் முல்லாஅலி காரீ போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

இத்தகைய மவ்லிதுகளின் பட்டியலில் நம் தமிழ் முஸ்லிம் சமுதாயப் பெருமக்களிடையே பன்னெடுங்கால

... watermarked evaluation copy ...

மாகப் பவனிவரும் மவ்லிது, சொக்க வைக்கும் சுவையான சந்தப் பாடல்களைக் கொண்ட - சுப்ஹான மவ்லிது ஆகும். ‘பர்ஸன்ஜீ மவ்லிது’, ‘ஹரீரீ மவ்லிது,’ ‘ஷறஃபுல் அனாம் மவ்லிது’, ‘மன்கூஸ் மவ்லிது’, ‘மின்ஹத்துல் ஸறந்தீப் மவ்லித்’ என்பன போன்ற மவ்லிதுகள் திருநபி (ஸல்) புகழ் பாடிய நிலையில் தென்னகத்தில் தவழ்ந்து வந்தாலும், இவற்றிடையே, மகுடமாய்த் திகழும் சுப்ஹான மவ்லிதை, கல்விக் கடல் கஸ்ஸாலி இமாம் (ரஹ்) அவர்களோ, அல் இமாமுல் கத்தீப் முஹம்மதுல் மதனி (ரஹ்) அவர்களோ இயற்றியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

‘இயற்றியவர் யார்?’ என்று திட்டவட்டமாகத் தெரிய வில்லை என்பதற்காக இயற்றப்பட்ட இனிய நூல்கள் என்றைக்கும் மறுக்கப்பட்டதில்லை. உயர்ந்த போதனை களை உள்ளடக்கிய எத்தனையோ அறநெறி இலக்கியங்கள் இன்றுவரை அவற்றின் ‘ஆசிரியர்கள் யார்?’ என்று அறியப் படாமலேயே அனைத்து மக்களாலும் அகமார ஏற்கப்பட்டி ருக்கிறதல்லவா? ‘‘சொல்லப்பட்டதைக் கவனி! சொன்ன வரைக் கவனிக்காதே’’ என்பதல்லவா, ஞானத்தின் நுழை வாயிலான ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களின் அறிவுரை. பொருட்செல்வத்தைத் தானம் செய்பவர்கள் - முகத் துதியைத் தவிர்த்திட, தன் முகம் காட்டாமலேயே - மறைமு கமாக தானம் செய்வது போல அருமை நபி (ஸல்) புகழான இந்த அருட் செல்வத்தைத் தரணிக்குத் தானம் செய்ய முன்வந்த தகைசான்ற மெய்ஞ்ஞானிகள் யாராவது தன்னை மறைத்துக் கொண்டிருக்கலாம். அதன்மூலம், முகத்துதி கல வாத இறையருளிலும் நபியன்பிலும் மூழ்கித் திளைத்திட முற்பட்டிருக்கலாம்.

இந்த மவ்லிது, ‘‘ஸுப்ஹானல் அஸீஸில் ஃகஃப்ஃபார்’’ என்று தொடங்குவதால், இதன் முதல் சொல்லான ஸுப்ஹான என்பதே, இந்த மவ்லிதுக்குரிய பெயராக அமைந்தது. தமிழ் முஸ்லிம் சமுதாயப் பெருமக்கள் வாழும்

பெரு நகரங்களிலும், சிற்றூர்களிலும் ஏழையின் குடிசையிலிருந்து சீமானின் மாளிகை வரை - உலவிவரும் இந்த மவ்லிதின் பொருளை, ஓதிடுவோர் உள்ளங்களில் பதிய வைக்க வேண்டுமென்ற எண்ணம் நெடு நாட்களாகவே எந்தன் நெஞ்சிற்குள் நிலவி வந்தது. அந்த எண்ணம், எல்லாம் வல்ல இறையருளால் எழில்வடிவம் பெற்றிருப்பதைத்தான், தாங்கள் இப்போது பார்க்கிறீர்கள். அல்ஹம்துலில்லாஹ்!

இந்நாளில் நம்மவரின் கரங்களுக்கு எட்டாமல் காலத்தால் மறைந்து விட்ட மொழிபெயர்ப்புக்கள் சிலவற்றை யாம் காண நேரிட்டது. அந்த மொழிபெயர்ப்புக்களிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டு, மூலமொழியின் ஒரு சொல் கூட விடுபடாமல் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதுடன் காலத்துக்கேற்ற கன்னித் தமிழ் மொழி நடையைப் பெற்றிருப்பதையும் நேயர்கள் இங்குக் காணலாம்.

இந்த மவ்லிதில் இடம் பெற்ற 'பைத்து'க்கள் அனைத்தையும் கவிதை வடிவில் மொழி பெயர்க்க 'எந்தன் மனம் விரும்பியது. ஆனால், பாமர வாசகர்களும் எளிதில் புரிய வேண்டும்' என்ற நோக்கில், இந்த எண்ணத்தைக் கைவிட்டேன். இருப்பினும் ஒரு மாதிரிக்காக - புகழ்பெற்ற பைத்துகளான, இதயங்களை ஈர்த்திடும் 'யாஸையீதி பைத்து' 'யா நபி பைத்து' ஆகிய இரண்டை மட்டும் இசைக்கேற்ற பாவடிவில் மொழி பெயர்த்துள்ளேன்.

சுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த அன்பர்கள், தமது இல்லத்து மவ்லித் மஜ்லிஸ்களில் இந்நூலைப் பயன்படுத்தி 'பொருளுணர்ந்து - இந்த மவ்லிதை ஓதி வர வேண்டும்' என்ற நோக்கில், இதனை நாம் எழுதியிருப்பதால், 'மவ்லிது ஓதுவது கூடாது' என்று உரைப்பவர்களின் உலுத்துப்போன வாதங்களுக்கு மறுப்புரை வழங்கும் நூலாக இதனை நாம் அமைக்கவில்லை. இன்ஷா அல்லாஹ்

வாய்ப்பிருந்தால் மறுப்புரையினை மட்டும் கொண்ட நூலை பின்னர் வெளியிடலாம். இந்த மொழி பெயர்ப்பில் ஏதேனும் திருத்தங்களை எமது மதிப்பிற்கும் மரியாதைக்கு முரிய மார்க்க மேதைகள் எடுத்துக் காட்டினால், இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீங்கள் சுமந்திருக்கும் இந்த சுகந்த மலருக்குப் பாசனம் செய்த, பாசத்திற்குரிய பெருந்தகை, சென்னை - சுலைமானியா பப்ளிஷர்ஸ் உரிமையாளர் ஜனாப் எம்.எஸ்.ஷேக் சுலைமான் ஹாஜியார் அவர்களுக்கும், எழில் மிகு எழுத்துக்களை அரபியில் வடித்தெடுத்து, கண்கவர் அட்டைப்படம் அமைத்த சகோதரர் ஸமீராஸ் அவர் களுக்கும், அட்டைப் படத்திற்காக ஒரு மவ்லித் மஜ்லிஸையே அமைத்து, புகைப்படம் எடுத்து உதவிய காயல் பட்டணம் குத்பியா மன்ஸில் நிறுவன நிர்வாகத் திற்கும் எமது ஆழிய நன்றி!

எல்லாம் வல்ல அல்லாஹ், எம்பெருமானார் (ஸல்) அவர் களின் இனிய துஆப் பேற்றினால், இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெறும் நல்வாய்ப்பினை நல்கிடுவானாக! மாநபி (ஸல்) அவர்களின் மன்றாட்டத்தை மறுமையில் பெற்றிடத் துணை நிற்கும் மாசற்ற நபிநேசத்தை இந்நூல் மூலம் - நம் இதயங்களில் இறைவன் என்றென்றும் சுரக்கச் செய்வானாக! ஆமீன்! யா றப்பல் 'ஆலமீன்!'

மிக்க அன்புடன்,

தேங்கை மு.ஷறபுத்தீன்

மிஸ்பாஹி

காயல்பட்டணம்

22.5.98

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

# மவ்லிது எனும் அமல்!

(இந்தக் கட்டுரை - அகில இந்திய சுன்னத் வல் ஜமாஅத் பேரவையின் பொதுச் செயலாளர், அல்லாமா அஷ்ஷெய்க் அபூபக்கர் அஹ்மதுல் காந்தபுரமிய்யி அவர்கள் எழுதிய, 'இழ்ஹாறுல் ஃபறஹி வஸ்ஸுறூரி பிமீலாதின் னபிய்யில் மப்றூர்'' என்ற அறபி நூலில் இடம் பெற்ற ''அமலுல் மவ்லிதி'' என்ற கட்டுரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி யாகும்)

'மவ்லிது' எனும் அரபிச் சொல்லின் அகராதிப் பொருள், 'பிறந்த நேரம்' அல்லது 'பிறந்த இடம்' என்பதாகும். இமாம் களின் சொல் வழக்கில் 'மவ்லிது' என்பது, மக்கள் திரண்டி ருந்து குர்ஆனிலிருந்து வசதிப்பட்ட வசனங்களை ஓதி, ஒரு நபியின் அல்லது வலியின் பிறப்பு விஷயத்தில் - வர லாற்றில் இடம் பெற்ற செய்திகளை எடுத்துரைத்து - நபி மாரின் அல்லது வலிமாரின் வாழ்நாளில் நிகழ்ந்தவற் றையும், அவர்களின் சொற்களையும் செயல்களையும் புகழ்ந்துரைத்து, முடிவில் ஏழை எளியவர்களுக்கு உணவ ளிப்பதாகும்.

மவ்லிது ஓதுவதின் குறிக்கோள் நபிமார் வலிமாரைக், கண்ணியப்படுத்திக் கவுரவப்படுத்திச் சிறப்பிப்பதாகும். இவ்வாறு கணணியப்படுத்துவது, குர்ஆன் மூலமாகவும் அங்கீகார ஹதீஸ்மூலமாகவும் 'சரியானது' என்று நிரூபண மாதலால், இதனை 'ஷிர்க்' என்றோ விலக்கப்பட்டது' என்றோ கூறிட எவரும் துணியமாட்டார். அல்லாஹ்வின் சின்னங்களைக் கண்ணியப்படுத்துவது குர்ஆன் ஹதீஸ் மூலம் ஏவப்பட்ட விதியாகும். ''அல்லாஹ்வின் சின்னங் களை எவரேனும் கண்ணியப்படுத்தினால், நிச்சயமாக அது இதயங்களின் இறையச் சத்தைச் சார்ந்தது ஆகும்'' என்று அல்லாஹ் கூறியுள்ளான். (அல்குர்ஆன் 22:32)

நபிமார், வலிமார், நல்லடியார்கள் உறுதியாக அல்லாஹ்வின் சின்னங்கள் ஆவர். எனவே, நபிமார், வலிமார் உலமாக்களைக் கணணியப்படுத்துவது, ஈமானைச் சார்ந்ததாகும். நமது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்ணியப்படுத்துவது, குர்ஆன் ஹதீஸ் மூலம் ஏவப்பட்ட விதியாகும். எவரும் இதில் தர்க்கம் செய்ய மாட்டார். நபி (ஸல்) அவர்களைக் கண்ணியப்படுத்திக் கவுரவப்படுத்தப் பல்வேறு வசனங்களில் அல்லாஹ் ஏவி யுள்ளான்.

"இறை நம்பிக்கையாளர்களே! நபியின் குரலை விட உங்கள் குரலை உயர்த்தாதீர்கள். உங்களில் சிலர் சிலரிடம் சப்தமிட்டுப் பேசுவது போல் நபியிடம் சப்தமிட்டுப் பேசா தீர்கள். இதனால், உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் அமல்கள் வீணாகிவிடும். (அல்குர்ஆன் 49:2) என்று அல்லாஹ் கூறியுள்ளான். நபி (ஸல்) அவர்களைக் கண்ணி யப்படுத்துவதின் மகத்துவம் இதுபோன்ற வசனத்தி லிருந்து அப்பட்டமாக விளங்கப்படுகிறது.

நபி (ஸல்) அவர்களின் புனித மவ்லிதுக்கு மார்க்க ரீதி யாகப் பலவிதமான பயன்கள் எல்லா வகையிலும் உள்ளன. நிச்சயமாக புனித மவ்லிது, நபி (ஸல்) அவர்களின் கண்ணி யமான பிறப்பு, அவர்களின் அற்புதங்கள், அழகிய நடை முறை ஆகியவற்றைச் சொல்வதையும் நபி (ஸல்) அவர் களைக் குறித்து அறிவிப்பதையும் உள்ளடக்கியுள்ளது. நபி (ஸல்) அவர்களைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்' என்று நாம் ஏவப்பட்டுள்ளோம். அவர்களைப் பின்பற்ற வேண்டுமென நாம் உத்தரவிடப்பட்டுள்ளோம். நபி (ஸல்) அவர்களின் அத்தாட்சிகளை உண்மைப்படுத்தி, அவர் களின் அற்புதங்களை நம்பி, அவர்களின் செயல்பாடு களைப் பின்பற்ற வேண்டுமென நமக்கு ஏவப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமில்லாமலும் கருத்து வேறுபாடின்றியும் மவ்லிது கிதாபுகள் மேற்கண்ட நோக்கினை முழுமையாக நிறைவேற்றி வைக்கிறது.

"குர்ஆனுக்கோ, ஹதீஸுக்கோ, இமாம்களின் ஏகோபித்த முடிவுக்கோ ஸஹாபாக்களின் கருத்துக்கோ மாறுபட்ட நிலையில் நூதனமாக ஏற்படுத்தப்பட்டவை, வழிகெட்ட அனாச்சாரம்' என்றும், மேற்கூறப்பட்டதில் இருந்து எவற் றிற்குமே மாறுபடாத நிலையில் ஏற்படுத்தப்பட்ட நன்மை யானவை, 'போற்றத்தகும் அணுகுமுறை' என்றும் சட்ட மேதை இமாம்ஷாஃபீ (ரலி) கூறியுள்ளார்கள்.

உத்தமநபி (ஸல்) அவர்களின் உன்னத நினைவை உயிர்ப்பிப்பது என்பது, மவ்லிதுக்காகத் திரளுவதால் ஏற்படும் பயன்களில் ஒன்றாகும். இந்த நினைவை.உயிர்ப் பிப்பது நமது மார்க்கத்தில் ஷரீஅத்தின் நெறிமுறை ஆக்கப் பட்டதாகும். எனவே, ஹஜ்ஜின் செயல்களில் அதிகமா னவை, வரலாற்றில் சாட்சியமாக்கப்பட்ட நினைவுக ளையும், போற்றப்பட்ட நிற்குமிடங்களையும், உயிர்ப்பிப்ப வைதான் என்று நாம், பார்க்கிறோம். ஸஃபா மர்வா மலைக் குன்றுகளுக்கிடையே தொங்கோட்டம் ஓடுவதும், மினாவில் கற்களை எறிவதும், பலியிடுவதும் கடந்த காலத்தில் நிகழ்ந்து முடிந்த பழைய நிகழ்ச்சிகளாகும். ஆனால், இவற்றின் தோற்றத்தை இன்றுவரையிலும் நடை முறையில் புதுப்பிப்பதன் மூலமாக அவற்றின் நினைவு களை முஸ்லிம்கள் உயிர்ப்பிக்கின்றனர்.

திருநபி மவ்லிது என்பது - அனைத்து நாடுகளிலும் உல மாக்களும், முஸ்லிம்களும், அழகானது எனக் கருதிய ஒரு விஷயமாகும். இந்த நடைமுறை, அனைத்துப் பகுதிக ளிலும் அமுலில் உள்ளது. "முஸ்லிம்கள் எதை அழகான தெனக் கருதினரோ, அது அல்லாஹ்விடத்திலும் அழகான தாகும். எதை அருவருக்கத்தக்கதாகக் கருதினரோ, அது அல்லாஹ்விடத்திலும் அருவருக்கத்தக்கதாகும். (தகவல் : இமாம் அஹ்மது) என்ற இப்னுமஸ்ஊது (ரலி) அவர்களின் ஹதீஸிலிருந்து எடுக்கப்பட்ட விதியின் காரணத்தால் ஷரீ அத்தினபடி மவ்லிது ஓதுதல் ஏவப்பட்ட செயலாகும்.

பெருமானார் (ஸல்) பிறந்த மாதத்தில் முஸ்லிம்கள் திரண்டு விருந்துகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இம்மாத இரவுகளில் இனிய தானங்களை பல வகைகளில் செய்கிறார்கள். அறப்பணிகளை அதிகரித்து ஆனந்தத்தை வெளிப்படுத்துகிறார்கள். அருமை நபி (ஸல்) அவர்களின் புனிதப் பிறப்பின் வரலாற்றை ஓதுவதில் தனிக்கவனம் செலுத்துகிறார்கள். மவ்லிது ஓதுவது அந்த வருடம் முழுவதும் பாதுகாப்பாகவும், நாட்டத்தையும் நோக்கத்தையும் அடையச் செய்வதின் மூலமாக உடனடியான நற்செய்தியாகவும் அமைந்திருப்பது மவ்லிதின் தனித்தன்மைகளைச் சார்ந்ததென்று அனுபவத்தின் வாயிலாக அறியப்பட்டிருக்கின்றதென இமாம் கஸ்தலானி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த புனித இடத்தை மக்கா வாசிகள் அன்றும் இன்றும் தரிசிக்கும் அமல், ரபியுல் அவ்வல் 12-ம் நாள் நடைபெற்று வந்ததாக மவாஹிபுல் லதுன்னியா' என்ற நூல் கூறுகிறது. ‘முந்தைய பிந்தைய மார்க்க மேதைகள், நபி (ஸல்) அவர்கள் பிறந்த நாள் இரவிலும் பகலிலும் மவ்லிது எனும் அமலில் ஈடுபடுவதில் ஒத்திருந்தார்கள்'' என்று அஷ்ஷெய்க் யூஸுபுன்னபஹானி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘‘உஹது மலையளவு தங்கம் என்னிடம் இருக்குமானால், நான் அதை நாயகம் (ஸல்) அவர்கள் மீதுமவ்லிது ஓதுவதற்காகச் செலவு செய்ய விரும்புவேன்'' என்று ஹஜ்ரத் ஹஸனுல் பஸரீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

‘‘திரு நபி (ஸல்) அவர்களின் மவ்லிது சபைக்கு ஒருவர் வருகை தந்து, அவர்களின் மகத்துவத்தை ஒருவர் கண்ணியப்படுத்தினால் அவர், ஈமானின் மூலம் வெற்றிபெற்று விட்டார்'' என்று, ஹஜ்ரத் ஜுனைதுல் பக்தாதி (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘‘மாநபி (ஸல்) மவ்லிது ஓதுவதற்காக ஒருவர், [illegible]

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

தயாரித்து, முஸ்லிம் சகோதரர்களைத் திரட்டினார். அந்த மவ்லிதைக் கண்ணியப்படுத்துவதற்காக நறுமணம் பூசினார். புத்தாடை புனைந்தார். தன்னையும், சபையையும் அலங்கரித்தார். விளக்குகள் ஏற்றினாரென்றால், அத்தகைய வரை மறுமை நாளில் நபிமார்கள் அடங்கிய முதல் பிரிவுடன் அல்லாஹ் எழுப்புவான். மேலும், அவர், நல்லோரின் ஆன்மா ஒதுங்கும் இல்லிய்யீன் திருத்தலத்தின் உயர்நிலையில் இருப்பார்'' என்றும், ''நாயகம் (ஸல்) அவர்கள் மீது மவ்லிது நிகழ்ச்சி நடத்துவதற்காக ஒருவர் தங்கம் அல்லது வெள்ளி நாணயங்களைத் தனியாக உண்டியலில் சேமித்து, மவ்லிது நிகழ்ச்சி நடத்தியபின், எஞ்சிய நாணயங்களைத் தன்வசம் ஏற்கனவேயிருக்கும் நாணயங்களுடன் கலந்து விட்டாரெனில், இந்த நாணயங்களின் 'பரக்கத்' ஏனைய நாணயங்களிலும் ஏற்பட்டு விட்டது. இந்த நாணயம் வைத்திருப்பவர் வறுமை நிலை அடைய மாட்டார். மாநபி (ஸல்) மவ்லிதின் பரக்கத்தினால் இவரின் கை நாணயங்களை விட்டுக் காலியாகாது'' என்றும், மாமேதை மஃறூபுல் கர்கீ (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''நாயகம் (ஸல்) அவர்களின் மவ்லிதுக்காக ஒருவர் தனியிடத்தை ஒதுக்கி, முஸ்லிம் சகோதரர்களைத் திரட்டி, உணவு தயாரித்து வழங்கி, உபகாரம் பல செய்து, மாநபி (ஸல்) மவ்லிது ஓதுவதற்குக் காரணமாக இருந்தால் – இத்தகையவரை மறுமை நாளில் மெய்யடியார்கள் ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் குழுவினருடன், அல்லாஹு எழுப்புவான். மேலும் 'நயீம்' எனும் சுவனத்தில் மறுமையில் இவர் இருப்பார்'' என்று, எமன்நாட்டு மாமேதை இமாம் யாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''எந்த இடத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மவ்லிது ஓதப்படுகிறதோ, அந்த இடத்தை ஒருவர் நாடினால், நிச்சயமாக அவர், சுவனப்பூங்காக்களில் இருந்தும் ஒரு பூங்காவை நாடிவிட்டார். ஏனெனில், எந்தல்

நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பினாலே தவிர, அவ்விடத்தை அவர், நாடியிருக்கவில்லை. என்னையொருவர் நேசித்தால் அவர், என்னுடனே சுவனத்தில் இருப்பார்'' என்பது, நபிமொழியாகும்'' என்று மாமேதை ஸரியுஸ் ஸிக்திய்யி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''எந்தவொரு வீட்டிலோ, பள்ளி வாசலிலோ மஹல்லாவிலோ மாநபி (ஸல்) மவ்லிது ஓதப்பட்டால் அவ்விடத்தைச் சார்ந்தவர்களை மலக்குகள் சூழ்ந்தே தவிர இல்லை. அவர்களைத் தன் கருணையினால் அல்லாஹ் சூழ வைத்து விடுகிறான்'' என்று மாமேதை இமாம் ஜலாலுத்தீனுஸ்ஸுயூத்தீ (ரஹ்) அவர்கள் தமது 'அல்வஸாயில் ஃபீ ஷறஹிஷ் ஷமாயில்' என்ற கிதாபில் கூறியுள்ளார்கள்.

மவ்லிது ஓதும் அமலை அரசின் பெருவிழாக்களில் முக்கியம் வாய்ந்த ஒன்றாக முதலில் ஏற்படுத்தியவர், தலை சிறந்த - வள்ளல் தன்மை மிக்க - அரசர்களில் ஒருவரான 'அல்மலிக்குல் முழஃப்ஃபர் அபூஸயீது கவ்கப்ரீ-பின்-ஸைனுத்தீன் அலிய்யிப்னு புக்தகீன்' என்பவர் ஆவார்.

இந்த மன்னர் இனிய பல பொதுநலச் சேவைகள் செய்தவர் என்று ஸுயூத்தி இமாம் அவர்கள் கூறியுள்ளார்கள். 'இந்த மன்னர், ரபியுல் அவ்வலில், மாநபி (ஸல்) மவ்லிது நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, அதில் பங்கேற்க, மாபெரும் கூட்டத்தை திரட்டி வந்தார்' என்றும், 'இந்த மன்னர் வீரமும் வியத்தகு ஞானமும், கொடைத் தன்மையும் கொண்டவர்' என்றும் இப்னு கதீர்' அவர்கள் எழுதிய வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மாநபி (ஸல்) மவ்லிதையொட்டி, இந்த மன்னர் ஏற்பாடு செய்த விருந்து வைபவத்தில் ஒருமுறை பங்கேற்றவர்களில் ஒருவர், கூறுகிறார். 'அவ்விருந்தில் சமைக்கப்பட்ட ஐயாயிரம் ஆட்டுத் தலைகள், பத்தாயிரம் கோழிகள், ஒரு இலட்சம் வெண்ணெய்ப் பலகாரங்கள், முப்பதாயிரம்

PDF Compression, OCR, Web Optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

ஹல்வா தட்டைகள் இருந்தன. அந்த விருந்தில் ஞானிகள் மற்றும் ஸூஃபிகளின் தலைவர்களும் பங்கேற்றனர். அவர்களுக்கெல்லாம் மன்னர், பொன்னாடைகள் போர்த்திக் கவுரவித்தார். மேலும், அன்பளிப்புகளும் வழங்கினார். லுஹர் முதல் சுபுஹ்வரை ஸூஃபிகளுக்காகவே மன்னர் தனியாக ஒரு இசையரங்கம் ஏற்பாடு செய்தார். அதில் பாடப்பட்ட பேரின்பப் பாடல் கேட்டு குதித்துக் களித்த ஸூஃபிகளுடன் சேர்ந்து மன்னரும் பக்திப் பரவசத்துடன் ஆடினார். ஆண்டு தோறும் மூன்று இலட்சம் ரூபாயை மன்னர் முழஃஃப்ஃபர், மாநபி (ஸல்) மவ்லிதுக்காகவே செலவிட்டார்.

அல்ஹாஃபிழ் அபுல் கத்தாப் இப்னு திஹ்யா என்பவரின் வரலாற்றில், 'இப்னு கல்கான்' கூறுகிறார். 'அபுல் கத்தாப்' என்பவர், உலமாக்களிடையே தலைசிறந்தவர்களில் ஒருவரும் புகழ்மிக்க மனிதர்களில் ஒருவருமாவார். இவர் ஒரு முறை 'மக்ரிப்' நாட்டிலிருந்து புறப்பட்டு, சிரியா, ஈராக் ஆகிய நாடுகளை நோக்கி வந்தார். அப்போது ஹிஜ்ரீ 604-ம் ஆண்டு, 'இர்பல்' நாட்டுக்குள் புகுந்தார். அங்கு இர்பல் மன்னர், முழஃஃப்பறுத்தீன் இப்னு ஸைனுத்தீன் என்பவரை சந்தித்தார். அம்மன்னர், மாநபி (ஸல்) மவ்லிதுக்குச் செய்யும் மரியாதையை அறிந்து, அவருக்காக "அத்தன்வீறு ஃபீ மவ்லிதில் பஷீரி வன்னதீர்' என்னும் பெயரில், மாநபி (ஸல்) மவ்லிதினை எழுதி அவரிடம் படித்துக் காட்டினார். உடனே மன்னர் இந்த மேதைக்கு ஆயிரம் தீனார் பரிசளித்தார்.

புகழ்மிக்க வரலாற்றாசிரியர்கள், இர்பல் மன்னரின் வரலாற்றையும், அவர் மவ்லிது மஜ்லிஸ் நடத்திய தனிச்சிறப்பையும் குறிப்பிட்டு இர்பல் மன்னர் அபுல்முழஃஃபஃஃபரைப் போற்றியுள்ளார்கள். இந்த வரலாற்றாசிரியர்களில் 'அல்ஹாபிழ் இப்னுல் ஜவ்ஸி', 'இப்னுல் இமாதுல் ஹன்பலிய்யீ', 'இமாம் ஸக்காவீ', 'இப்னு கல்கான்', 'அல்ஹாபிழ் இப்னுல் கதீர்' போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

# நபியருள் வேண்டல் பாமாலை!

**யாஷஃபீயே! யாஷஹீதே! யாறசூலல்லாஹ்!**
**யாஹாமீம்! யாதாஹா! யாநபியல்லாஹ்!**
**யாஸீனே! தாஸீனே! யாஹபீபல்லாஹ்!**
**யாமக்கீ! யாமதனீ யப்ன அப்தில்லாஹ்!**

கண்மணியே! விண்மணியே! காத்தமுன்னபியே!
காலமெல்லாம் புகழ்மணக்கும் கருணையின் நபியே!
பொன்மணியே! நன்மணியே! புத்தொளி நபியே!
போற்றுகிறேன் தங்களையான், உத்தம நபியே!

தஞ்சம் வேண்டி தங்களை நான் கெஞ்சுகின்றேனே
- இன்னும்
தாமிதமேன் ஆருயிரே! எம்பெருமானே!
- இங்கு
விஞ்சுகின்ற அன்பில் நெஞ்சம் வாடுறேன்
- அந்த
நெஞ்சம் உருகி, அழுதழுது தேடுறேன்!
(யாறசூலல்லாஹ், யாஹபீபல்லாஹ்)

கோடிகோடி நேசர்களின் பொன்மனங்களில்
கோலமுடன் வீற்றிருக்கும் கோமான் நபியே!
பாடிப்பாடி போற்றுகின்ற நாவுகளெல்லாம்
பசுமையுடன் மணம்பரப்பும் பயகம்பர் நீரே!
நாடிநரம்பு எலும்புகளில் உயிரணுக்களில்
நாளெல்லாம் வாழுகின்ற நாயனின் தூதே!
தேடித்தேடி அலைகின்றேனே நாளுமே! எமை
தேற்றத்தாங்கள் இல்லையென்றால் தேம்பிடுவேனே!
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ)

ஆதம்முதல் ஈஸாவரை அனைத்து நபிகளும்
அவரவர்தம் நிலையை எண்ணி அழுது புலம்பவே
நாதியற்ற மானிடர்கள் நரகத்தையெண்ணி,
நடுங்குகின்ற கியாமத்தென்னும் மறுமை நாளிலே
ஆதரவாய் அடைக்கலமாய் உம்மத்தையெல்லாம்
அரவணைத்துக் காப்பதுங்கள் அன்பு உள்ளமே!
வேதநபி நாயகமே! தாங்களில்லாமல்
வேறுதுணை அந்நாளில் யாரெமக்குண்டு?
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்)

எங்கள் நபியே! மஹ்ஷரிலே லிவாவுல்ஹம்தெனும்
இனியகொடியின் நிழலில் எம்மை ஒதுங்கிடச் செய்வீர்!
தங்க நபியே! தங்கள் ஹவ்ளுல் கவ்ஸரில் நாங்கள்
தண்ணீர் பருகி தாகம் தீர்க்கத் தயவுகாட்டுங்கள்!

வெங்கொடுமை நரகத்தீயில் வீழ்ந்திடாமலே
வெற்றிமிகும் ஷபாஅத்தைத் தந்தருள்வீரே!
மங்களங்கள் தங்குமெழில் சொர்க்கப்பதியிலே
மகாமுல்மவும் மூதைக்காணும்
மக்கத்துநபியே!
(யாறசூலல்லாஹ் யாஹபீபல்லாஹ்)

*குறிப்பு: இப்பாடல், இந்நூலாசிரியரான ஆலிம் கவிஞர் தேங்கை மிஸ்பாஹியால், இயற்றப்பட்டு இசை முரசு, ஹாஜி நாகூர் E.M. ஹனீபா அவர்களால் ஒலிப்பதிவு நாடாவில் பாடப்பட்டுள்ளது.*



# مَوْلِدُ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ

للشّيخ الخطيب محمّد المدني وقيل لحجة الاسلام
الغزّالي رحمهما الله تعالى

## سُبْحَانَ مَوْلِدُ

**மவ்லிது ஓதுவதற்கு முன் ஓத வேண்டிய உயர்ந்த வாசகங்கள்**

اِلٰى حَضْرَةِ النَّبِيِّ الْمُصْطَفٰى ۝ وَالرَّسُوْلِ الْمُجْتَبٰى ۝
وَالْحَبِيْبِ الْمُقْتَفٰى ۝ سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدِنِ الْمُرْتَضٰى ۝
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ۝ وَشَرَّفَ وَكَرَّمَ ۝ وَمَجَّدَ وَعَظَّمَ

தெளிவாக்கப்பட்டவரும். தேர்வு செய்யப்பட்ட திருத்தூதரும் பின்பற்றப்படும் நேசரும், எங்களின் தலைவரும், எஜமானரும் திருப்தியாக்கப்பட்டவருமான நபி முஹம்மது (ஸல்) அவர்களின் புனித ஆன்மாவின் திருச்சன்னிதானம் நோக்கி-யான் ஓதும் வேத வசனங்களின் நன்மையை, அர்ப்பணிக்கிறேன். அல்லாஹ், நபி அவர்களைச் சிறப்பித்துக் கண்ணியப்படுத்தித் தலைமைப்படுத்தி மகத்துவமாக்குவானாக!

اَلْفَاتِحَةَ لَقَدْ جَاءَكُمْ رَسُوْلٌ مِّنْ اَنْفُسِكُمْ عَزِيْزٌ
عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيْصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِيْنَ رَؤُفٌ
رَّحِيْمٌ فَاِنْ تَوَلَّوْا فَقُلْ حَسْبِيَ اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ
عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ ۝

அருள் மறை குர்ஆனின் அன்னையான அல்பாத்திஹா சூரா ஓத வேண்டும். பின்னர் ‘‘லகத் ஜாஅகும்’’எனத் தொடரும் வசனம் ஓதவேண்டும்.-‘‘நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு திருத்தூதர் உங்களிடம் வந்துவிட்டார். நீங்கள் சிரமப்படுவது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. உங்களின் நல்வழி மீது அவர் பேராசை மிக்கவர். முஃமின்களிடம் கனிவும், கருணையும் மிக்கவர். எனவே, நபியே! அந்த மக்கள் உங்களைப் புறக்கணித்து விட்டால் அதற்காக கவலைப் படாமல் - ‘‘என் அல்லாஹ் எனக்குப் போதுமாகி விட்டான். வணக்கத்திற்குரியவர் அவனன்றி எவருமில்லை. அவனி டத்தில் என்னை ஒப்படைத்து விட்டேன். அவன் மகத்தான அர்ஷின் அதிபதி ஆவான்’’ என்று கூறுவீராக! என்பது ‘‘லகத் ஜாஅகும்’’ வசனத்தின் பொருளாகும்.

مَا كَانَ مُحَمَّدٌ اَبَا اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ
رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَيْءٍ
عَلِيْمًا ۝ اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ
يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ۝

அடுத்து ஓதப்படும் - ‘‘மாகான முஹம்மதுன்’’ எனும் வசனத்தின் பொருள்:- ‘‘(முஹம்மது நபி (ஸல்) அவர்கள், உங்களில் எந்தவொரு ஆண்மகனுக்கும் தந்தையாக

இருக்கவில்லை. ஆனால் அவர்கள், அல்லாஹ்வின் திருத் தூதரும், நபிமார்களின் முத்திரையுமாவார்கள். அனைத்து வஸ்துக்களைப் பற்றியும் அல்லாஹ் மிக அறிந்தவனாக இருக்கிறான்.''

''இன்னல்லாஹ வ மலாயிகதஹு'' எனத் தொடங்கும் வசனத்தின் பொருள்:- ''நிச்சயமாக அல்லாஹ்வும் அவன் மலக்குகளும் நபி (ஸல்) மீது ஸலவாத்துச் சொல்கின்றனர். எனவே, இறை நம்பிக்கையாளர்களே! நீங்களும் இந்த நன்னபி மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்!'

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا ۝ لِّيَغْفِرَ لَكَ اللّٰهُ مَا
تَقَدَّمَ مِنْ ذَنْۢبِكَ وَمَا تَاَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهٗ عَلَيْكَ وَ
يَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيْمًا ۝ وَّيَنْصُرَكَ اللّٰهُ نَصْرًا عَزِيْزًا ۝

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன்:- தொடக்கத்தில் ஓதப்படும், ''இன்னா பதஹ்னா,'' எனத் தொடரும் திருவசனத்தின் பொருள்:- ''நபியே! உங்களின் பிழையிலிருந்து முந்தியதையும், பிந்தியதையும் உங்களுக் காக அல்லாஹ் மன்னிப்பதற்காகவும், உங்கள் மீது தன்னுடைய அருட்கொடையைப் பூரணமாக்குவதற்காகவும், நேரான வழியை உங்களுக்குக் காட்டுவதற்காகவும், மகத்தான உதவியாக உங்களுக்கு அல்லாஹ் உதவு வதற்காகவும்- நிச்சயமாக நாம் உங்களுக்கு பகிரங்கமான நன்வெற்றியைத் தந்தோம்''.

## ஸலாம் பைத்து

اَلسَّلَامُ عَلَيْكَ زَيْنَ الْاَنْبِيَآءِ

اَلسَّلَامُ عَلَيْكَ اَتْقَى الْاَتْقِيَآءِ

நபிமார்களின் அலங்காரமே! நும் மீது ஸலாம் !
பக்தர்களில் மிக உயர்ந்த பக்தரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ اَصْفَى الْاَصْفِيَآءِ

اَلسَّلَامُ عَلَيْكَ اَزْكَى الْاَزْكِيَآءِ

தெளிந்தவர்களில் மிகத்தெளிந்தவரே! நும் மீது ஸலாம்!
தூயவர்களில் மிகத் தூயவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ مِنْ رَّبِّ السَّمَآءِ

اَلسَّلَامُ عَلَيْكَ دَآئِبًا بِلَا انْقِضَآءِ

வானத்தின் நாயனிலிருந்து நும் மீது ஸலாம்!
முடிவில்லாமல் வழக்கமாக -நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا حُسْنًا تَفَرَّدْ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا كَهْفًا وَّمَقْصَدْ

தனித்துவிட்ட பேரழகே! நும் மீது ஸலாம்!
பாதுகாப்புக் குகையே! எங்கள் நோக்கமே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ اَحْمَدُ يَا مُحَمَّدُ
اَلسَّلَامُ عَلَيْكَ طٰهٰ يَا مُمَجَّدُ

புகழ் மிகுந்தவரே! புகழப்பட்டவரே! நும் மீது ஸலாம்!
தாஹா நபியே! தலைமைப் பதவியாக்கப்பட்டவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ اَحْمَدُ يَا حَبِيْبِيْ
اَلسَّلَامُ عَلَيْكَ طٰهٰ يَا طَبِيْبِيْ

புகழ் மிகுந்தவரே! என் நேசரே! நும் மீது ஸலாம்!
தா்ஹா நபியே! என் பிணி தீர்க்கும் மருத்துவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا مِسْكًا بِطِيْبِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا عَوْنَ الْغَرِيْبِ

நறுமணம் கமழும் கஸ்தூரியே! நும் மீது ஸலாம்!
ஏழைகளின் பேருதவியே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا مَاحِيَ الذُّنُوْبِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا جَالِيَ الْكُرُوْبِ

பாவங்களை அழிப்பவரே! நும் மீது ஸலாம்!
கவலைகளை அகற்றுபவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا هَادِيَ الْهُدَاةِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا ذُخْرَ الْعُصَاةِ

வழிகாட்டிகளின் வழிகாட்டியே! நும் மீது ஸலாம்!
பாவிகளின் சேமிப்பு நிதியே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا حُسْنَ الصِّفَاتِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا ذَا الْمُعْجِزَاتِ

தன்மைகளின் பேரழகே! நும் மீது ஸலாம்!
அற்புதங்கள் உடையவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَا دَاعِيَ الْفَلَاحِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا رُكْنَ الصَّلَاحِ

வெற்றியின் அழைப்பாளரே! நும் மீது ஸலாம்!
நன்மையின் தூணே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَانُوْرَ الصَّبَاحِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَازَيْنَ الْمِلَاحِ

விடியற்காலை வெளிச்சமே! நும் மீது ஸலாம்!
இன் சொல்லாளர்களின் அலங்காரமே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَاخَيْرَ الْاَنَامِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَابَدْرَ التَّمَامِ

படைப்பினத்தில் சிறந்தவரே! நும் மீது ஸலாம்!
பூரண முழுமதியே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَيْكَ يَانُوْرَ الظَّلَامِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَامُبْرِئَ السَّقَامِ

இருட்டுகளின் பேரொளியே! நும் மீது ஸலாம்!
நோய்களைக் குணமாக்குபவரே! நும் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَى الْمُظَلَّلِ بِالْغَمَامَةِ
اَلسَّلَامُ عَلَى الْمُشَفَّعِ فِى الْقِيَامَةِ

மேகத்தால் நிழலிடப்பட்டவர் மீது ஸலாம்!
மறுமை நாளில் மன்றாட வைக்கப்படுபவர் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَى الْمُتَوَّجِ بِالْكَرَامَةِ
اَلسَّلَامُ عَلَى الْمُبَشَّرِ بِالسَّلَامَةِ

கண்ணியத்தைக் கொண்டு மகுடம் சூட்டப்பட்டவர் மீது ஸலாம்!

ஈடேற்றம் உண்டென நற்செய்தி சொல்லப்பட்டவர் மீது ஸலாம்!

اَلسَّلَامُ عَلَى الْخَلِيْفَةِ مِنْكَ فِيْنَا
اَبِيْ بَكْرٍ مُّبِيْدِ الْجَاحِدِيْنَا

நிராகரிப்பாளர்களை அழிப்பவரும் (நபியே) தங்களிலிருந்து எங்களிடை பிரதிநிதியாக அமைந்தவருமான அபூபக்கர் (ரழி) மீது ஸலாம்!

كَذَا عُمَرٍ اَمِيْرِ الْمُؤْمِنِيْنَا
وَذِى النُّوْرَيْنِ رَاْسِ النَّاسِكِيْنَا

இவ்வாறே இறைநம்பிக்கையாளர்களின் தளபதியாம் உமர் (ரழி) மீதும், வணக்கசாலிகளின் தலைவரான இரட்டை ஒளியுடையார் உதுமான் (ரழி) மீதும் ஸலாம்!

كَذَاكَ عَلِيِّ نِ السَّامِيْ يَقِيْنَا
اَلسَّلَامُ عَلٰى صَحَابِكَ اَجْمَعِيْنَا

இவ்வாறே உறுதியால் உயர்ந்த உத்தமர் அலி (ரழி) மீதும் நபியே! தங்கள் தோழர்கள் அனைவர்கள் மீதும் ஸலாம்!

وَاٰلِكَ كُلِّهِمْ وَالتَّابِعِيْنَا
وَتَابِعِهِمْ وَتَابِعِ تَابِعِيْنَا

மேலும், தங்கள் குடும்பத்தார்கள் அனைவர்கள் மீதும் தங்கள் தோழர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் அவ்வாறு பின் பற்றியவர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றியவர்கள் மீதும் ஸலாம்!

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

سُبْحَانَ الْعَزِيْزِ الْغَفَّارِ ۞ اَلْحَلِيْمِ السَّتَّارِ ۞ اَلْكَرِيْمِ
الْجَبَّارِ ۞ اَلْوَاحِدِ الْقَهَّارِ ۞ ذِى الْكِبْرِيَاءِ وَالْعَظْمَةِ
وَالْجَلَالِ ۞ وَالْبَهَاءِ وَالْقُدْرَةِ وَالْكَمَالِ ۞ اَلصَّمَدِ
الْبَدِيْعِ الَّذِيْ اِخْتَارَ اِظْهَارَ اٰثَارِ اَسْرَارِ اَنْوَارِ ۞
مَصُوْنِ مَكْنُوْنِ دُرَّةِ تَاجِ مَجْدِ النُّبُوَّةِ وَالْفَخَارِ ۞
بِاِيْجَادِ طَلْعَةِ نَبِيِّهٖ ۞ مُحَمَّدِ الْمُخْتَارِ ۞

وَبَسَطَ مَوَآئِدَ عَوَآئِدِ زَوَائِدِ فَوَائِدِ قَلَائِدِ الْمِنَنِ وَالْاِسْتِبْصَارِ ۝ فِيْ اَعْنَاقِ اُوْلِی الْاَبْصَارِ ۝

وَاسْتَخْرَجَ جَوَاهِرَ زَوَاهِرِ ظَوَاهِرِ بَوَاهِرِ قَوَاهِرِ الْاِنْذَارِ ۝ بِاِظْهَارِ بُرْهَانِ اِنْسَانٍ مَنْ اَشْرَقَتْ بِاَنْوَارِهِ الْاَقْطَارُ ۝

وَبَيَّنَ حَقَآئِقَ دَقَائِقِ رَقَائِقِ طَرَآئِقِ سُبُلِ الْهُدٰى وَالْاَنْوَارِ بِجَمَالِ كَمَالِ الْهَادِيْ اِلٰى دَارِ الْقَرَارِ ۝

وَكَمَّلَ السُّعُوْدَ ۝ بِاَشْرَفِ مَوْلُوْدٍ ۝ وَشَرَّفَ بِهِ الْاٰبَاءَ وَالْجُدُوْدَ ۝ وَاَخَذَ لَهُ الْعُهُوْدَ ۝ عَلٰى خَوَاصِّ الْجُنُوْدِ ۝ فِيْ سَالِفِ الدُّهُوْرِ وَالْاَعْصَارِ ۝

نَبِيٌّ رَّحِمَ اللّٰهُ بِهِ الْعَالَمَ ۝ وَجَعَلَهُ لِلْاَنْبِيَآءِ وَ الرُّسُلِ الْكِرَامِ خَاتَمَ ۝ وَ وَجَبَتْ لَهُ النُّبُوَّةُ قَبْلَ خَلْقِ اٰدَمَ ۝ اَنْعَمَ اللّٰهُ بِهِ عَلَيْنَا غَايَةَ الْاِنْعَامِ ۝

وَاَوْجَدَ نُوْرَهُ قَبْلَ خَلْقِ اٰدَمَ بِاَلْفَيْ عَامٍ ۝ وَكَانَ نُوْرُهُ يُسَبِّحُ اللّٰهَ الْوَاحِدَ الْقَهَّارَ ۝ وَتُسَبِّحُ بِتَسْبِيْحِهِ الْمَلٰئِكَةُ الْاَبْرَارُ ۝ فَلَمَّا خَلَقَ اللّٰهُ تَعَالٰى اٰدَمَ عَلَيْهِ السَّلَامُ اِنْتَقَلَ ذَالِكَ النُّوْرُ اِلَيْهِ وَصَارَ مَحْفُوْظًا لَدَيْهِ ۝

وَرُوِيَ اَنَّ اٰدَمَ عَلَيْهِ السَّلَامُ لَمَّا فَتَحَ عَيْنَيْهِ
رَاٰى عَلٰى بَابِ الْجَنَّةِ مَكْتُوْبًا لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ
مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ فَقَالَ يَارَبِّ مَنْ هٰذَا الَّذِيْ قَرَنْتَ
اسْمَهٗ بِاسْمِكَ ○ فَقَالَ اللّٰهُ تَبَارَكَ وَتَعَالٰى يَا اٰدَمُ
هٰذَا مِنْ وُلْدِكَ ○ اَبْعَثُهٗ اٰخِرَ الزَّمَانِ وَلَوْ لَاهُ مَا
خَلَقْتُكَ ○ ثُمَّ لَمَّا هَبَطَ اِلَى الْاَرْضِ قَالَ يَارَبِّ بِحَقِّ
هٰذَا الْوَلَدِ اغْفِرْ لِهٰذَا الْوَالِدِ فَتَوَسَّلَ بِهٖ اٰدَمُ اِلَى
اللّٰهِ لَجَا ○ فَرَجًا مِنْ اَمْرِهٖ فَرَجًا فَجَعَلَ اللّٰهُ لَهٗ
مَخْرَجًا ○
وَكَانَ نُوْرُ نَبِيِّنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○
فِيْ صُلْبِ نُوْحٍ فِي السَّفِيْنَةِ فَسَلِمَتْ وَقَطَعَتْ بِحَارًا وَّلُجَجًا
وَكَانَ نُوْرُهٗ فِيْ صُلْبِ اِبْرَاهِيْمَ عَلَيْهِ السَّلَامُ فَصَارَتِ
النَّارُ لَهٗ بَرْدًا وَّسَلَامًا وَّبِبَرَكَتِهٖ نَجَا ○ ثُمَّ لَمْ يَزَلْ
يُنْقَلُ مِنَ الْاَصْلَابِ الْكَرِيْمَةِ الْفَاخِرَةِ اِلَى الْاَرْحَامِ الزَّكِيَّةِ
الطَّاهِرَةِ اِلٰى اَنْ اَخْرَجَهُ اللّٰهُ مِنْ بَيْنِ اَبَوَيْهِ كَامِلًا مُّكَمَّلًا
مُعَظَّمًا مُبَجَّلًا ○ مُشَرَّفًا مُّفَضَّلًا اٰخِرَ الرُّسُلِ اَوَّلًا ○
وَالْاَحْبَارُ بِهٖ اَخْبَرَتْ ○ وَالرُّهْبَانُ بِهٖ بَشَّرَتْ ○
وَالْهَوَاتِفُ بِذِكْرِهٖ هَتَفَتْ ○ وَالْاَقْطَارُ مِنْ اَنْوَارِهٖ تَشَرَّقَتْ ○

compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompr

وَظَهَرَتْ قَبْلَ مَوْلِدِهِ الْعَجَائِبُ ○ وَاشْتَهَرَتِ الْغَرَائِبُ ○
وَرُمِيَتِ الشَّيَاطِيْنُ مِنَ السَّمَاءِ بِالشُّهُبِ الثَّوَاقِبِ ○
وَانْبَلَجَ صُبْحُ الْحَقِّ وَبَطَلَ مَا كَانَ يَعْمَلُهُ كُلُّ كَاذِبٍ ○

فَلَمَّا حَمَلَتْ بِهِ أُمُّهُ آمِنَةُ ○ كَانَتْ مِنْ مَّشَقَّةِ الْحَمْلِ
آمِنَةً ○ وَلَمْ تَجِدْ لِحَمْلِهِ ثِقَلًا وَّلَا أَلَمًا ○ وَكَيْفَ
لَا وَهِيَ حَمَلَتْ بِمَنْ شَرَّفَ الْأَرْضَ وَالسَّمَا ○ ثُمَّ لَمَّا
آنَ أَوَانُ ظُهُوْرِهِ وَإِشْرَاقُ الْكَوْنِ بِنُوْرِهِ ○ وَمَضٰى
لَهَا مِنْ حَمْلِهَا مُدَّةٌ يَّسِيْرَةٌ ○ وَعَيْنُهَا بِبَرَكَاتِهِ
قَرِيْرَةٌ ○ أَتَتْهَا آتٍ فِي الْمَنَامِ ○ وَقَالَ لَهَا
يَا آمِنَةُ إِنَّكِ قَدْ حَمَلْتِ بِخَيْرِ الْأَنَامِ شَمْسِ الْفَلَاحِ
وَالْهُدٰى ○ فَإِذَا وَضَعْتِهِ فَسَمِّيْهِ مُحَمَّدًا ○

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்பாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன்.

## முதல் ஹிக்காயத்

தன்னுடைய நபியாகிய, தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் உதயத்தை உருவாக்கியதன் மூலமாக-பெருமை, நபித்துவம் ஆகியவற்றிலுள்ள தலைமைப் பதவியின் மகுடத்திலுள்ள. முத்தையும், அப்பதவியின் மறைத்துப் பாதுகாக்கப்பட்ட ஒளிகளையும், அப்பதவியின் இரகசியங்களையும், அந்தப் பதவியின் தடயங்களையும்

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

வெளிப்படுத்துவதைத் தேர்ந்தெடுத்தவனாகிய-நூதனப் படைப்பாளனும் எவ்விதத் தேவையுமற்றவனும், முழுமையும் சக்தியும் பேரொளியும் உடையவனும், அடக்கியாள்பவனும் ஏகனும், சர்வாதிகாரியும், கண்ணியம் நிறைந்தவனும், அடியார் குறைகளை மிகவும் மறைப்பவனும், மிகப் பெரிய பொறுமையாளனும், அளப்பரிய மன்னிப்பாளனும், ஆற்றல் மிக்கவனுமாகிய அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்துகின்றேன்.

மேலும், அல்லாஹ்வாகிய அவன், அகப்பார்வை மற்றும் நன்மைகளின் மாலைகளையும், பயன்களையும், மிகுதியானவற்றையும், பலன்களையும், உணவு விரிப்புகளையும் அகமியப் பார்வை உடையவர்களின் கழுத்துக்களில் பரப்பி வைத்தான்.

அண்ட கோடிகளின் நாலாப் பக்கங்களும் யாருடைய ஒளிகளினால் இலங்கியதோ, அத்தகைய மாமனிதரின் மகத்தான அத்தாட்சிகளை வெளிப்படுத்தியதின் மூலமாக எல்லாம் வல்ல இறைவன் தன்னைக் குறித்துள்ள எச்சரிக்கை யூட்டுதலின் சிகரங்களையும் ஒளிகளையும், புறத்தோற்றங் களையும், மனங்கவர் அழகுகளையும், நவமா மணிகளையும் வெளியேறச் செய்தான்.

மேலும் நிலையான குடியிருப்புக்குரிய சுவன வீட்டின் பால் வழிகாட்டும் வள்ளல் நபி (ஸல்) அவர்களின் முழுமையின் அழகு மூலமாக - ஒளிகள் மற்றும் நேர்வழிப் பாதைகளின் மார்க்கங்களையும், மென்மைகளையும், நுட்பங் களையும், அகமியங்களையும் அந்த இறைவன் விவரித்தான்.

பெற்றெடுக்கப்பட்டவர்களிலேயே மிகச் சிறந்தவரின் மூலமாக அந்த இறைவன் பாக்கியங்களை முழுமைப் படுத்தினான். அவர்களின் காரணத்தால் முன்னோர்களையும், தலைமுறைப் பாட்டனார்களையும் அந்த இறைவன் சிறப்பித்தான். மேலும் அந்த இறைவன், தன்னுடைய படைகளிலேயே குறிப்பாக்கப்பட்ட சிறப்புப் படையாகத் திகழும்

நபிமார்களிடம் கடந்துவிட்ட காலங்களிலும் யுகங்களிலும் இந்த நபியவர்களுக்காக ஒப்பந்தங்களை எடுத்துக் கொண்டான்.

அவர்கள் நபியாவார்கள்; அவர்களின் மூலமாக அகிலத் திற்கு அல்லாஹ் அருள் புரிந்தான். அவர்களை நபிமார் களுக்கும் சங்கையான தூதர்களுக்கும் முத்திரையாக்கினான். அவர்களுக்குரிய நபித்துவத்தை, ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்கு முன்னரே அல்லாஹ் அவசிய மாக்கி விட்டான். அவர்களைக் கொண்டு நம்மீது அல்லாஹ் அருள்புரிதலின் எல்லைவரை அருள்புரிந்தான்.

அவர்களின் ஒளியை-ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர் களைப் படைப்பதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் உண்டாக்கி விட்டான். அந்த நேரம், அவர் களுடைய ஒளி, ஏகனும் அடக்கியாள்பவனுமாகிய அல்லாஹ் வைத் 'தஸ்பீஹ்' செய்து கொண்டிருந்தது. உத்தமர்களான மலக்குகளும் அந்த ஒளியின் தஸ்பீஹுடன் சேர்ந்து அல்லாஹுவை தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தனர். எனவே, ஆதம் நபி (அலை) அவர்களை அல்லாஹ் படைத்த போது,இந்த ஒளி ஆதம் நபி (அலை) அவர்களை நோக்கி இடம்பெயர்ந்தது. பின்னர் அது, ஆதம் நபி (அலை) அவர் களிடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட நிலையிலாகி விட்டது

தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக ஹஜ்ரத் ஆதம் நபி (அலை) அவர்கள் படைக்கப்பட்டவுடன், அவர்கள் தன் இருகண்களையும் திறந்த போது, சுவனத்தின் வாசலின் மீது- "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி"- எனும் திருவசனம் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்ததும் அவர்கள் இறைவனிடம், "இறைவா! உன் திருப்பெயருடன் யாருடைய பெயரை நீ இணைத்து விட்டாயோ அத்தகையவர் யார்?" எனக் கேட்டார்கள். அதற்கு மேன்மைக்குரிய மேலான

அல்லாஹ் பதிலளிக்கையில், ''ஆதமே!'' இவர், உமது சந்ததியில் உள்ளவராவார். இறுதிக்காலத்தில் இவரை நான் நபியாக அனுப்புவேன். இவர் இல்லை எனில் உம்மை நான் படைத்திருக்கமாட்டேன்,'' என்று குறிப்பிட்டான்.

பின்னர் பூமியை நோக்கி ஆதம் நபி (அலை) அவர்கள் இறங்கியபோது, ''இறைவா! அந்தப் பிள்ளையின் பொருட்டால் இந்தத் தந்தையை மன்னிப்பாயாக!'' எனக் கேட்டார்கள். இவ்வாறு இவர்களைக் கொண்டு, ஹஜ்ரத் ஆதம் நபி (அலை) அவர்கள் 'வஸீலா' தேடி அல்லாஹ்வின் பால் அடைக்கலம் நாடி, 'தனக்கு மன்னிப்பு கிடைக்கும்' என்ற மகிழ்ச்சியான விஷயத்தை எதிர்பார்த்தார்கள். இதனால் ஆதம் நபி (அலை) அவர்களுக்கு துன்பத்திலிருந்து வெளியேறு 'பிடத்தை அல்லாஹ் அமைத்துக் கொடுத்தான்.

மேலும், நமது நபி முஹம்மது (ஸல்) அவர்களின் ஒளி, கப்பலில் இருந்த நூஹ் நபி (அலை) அவர்களின் முதுகுத் தண்டில் இருந்தது. எனவே, அந்தக் கப்பல் பாதுகாப்பைப் பெற்று கடல்களையும், அலைகளையும் கடந்து சென்றது. மேலும் அவர்களின் ஒளி இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் முதுகுத்தண்டில் இருந்தது. எனவே நெருப்பு அவர்களுக்குக் குளிர்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் மாறி விட்டது. அவ்வொளியின் பொருட்டினால் அவர்கள் ஈடேற்றம் பெற்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களை முழுமையானவராகவும், முழுமை யாக்கப்பட்டவராகவும் கண்ணியமாக்கப்பட்டவராகவும், கவுரவமாக்கப்பட்டவராக வும், சிறப்பாக்கப்பட்டவராகவும், மேன்மையாக்கப்பட்ட வராகவும், திருத் தூதர்களுக்கெல்லாம் முடிவானவராகவும், முதலானவராகவும், நபி (ஸல்) அவர்களின் தாய் தந்தை யருக்கு மத்தியில் இருந்து அவர்களை அல்லாஹ் வெளி யேறச் செய்யும் வரை அவர்களின் ஒளி பெருமைக்குரிய கண்ணியமான முதுகுத் தண்டுகளிலிருந்து களங்கமற்ற தூய்மையான கருவறைகளை நோக்கி நகர்ந்து கொண்டே இருந்தது.

PDF created with OCR. with optimisation using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

அவர்களைப் பற்றி யூதமத குருமார்கள் முன்னறிவிப்புச் செய்தனர். கிருத்தவப் பாதிரிகள் அவர்களைப் பற்றி நற்செய்தி கூறினர். அவர்களின் நினைவை சுட்டிக் காட்டி அசரீரிகள் முழங்கின. அவர்களின் ஒளிகளால் எட்டுக் கோணங்களும் இலங்கின. அவர்கள் பிறப்பதற்கு முன் அற்புதங்கள் தோன்றின. புதுமைகள் எங்கும் பிரபலமாயின. துளைபோடும் தீப்பந்தங்களால் விண்ணிலிருந்து ஷைத்தான் கள் வீசியெறியப்பட்டனர். உண்மையின் வைகறைப் புலர்ந்தது. ஒவ்வொரு பொய்யனும் செய்து கொண்டிருந்த செயல் வீணாகி விட்டது.

எனவே நபி (ஸல்) அவர்களின் தாயார் ஆமினா அம்மை யார் அவர்கள் நபியவர்களைக் கருவில் சுமந்த போது, அந்த அம்மையார் கர்ப்பச் சுமையின் கடினத்திலிருந்து அச்சமற்ற வராக இருந்தார்கள். நபியவர்களைக் கருவில் சுமந்ததினால் எவ்விதப் பளுவையும் வேதனையையும் அந்த அம்மையார் அடையவில்லை. விண்ணையும், மண்ணையும் சிறப்பித்த நபியை ஆமினா அம்மையார் கருவில் சுமந்திருக்கின்ற நிலையில் எப்படி இவ்வாறு இல்லாமல் இருக்க முடியும்? நபியவர்கள் மண்ணில் தோன்றும் நேரமும் அவர்களின் ஒளியால் உலகம் துலங்கும் நேரமும் நெருங்கிய போது அந்த அம்மையாரின் கண்கள் நபி (ஸல்) அவர்களின் பரக்கத் தினால் குளிர்ச்சி பெற்ற நிலையில் கர்ப்பத்திலிருந்து சிறிது காலகட்டம் அந்த அம்மையாருக்குக் கடந்த போது, அந்த அம்மையாரின் கனவில் வருகிற வானவர் வந்து அந்த அம்மையாரைப் பார்த்து,“ஆமினாவே! நிச்சயமாக நீ வெற்றிக்கும்,நேர் வழிக்கும் சூரியனாகத் திகழ்பவரான படைப்பினத்தில் சிறந்தவரை கருவில் சுமந்திருக்கிறாய், எனவே அவரைப் பெற்றெடுத்து விட்டால் அவருக்கு ‘முஹம்மது’ என்று பெயர் சூட்டுக!” என்று கூறினார்கள்.

முதல்பைத்து

يَا نَبِي سَلَامٌ عَلَيْكُمْ
يَا رَسُوْلْ سَلَامٌ عَلَيْكُمْ
يَا حَبِيْبُ سَلَامٌ عَلَيْكُمْ
صَلَوَاتُ اللهِ عَلَيْكُمْ

நபியே! சாந்தி நும் மீதமைக!
தூதரே! சாந்தி நும் மீதமைக்!
அன்பரே! சாந்தி நும் மீதமைக!
அல்லாஹ் அருள் நும் மீதமைக!

اَشْرَقَ الْبَدْرُ عَلَيْنَا
فَاخْتَفَتْ مِنْهُ الْبُدُوْرُ

பூரணச் சந்திரன் எங்களிடைப்
பொலிவாய் அந்நாள் உதித்தெழுந்த
காரணத்தால் பிற முழுமதிகள்
கவினார் ஒளியில் மங்கியதே

مِثْلَ حُسْنِكَ مَا رَاَيْنَا
قَطُّ يَا وَجْهَ السُّرُوْرِ

மங்களம் தவழும் திருமுகமே!
மாண்பார் தங்கள் எழிலைப் போல்
இங்கித மாக எதனையுமே
என்றும் நாங்கள் கண்டதில்லை!

أَنْتَ شَمْسٌ أَنْتَ بَدْرٌ
أَنْتَ نُوْرٌ فَوْقَ نُوْرٍ

பகலொளிச் சூரியன் தாங்களன்றோ;
பவுர்ணமி நிலவும் தாங்களன்றோ;
உகப்பிற் குரியநல் லொளிக் கெல்லாம்
உன்னத ஒளியும் தாங்களன்றோ;

أَنْتَ إِكْسِيْرٌ وَّغَالِيْ
أَنْتَ مِصْبَاحُ الصُّدُوْرِ

அஞ்சுக மருந்தும் தாங்களன்றோ;
அரும்விலை உயர்பொருள் தாங்களன்றோ;
நெஞ்சங் களில்படர் இருளகற்றும்
நித்திய விளக்கும் தாங்களன்றோ;

يَا حَبِيْبِيْ يَا مُحَمَّدْ ﷺ
يَا عَرُوْسَ الْخَافِقَيْنِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

சீருயர் அன்புக் குரியவரே!
சிறப்பாய் புகழப் பட்டவரே!
ஈருல காமிரு மணவறைக்கும்
எழில்மண வாளர் ஆனவரே!

يَا مُؤَيَّدُ يَا مُمَجَّدُ
يَا إِمَامَ الْقِبْلَتَيْنِ

உறுதி செய்யப் பட்டவரே!
உயரிய தலைமைக் குரியவரே!
அருமை இருகிபு லாக்களுக்கும்
அன்புத் தலைவர் பெருந்தகையே!

مَنْ رَّاٰى وَجْهَكَ يَسْعَدُ
يَا كَرِيْمَ الْوَالِدَيْنِ

கண்ணியம் கமழும் தாய் தந்தை
கனிவாய் ஈன்ற கண்மணியே!
புண்ணிய நும்திரு முகம் பார்த்தோர்
புனிதப் பேறினை எய்துவரே!

حَوْضُكَ الصَّافِي الْمُبَرَّدُ
وِرْدُنَا يَوْمَ النُّشُوْرِ

தங்களின் தெளிந்த குளிர்ச்சி மிகும்
தண்ணீர் தடாகம் மறுமையிலே
எங்களின் தாகம் தீர்த்துவைக்க
ஏற்ற நல்லிடமாய் அமைந்திடுமே!

أَنْتَ غَفَّارُ الْخَطَايَا
وَالذُّنُوْبِ الْمُوْبِقَاتِ

இழிவை யூட்டும் சிறுபிழைகள்
யாவும் பொறுப்பது தாங்களன்றோ;
அழிவேற்படுத்தும் வன்பிழைகள்
அனைத்தும் பொறுப்பது தாங்களன்றோ;

أَنْتَ سَتَّارُ الْمَسَاوِيْ
وَمُقِيْلُ الْعَثَرَاتِ

எம்மில் நிகழும் தீங்குகளை
இதமாய் மறைப்பவர் தாங்களன்றோ;
நிம்மதி குலைக்கும் இன்னல்களை
நீக்கி விடுபவர் தாங்களன்றோ;

يَا وَلِيَّ الْحَسَنَاتِ
يَا رَفِيْعَ الدَّرَجَاتِ

நன்மையான செயல்களுக்கு
நாளும் நேசர் ஆனவரே!
உன்னதம் மிக்க பதவிகளை
உயரச் செய்யும் உத்தமரே!

كَفِّرُوْا عَنِّيْ ذُنُوْبِيْ
وَاعْفُ لِيْ عَنْ سَيِّئَاتِ

என்னில் நிகழும் பெரும்பிழைகள்
யாவையும் மன்னித் தருள்வீரே!
சின்னஞ் சிறிய தீமைகளை
சீராய் பொறுத்தருள் புரிவீரே!

عَالِمُ سِرٍّ وَّاَخْفٰى
مُسْتَجِيْبُ الدَّعَوَاتِ

அகமிய ரகசியம் அறிபவரே!
ஆழிய மர்மம் அறிபவரே!
அகமுணர்ந் திரங்கும் இறைஞ்சல்களை
அன்பாய் ஏற்றுக் கொள்பவரே!

رَبِّ اِرْحَمْنَا جَمِيْعًا
بِجَمِيْعِ الصَّالِحَاتِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

அனைத்து வகையிலும் அமைகின்ற

அருள்நன் மைகளைப் பொழிந்த வண்ணம்

அனைத்தும் வல்லோன் எம்மிறைவா!

அருள்புரி வாய்எம் மனைவரின் பால்

فَلَمَّا حَانَ بُرُوزُ جَمَالِهِ ○ وَإِشْرَاقُ الْكَوْنِ بِأَنْوَارِ كَمَالِهِ ○
عَمَّ الْفَرَحُ وَالْبُشْرٰى وَرَأَتْ اٰمِنَةُ نُوْرًا اَضَاءَتْ مِنْهُ
قُصُوْرُ بُصْرٰى ○ وَانْشَقَّ اِيْوَانُ كِسْرٰى وَغَاضَتْ
بُحَيْرَةُ سَاوَةَ ○ وَفَاضَ وَادِيْ سَمَاوَةَ ○ وَخَمَدَتْ
نَارُ فَارِسِ ○ وَذَلَّتْ اَبْطَالُهَا الْعَوَابِسُ ○ وَخَرَّتْ لِهَيْبَةِ
مَوْلِدِهِ الْاَصْنَامُ ○ وَنُصِبَتْ لِدِيْنِ الْاِسْلَامِ اَعْلَامُ ○
وَعَمَّ الْفَرَحُ وَالْاِسْتِبْشَارُ ○ وَاَشْرَقَتِ الْاَقْطَارُ ○
بِاَنْوَارِ جَمَالِ كَمَالِ الْمُصْطَفَى الْمُخْتَارِ ○

## இரண்டாம் ஹிக்காயத்

நபி (ஸல்) அவர்களின் அழகின் உதயநேரம் நெருங்கிய போது, அவர்களின் முழுமையின் ஒளிகளினால் உலகம் இலங்கும் நேரம் நெருங்கிய போது, ஆனந்தமும், நற் செய்தியும் அனைவருக்கும் பொதுவானது. மேலும் ஆமினா அம்மையார் ஒரு ஒளியைப் பார்த்தார். அவ்வொளியினால் சிரியாவில் உள்ள 'புஸ்ரா' நகரின் மாளிகைகள் இலங்கின. கிஸ்ரா மன்னனின் கோட்டை பிளந்தது. 'ஸாவா' என்னும் ஏரி

வற்றியது. 'சமாவத்' ஓடை பெருக்கெடுத்து ஓடியது. பாரசீகரின் நெருப்பு அணைந்தது. பாரசீகர்களின் முகம் சுளிக்கும். படைவீரர்கள் இழிவடைந்தனர். அவர்களின் பிறப்பின் கௌரவத்தால் சிலைகள் குப்புற வீழ்ந்தன.

இஸ்லாமிய சன்மார்க்கத்திற்காக கொடிகள் ஏற்றப்பட்டன. ஆனந்தமும் குதூகலமும் அனைவருக்கும் பொதுவானது. தேர்ந்தெடுக்கப்பட்ட, தெளிவாக்கப்பட்ட நபியின் முழுமையின் அழகின் ஒளிகளினால் எட்டுக் கோணங்களும் ஒளி வீசின. மகிழ்ச்சியும், குதூகலமும் அனைவருக்கும் பொதுவானது.

## இரண்டாம் பைத்து

صَلَاةٌ سَلَامٌ هُمَا سَرْمَدًا
عَلَى الْمُصْطَفٰى مَا يَلُوحُ النَّهَارُ

பகற் பொழுது பளிச்சிடும் காலமெல்லாம் முஸ்தபா நபி மீது அருள், அமைதி ஆகிய இவ்விரண்டும் நிரந்தரமாய் பொழியட்டும்!

اَلْكَوْنُ قَدْ ضَاءَ لَنَا وَاسْتَنَارُ
بِمَوْلِدِ الْهَادِيْ وَطَابَ الْقَرَارُ

வழிகாட்டி நபியின் பிறப்பின் காரணத்தால் எங்களுக்காக இவ்வுலகம் ஒளிவிட்டிலங்கியதுடன் எங்களின் தங்கு மிடமாம் இந்தத் தரணி தன்னிகரில் மணம் பெற்றது.

لَمَّا بَدٰى لَاحَ مَنَارُ الْهُدٰى
لِلّٰهِ مَا اَبْهَجَ ذَاكَ الْمَنَارُ

நபியவர்கள் தோன்றிய போது அல்லாஹ்வை நோக்கிச் செல்லும் நேர்வழி இலங்குமிடம் தென்பட்டது. அந்த இலங்குமிடத்தின் பேரொளிதான் என்னே!

يَا نِعْمَةً قَدْ عَمَّنَا بِشْرُهَا
فِيْ لَيْلَةٍ ضَاءَتْ كَضَوْءِ النَّهَارُ

பகலொளி போல் இலங்கிய ஓரிரவில் - எந்தவொரு அருட்கொடை எங்களைப் பொதுவாகச் சூழ்ந்ததோ அந்த அருட்கொடையே!

جَمَالُهُ لَمَّا بَدٰى طَالِعًا
اَشْرَقَتِ الْاَنْوَارُ بَيْنَ الدِّيَارُ

நபியவர்களின் அழகு உதித்த நிலையில் வெளிப்பட்ட போது இல்லங்களுக்கு இடையே ஒளிகள் துலங்கின.

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

نَادٰى مُنَادِى السَّعْدِ لَمَّا أَتٰى
يَا طَالِبَ الْفَوْزِ الْبِدَارَ الْبِدَارْ

நபியவர்கள் வையகத்திற்கு வந்த போது, ''வெற்றியைத் தேடுபவனே! விரைக! விரைக!'' என்று, நற்பேற்றின் அழைப்பாளர் அழைத்திட்டார்.

مُذْ جَاءَ صَارَ الْحَقُّ فِيْ عِزَّةٍ
وَّزُخْرُفُ الْبَاطِلِ وَلّٰى وَسَارَ

நபியவர்கள் வந்ததிலிருந்து வாய்மை தனக்குரிய கண்ணியமான இடத்தில் மாறிவிட்டது. பொய்ம்மையின் பகட்டோ புறங்காட்டிச் சென்றன.

مِنْ هَيْبَةِ الْمَوْلِدِ كِسْرٰى غَدٰى
كَسِيْرَ قَلْبٍ فِيْ ذُهُوْلٍ وَّحَارَ

மாநபி பிறப்பினால் திகிலடைந்த காரணத்தால் பாரசீக மன்னன் கிஸ்ரா இதயம் உடைந்தவனாகி விட்டான். மேலும் அவன் தன்னையே மறந்து தடுமாறினான்.

وَانْشَقَّ لِلْمَوْلِدِ إِيْوَانُهٗ

وَعَقْلُهُ مِنْ دَهْشَةِ الْاَمْرِطَارَ

மாநபி பிறப்பினால் கிஸ்ரா மன்னனின் கோட்டை பிளந்தது: இந்த விஷயத்தைக் கேட்டுத் திடுக்கிட்டதால் அவனுடைய புத்தியும் பறந்தோடி விட்டது.

وَنُوْرُهُ اَخْمَدَ نَارًا طَغَتْ
لِلْفُرْسِ صَارُوْا مَالَهُمْ ضَوْءُ نَارٍ

அவர்களின் ஒளி பாரசீகர்களுக்குரிய பொங்கி எழுந்த நெருப்பை அணைத்து விட்டது. நெருப்பின் ஒளி அவர்களுக்கு இல்லாத நிலையில் அவர்கள் மாறி விட்டார்கள்.

وَخَرَّتِ الْاَصْنَامُ مِنْ اَجْلِهٖ
كِبَارُهَا ذَلُّوْا بِقَهْرِ الصِّغَارِ

அவர்களின் பிறப்பின் காரணத்தால் சிலைகள் குப்புற விழுந்தன. சிலைகளில் பெரியவை அவற்றின் சிறியவற் றின் அடக்குமுறை காரணமாக அற்பநிலை அடைந்தன.

وَكَمْ لَهُ مِنْ مُّعْجِزَاتٍ نَمَتْ
وَاشْتَهَرَتْ فِى الْكَوْنِ اَيَّ اشْتِهَارٍ

...compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

வளர்ச்சி அடைந்த அற்புதங்கள் எவ்வளவோ நபி (ஸல்) அவர்களுக்கு உண்டாகியிருந்தன. அகிலத்தில் அவை எத்துணை அளவுக்கு பிரபலமாகி இருந்தன்.

صَلَّى عَلَيْهِ اللّٰهُ رَبُّ الْعُلٰى
مَا جَنَّ لَيْلٌ وَّاَضَاءَ النَّهَارُ

அனைத்துப் பொருட்களையும் இரவு நேரம் மூடி மறைத்து பகற்பொழுது இலங்கும் காலமெல்லாம் நபியவர்கள் மீது உயர்ந்த நாயனாகிய அல்லாஹ் அருள் மழை பொழிவானாக!

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِىَ اللّٰهُ عَنْهُمَا قَالَ مَا خَلَقَ
اللّٰهُ وَمَا ذَرَأَ وَمَا بَرَأَ نَفْسًا اَكْرَمَ عَلَيْهِ مِنْ مُحَمَّدٍ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَمَا سَمِعْتُ اللّٰهَ تَعَالٰى اَقْسَمَ
بِحَيَاةِ اَحَدٍ غَيْرِهٖ فَقَالَ اللّٰهُ تَبَارَكَ وَتَعَالٰى لَعَمْرُكَ
اَىْ وَعَيْشِكَ وَحَيَاتِكَ يَا مُحَمَّدُ اَقْسَمَ اللّٰهُ تَعَالٰى
بِحَيَاةِ حَبِيْبِهٖ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ۝ وَرُوِىَ
اَنَّ اَوَّلَ مَا خَلَقَ اللّٰهُ نُوْرُ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ وَاَنَّهٗ دَعَا الْخَلِيْقَةَ اِلَى اللّٰهِ تَعَالٰى عِنْدَ
بَدْءِ الْاَنْوَارِ ۝ وَخَلْقِ الْاَرْوَاحِ وَيُؤَيِّدُ ذٰلِكَ قَوْلُهٗ
تَعَالٰى وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ النَّبِيّٖنَ لَمَا اٰتَيْتُكُمْ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

مِنْ كِتَابٍ وَّحِكْمَةٍ ثُمَّ جَآءَكُمْ رَسُوْلٌ مُّصَدِّقٌ
لِّمَا مَعَكُمْ لَتُؤْمِنُنَّ بِهٖ وَلَتَنْصُرُنَّهٗ قَالَ ءَاَقْرَرْتُمْ
وَاَخَذْتُمْ عَلٰى ذٰلِكُمْ اِصْرِىْ قَالُوْٓا اَقْرَرْنَا قَالَ فَاشْهَدُوْا
وَاَنَا مَعَكُمْ مِّنَ الشّٰهِدِيْنَ ○

وَرُوِيَ اَنَّ نُوْرَ الْعَرْشِ ○ وَالْكُرْسِيِّ وَاللَّوْحِ وَالْقَلَمِ وَ
الشَّمْسِ وَالْقَمَرِ خُلِقَ مِنْ نُّوْرِ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
وَاَنَّ نُوْرَ الْعَقْلِ وَالْاَبْصَارِ ○ خُلِقَ مِنْ نُّوْرِ مُحَمَّدٍ صَلَّى
اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○ وَاَنَّ مِنْ نُّوْرِهٖ تَسْتَمِدُّ جَمِيْعُ
الْاَنْوَارِ ○ بِقُدْرَةِ خَالِقِهِ الْوَاحِدِ الْقَهَّارِ ○

## மூன்றாம் ஹிக்காயத்

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியதாகத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. முஹம்மது (ஸல்) அவர்களை விடத் தன்னிடத்தில் கண்ணிய மிக்கவராக அமைந்திட்ட எந்தவொரு ஆன்மாவையும் அல்லாஹ் படைக்கவில்லை; அமைக்கவில்லை; உண்டாக்கவில்லை; நபியவர்களைத் தவிர வேறு எவருடைய வாழ்க்கையைக் கொண்டும் அல்லாஹ் சத்தியம் செய்ததாக நான் கேள்விப்படவில்லை. எனவே மேன்மையும், உயர்வும் மிக்க அல்லாஹ் தன் திருமறையில், ''உமது ஆயுள் மீது சத்தியமாக'' என்று அதாவது, முஹம்மது (ஸல்) அவர்களே! உமது வாழ்க்கையின் மீது-வாழ்நாள் மீது சத்தியமாக என்று கூறி தன்னுடைய நேசர் முஹம்மது (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையைக் கொண்டு சத்தியம் செய்துள்ளான்.

evaluation copy of CVISION PDFCompressor

''நிச்சயமாக அல்லாஹ் படைத்த படைப்புகளிலேயே முதலாவது படைத்த படைப்பு, முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஒளியாக இருக்கும்'' என்று தகவல் அறிவிக்கப் பட்டுள்ளது. நிச்சயமாக அல்லாஹ் ஒளிகளைத் துவக்கிய நேரத்தில் உயிர்களைப் படைத்த நேரத்தில்-படைக்கப் பட விருந்த படைப்பினங்களையெல்லாம் தன்பால் அழைத்தான்.

''உங்கள் முன்னோர்களிடம், நபிமார்கள் மூலமாக அல்லாஹ் உறுதிமொழி வாங்கிய போது-''நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் திருத்தூதர் உங்களிடம் வருவார். அவர்கள் மீது நீங்கள் திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களாக!'' என்று கூறினான். நீங்கள் இதை உறுதிப்படுத்துகிறீர்களா? என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர் களா? என்றும் கேட்டான். நாங்கள் அதனை ஏற்று உறுதிப் படுத்துகிறோம் என்று மற்ற நபிமார்கள் கூறினார்கள். அதற்கு அல்லாஹ் உங்கள் கூற்றுக்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்! உங்களுடன் நானும் சாட்சியாளர்களில் ஒருவனாக இருக்கிறேன்'' என்றான். (அல்குர்ஆன் 3:81) எனும் திருமறை வசனம் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறது.

நிச்சயமாக அர்ஷ், குர்ஷ் விதிப்பலகையான் லவ்ஹு அதில் விதி எழுதும் 'கலம்' (எழுது கோல்) சூரியன், சந்திரன் ஆகியவற்றின் ஒளி அனைத்தும் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஒளியினால் படைக்கப்பட்டன என்றும் நிச்சயமாக புத்தி, பார்வைகள் ஆகியவற்றின் ஒளியும் நபி (ஸல்) அவர்களின் ஒளியினால் படைக்கப் பட்டது என்றும், அடக்கி ஆள்பவனும், ஒளியைப் படைத்தவனும் ஏகனு மாகிய அல்லாஹ்வின் ஆற்றலினால் அனைத்து ஒளிகளும் நபி (ஸல்) அவர்களின் ஒளியினில் இருந்தே நீண்டு செல்கிறது என்றும் தகவல் அறிவிக்கப் பட்டுள்ளது.

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

## மூன்றாம் பைத்து

يَارَبِّ صَلِّ عَلَى النَّبِيْ
وَالْاٰلِ وَالصَّحْبِ الْاَبِيْ
مَعَ كُلِّ بَرٍّ اَنْجَبِ
مَا دُمْتَ رَحْمٰنَ الْعِبَادْ

இறைவா! அடியார்களுக்குரிய அருளாளனாக நீ நீடிக்கும் காலமெல்லாம் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும் மிகச்சிறந்த உத்தமர் ஒவ்வொருவருடன் உன்னதநிலை வாய்ந்த திருத்தோழர்கள் மீதும் அருள்புரிவாயாக!

صَلُّوْا عَلٰى خَيْرِ الْعِبَادِ
الْمُصْطَفٰى كَنْزِ الرَّشَادِ
شَفِيْعِنَا يَوْمَ الْمَعَادِ
لِتَبْلُغُوْا نَيْلَ الْمُرَادِ

முஃமீன்களே! நீங்களெல்லாம் உங்களின் நோக்கம் நிறைவேறுவதை அடைந்து கொள்வதற்காக அடியார்களில்

சிறந்தவரும் தெளிவாக்கப்பட்டவரும், நேர்வழியின் கருவூலமானவரும், மரணத்திற்குப் பின் மீளுகிற நாளில் நமக்குப் பரிந்துரைப்பவருமான நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்.

مِنْ رَّحْمَةِ اللّٰهِ الْوَدُوْدِ
اَبْدٰى لَنَا نُوْرَ الْوُجُوْدِ
وَعَمَّنَا بِشْرُ السُّعُوْدِ
وَالْفَوْزُ فِيْ طِيْبِ الْمِهَادِ

அன்பு மிக்கவனான அல்லாஹ்வின் கருணையில் இருந்து நபி (ஸல்) அவர்கள் உண்மையின் ஒளியை நமக்கென வெளிப்படுத்தினார்கள். நற்பேற்றின் முக மலர்ச்சி நம் அனைவருக்கும் பொதுவாகி விட்டது. நல் வெற்றி நறுமணப் படுக்கையான மதீனத்து ரவ்ழாவின் மண்ணில் அமைந்திருக்கிறது.

جَمَالُ نُوْرِ الْمُصْطَفٰى
وَفٰى وَوَفّٰى بِالْوَفَا
وَعَيْشُنَا مِنْهُ صَفَا
بِاللُّطْفِ مِنْ حُسْنِ الْوِدَادِ

PDF Compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

தெளிவு செய்யப்பட்ட நபியின் ஒளியின் அழகு முழுமையாகி விட்டது. அவ்வொளியழகு அனைவருக்கும் முழுமையை முழுமையாக வழங்கியது. மேலும் நபியவர் களின் அன்பிலிருந்துள்ள மென்மையின் காரணத்தால நம் வாழ்வு நபியவர்களால் தெளிவாகி விட்டது.

مِنْ طَيْبَةَ الطِّيبُ انْتَشَرْ
مِنْ طَيِّبٍ سَادَ الْبَشَرْ
مِنْ نُورِهٖ ضَاءَ الْقَمَرْ
اَزْكَى الْبَرَايَا خَيْرُ هَادٍ

தைபா எனும் மணக்கும் மதீனாவிலிருந்து நறுமணம் பரவியது. தூயவர்களிலிருந்துள்ள மனிதர்களுக்கு மாநபி அவர்கள் தலைவராகி விட்டார்கள். அவர்களின் ஒளியினால் சந்திரன் துலங்கியது. அவர்கள் படைப் பினங்களில் மிகத் தூயவரும் வழிகாட்டிகளில் சிறந்தவரு மாவார்கள்.

يَا صَاحِبَ الْحُسْنِ الْبَدِيْعْ
يَا خَيْرَ هَادٍ يَا شَفِيْعْ
عَسٰى نُوَارِىْ فِى الْبَقِيْعْ
تُغْنِيْشُنَا يَوْمَ التَّنَادِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

பூரணமான அழகுக்குரியவரே! சிறந்த வழிகாட்டிட பரிந்துரை செய்பவரே! பகீஃ எனும் புனிதர்களின் பூஞ்சோலையில் நாங்கள் நல்லடக்கமாகி மறைக்கப் பட்டிருக்கமாட்டோமா? அவ்வாறாயின் ஒருவரை ஒருவர் உதவிக்கழைக்கும் மறுமைநாளில் அது எங்களைக் காப் பாற்றிவிடும்.

جَمَالُهُ لَمَّا بَدٰى

اَهْدٰى اِلَى الْخَلْقِ الْهُدٰى

وَذِكْرُهُ يَجْلُوا الصَّدٰى

نَدَاهُ يُرْوِيْ كُلَّ صَادِ

நபியவர்களின்அழகு வெளிப்பட்ட போது அந்த ஒளி நேர்வழியான படைப்பின் பால் வழிகாட்டியது. அவர்களைப் பற்றிய நினைவு இதயத் துருவை அகற்றித் துலங்க வைக்கும். அவர்களின் கொடைத் தன்மை கடுமையான தாகங்கொண்ட ஒவ்வொருவருக்கும் தாகம் தீர்த்து வைக்கும்.

بِجَاهِ طٰهٰ مَا نَخِيْبُ

لِاَنَّهُ الْهَادِي الْحَبِيْبُ

نَرْجُوْ رِضَى اللّٰهِ الْقَرِيْبُ

وَمَا مَضٰى اَنْ لَّا يُعَادِ

தாஹா நபி (ஸல்) அவர்கள் நேசத்திற்குரிய நேர் வழிக்காட்டியாக இருப்பதினால் அவர்களுடைய மகத்து வத்தின் பொருட்டினால் நாம் வீணாகிப் போய் விடமாட் டோம். நெருக்கமான அல்லாஹ்வின் பொருத்தத்தை நாம் எதிர்பார்க்கிறோம். மேலும் கடந்து விட்ட துயரங்கள் திரும்பவும் மீட்டப்படாதிருப்பதையும் எதிர்பார்க்கிறோம்.

يَامَنْ تَمَادٰى وَاجْتَرَمْ

تُبْ وَاعْتَرِفْ وَارْجُ الْكَرَمْ

وَلُذْ بِمَنْ حَلَّ الْحَرَمْ

وَنُوْرُهٗ عَمَّ الْبِلَادِ

பாவத்தில் நீடித்திருப்பவனே! குற்றம் இழைத்து விட்டவனே! நீ பாவமன்னிப்புக் கேள்! உன் குற்றத்தை ஒப்புக் கொள்! நபியின் கொடைத்தன்மையை எதிர்பார்த்துக் கொள். புனிதம் மிக்க ஹரம் ஷரீபில் பொன்னடி பதித்த பூமான் நபியிடம் புகலிடம் தேடிக் கொள். அவர்களின் பேரொளி அனைத்து நாடுகளையும் பொதுவாகச் சூழ்ந்து கொண்டது.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ كُنْتُ نُوْرًا بَيْنَ يَدَيِ اللّٰهِ تَعَالٰى قَبْلَ اَنْ يَّخْلُقَ اٰدَمَ بِاَلْفَيْ عَامٍ ○ وَكَانَ نُوْرِيْ يُسَبِّحُ اللّٰهَ تَعَالٰى وَتُسَبِّحُ الْمَلٰٓئِكَةُ بِتَسْبِيْحِهٖ

فَاهْبَطَنِيَ اللّٰهُ تَعَالٰى اِلَى الْاَرْضِ فِيْ صُلْبِ اٰدَمَ
وَجَعَلَنِيْ فِيْ صُلْبِ نُوْحٍ فِى السَّفِيْنَةِ وَقَذَفَ
بِيْ فِيْ صُلْبِ اِبْرَاهِيْمَ عَلَيْهِ السَّلَامُ ثُمَّ لَمْ يَزَلْ
يَنْقُلُنِيْ مِنَ الْاَصْلَابِ الْكَرِيْمَةِ الْفَاخِرَةِ اِلَى
الْاَرْحَامِ الزَّكِيَّةِ الطَّاهِرَةِ ○ اِلٰى اَنْ اَخْرَجَنِيَ
اللّٰهُ مِنْ بَيْنِ اَبَوَيَّ ○ لَمْ يَلْتَقِيَا عَلٰى سِفَاحٍ قَطُّ

## நான்காம் ஹிக்காயத்

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியதாகத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைப்பதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அல்லாஹ் தஆலாவின் முன்னிலையில் நான் ஒளியாக இருந்தேன். என் ஒளி அல்லாஹுத்தஆலாவை தஸ்பீஹ் செய்து கொண்டு இருந்தது. அந்தத் தஸ்பீஹுடன் மலக்குகளும் தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தனர். பிறகு ஆதம் (அலை) அவர்களின் முதுகுத் தண்டில் வைத்து பூமியை நோக்கி அல்லாஹுத் தஆலா என்னை இறக்கி வைத்தான். மேலும் கப்பலில் இருந்த நூஹ் (அலை) அவர்களின் முதுகுத் தண்டில் என்னை ஆக்கினான். மேலும் இப்ராஹீம் (அலை) அவர்களின் முதுகுத்தண்டில் என்னை எடுத்து வைத்தான். பின்னர் என் தாய் தந்தையருக்கு மத்தியில் இருந்து அல்லாஹ் என்னை வெளிப்படுத்தும் வரை பெருமைக்குரிய, சங்கைக் குரிய முதுகுத் தண்டுகளில் இருந்து தூய்மையான களங்கமற்ற கருவறைகளை நோக்கி என்னை இறைவன் நகர்த்திக் கொண்டே இருந்தான். என் தாய் தந்தையர் இருவருமே எந்த வொரு பழிபாவத்துடனும் அறவே சேரவில்லை.

## பைத்து

## شعر

مَا زَالَ نُوْرُ مُحَمَّدٍ مُّتَنَقِّلًا
فِى الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ ذَوِى الْعُلَا
حَتّٰى لِعَبْدِ اللّٰهِ جَآءَ مُطَهَّرًا
وَبِوَجْهِ اٰمِنَةٍ بَدَا مُتَهَلِّلًا

நபி (ஸல்) அவர்களின் ஒளி-தூய்மையாக்கப்பட்ட நிலையில் அப்துல்லாஹ்வை நோக்கி வந்து ஆமினாவின் திருமுகத்தில் இலங்கிய வண்ணம் தோன்றும் வரையிலும் உயர்வுக்குரியவர் களான புறத்தூய்மையும், அகத்தூய்மையும் உடையவர்களில் நகர்ந்து கொண்டே இருந்தது.

وَعَنْ عَلِيٍّ كَرَّمَ اللّٰهُ وَجْهَهُ اَنَّهُ قَالَ حِيْنَ شَآءَ
اللّٰهُ تَقْدِيْرَ الْخَلِيْقَةِ ○ وَذَرْءَ الْبَرِيَّةِ وَاِبْدَاعَ
الْمُبْدَعَاتِ ○ نَصَبَ الْخَلْقَ فِيْ صُوَرٍ كَالْهَبَآءِ ○ قَبْلَ
دَحْوِ الْاَرْضِ وَرَفْعِ السَّمَآءِ ○ وَهُوَ فِى انْفِرَادِ مَلَكُوْتِهٖ ○
وَتَوَحُّدِ جَبَرُوْتِهٖ ○ فَاَشَاعَ نُوْرًا مِّنْ نُّوْرِهٖ ○ فَلَمَعَ
قَبَسٌ مِّنْ ضِيَآئِهٖ ○ فَسَطَعَ ثُمَّ اجْتَمَعَ ذٰلِكَ النُّوْرُ
فِيْ وَسْطِ تِلْكَ الصُّوَرِ الْخَفِيَّةِ ○ فَوَافَقَ ذٰلِكَ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

صُوْرَةَ نَبِيِّنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○ فَقَالَ
اللّٰهُ تَبَارَكَ وَتَعَالٰى لَهٗ اَنْتَ الْمُخْتَارُ الْمُنْتَخَبُ ○
وَعِنْدَكَ مُسْتَوْدَعُ نُوْرِيْ ○ وَكُنُوْزُ هِدَايَتِيْ ○
ثُمَّ اَخْفَى الْخَلِيْقَةَ فِيْ غَيْبِهٖ ○ وَغَيَّبَهَا فِيْ
مَكْنُوْنِ عِلْمِهٖ ○ ثُمَّ اَنْشَاَ الْعَوَالِمَ وَبَسَطَ
الزَّمَانَ ○ وَمَوَّجَ الْمَآءَ وَاَهَاجَ الرِّيْحَ وَاَثَارَ الزَّبَدَ
فَطَفَا عَرْشُهٗ عَلَى الْمَآءِ ○ وَبَسَطَ الْاَرْضَ عَلٰى
ظَهْرِ الْمَآءِ ○ ثُمَّ اَنْشَاَ الْمَلٰئِكَةَ مِنْ اَنْوَارِ
ابْتِدَاعِهَا وَقَرَنَ بِتَوْحِيْدِهٖ نُبُوَّةَ حَبِيْبِهٖ
مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○ فَشَهِدَتْ
بِنُبُوَّتِهٖ فِي السَّمٰوٰتِ قَبْلَ مَبْعَثِهٖ فِي الْاَرْضِ اِلٰى
اَنْ اَبْرَزَهُ اللّٰهُ تَعَالٰى اٰخِرَ الزَّمَانِ ○ ظَاهِرَ
الْعُنْوَانِ ○ فَدَعَى الْخَلِيْقَةَ اِلَى اللّٰهِ تَعَالٰى اَوَّلًا
وَّاٰخِرًا ○ وَبَاطِنًا وَّظَاهِرًا ○ وَّعَلَانِيَةً وَّسِرًّا فَمَنْ
وَافَقَهٗ قَبَسٌ مِّنْ مِّنْسَاجِ ذٰلِكَ النُّوْرِ اهْتَدٰى
اِلٰى سِرِّهٖ ○ وَاسْتَنَارَ وَاضِحُ اَمْرِهٖ ○

ஹஜ்ரத் அலி (ரழி) அவர்கள் கூறியதாகத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. படைப்பினங்களின் நிர்ணயத்

நூதனமாக்கப்பட்டவற்றைத் துவங்குவதையும் அல்லாஹ் நாடிய போது விண்ணை உயர்த்துவதற்கும் மண்ணைப் பரப்புவதற்கும் முன்னரே-அணுக்களைப் போன்ற தோற்றங்களில் அல்லாஹ் படைப்பினத்தை நிலை நாட்டினான். அந்நிலையில் அவ்விறைவனோ, தன்னுடைய ஆலமுல் மலகூத் என்னும் பேரரசாட்சி உலகில் தனிமையிலும், ஆலமுல் ஜபரூத் என்னும் சர்வாதிகார உலகத்தின் ஏகாந்தத்திலும் இருந்தான். எனவே அவன், தன் ஒளியிலிருந்து ஒரு ஒளியைப் பரவச் செய்தான். ஆகவே, அவனுடைய ஒளிகளிலிருந்து ஒரு பொறி சுடர் விட்டுப் பிரகாசித்தது. பின்னர் மறைமுகமான அந்தத் தோற்றங்களின் நடுவில் அந்த ஒளி ஒன்று சேர்ந்தது. எனவே அந்த ஒளி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்கு நேர்பட்டது. அப்போது மேலான உயர்ந்த அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, "நீவிர் தேர்ந்தெடுக்கப்பட்டவர், தேர்வு செய்யப்பட்டவர் . என்னுடைய ஒளி உம்மிடத்தில் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்னுடைய நேர்வழியின் கருவூலங்கள் உம்மிடத்தில் உள்ளது என்று கூறினான். பின்னர் தன் மறைவான நிலையில் படைப்பினங்களைப் படைத்தான். தன் பேரறிவிற்குள் மறைக்கப்பட்ட இடத்தில் படைப்பினத்தை மறைத்து வைத்தான். பின்னர் உலகங்களை உருவாக்கிக் காலத்தைப் பரப்பினான். தண்ணீரை அலையெழுப்ப வைத்தான். காற்றைப் பொங்கியெழச் செய்தான். நுரையைக் கிளப்பினான். அப்போது அவனுடைய அர்ஷு தண்ணீரின் மேல் மிதந்து கொண்டிருந்தது. தண்ணீரின் மேற்பரப்பில் பூமியைப் பரப்பினான்.

பின்னர் மலக்குகளை அவர்களுக்குரிய நூதன ஒளிகளிலிருந்து உற்பத்தி செய்தான். மேலும் தன்னுடைய ஏகத்து வத்துடன் தன்னுடைய நேசராகிய முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தை இணைத்தான். ஆகவே அல்லாஹுத் தஆலா நபி (ஸல்) அவர்களை வெளிரங்கமான முகவரியுடன் இறுதிக்காலத்தில் வெளிப்படுத்தும் வரை அவர்களின் நபித்துவத்தைக் கொண்டு புவியில்

PDF Compressor

அவர்களை நபியாக அனுப்புவதற்கு முன்னரே- வானத்தில் மலக்குகள் நபியவர்களின் நபித்துவத்தைக் கொண்டு சாட்சியம் நின்றனர். எனவே நபி (ஸல்) அவர்கள் முதலான வராகவும், முடிவானவராகவும், அந்தரங்கமானவராகவும், வெளிரங்கமானவராகவும், பகிரங்கமாகவும், ரகசியமாகவும், அல்லாஹ்வின்பால் படைப்பினத்தை அழைத்தார்கள். எனவே எவருக்கு அந்தப் பேரொளி உடைய திரியில் இருந்து ஒருபொறி நேர்பட்டதோ அத்தகையவர், இறைவனின் ரகசியத்தின் பாலுள்ள நேர்வழி பெற்று விட்டார். அத்தகை யவரின் விஷயத்தில் தெளிவு துலங்கி விட்டது.

## நான்காம் பைத்து

صَلَاةُ رَبِّ الْاَنَامِ
عَلَى الرَّسُوْلِ التِّهَامِيْ
وَالْاٰلِ صَفْوِ الْكِرَامِ
وَالصَّحْبِ اَهْلِ الْحُسَامِ

"திஹாமா" எனும் நிலப்பரப்பில் தோன்றிய திருத்தூதர் மீதும், சங்கையானவர்களின் தெளிவான அவர்களின் குடும்பத்தினர் மீதும், வீரவாளுக்குரியவரான தோழர்கள் மீதும் படைப்பினத்துடைய நாயனின் அருள்மாரி பொழிவதாக!

صَلُّوْا بِنَا بِاهْتِمَامِ
عَلٰى شَفِيْعِ الْاَنَامِ

PDF compressed

حَبِيْبِ مُحْيِ الْعِظَامِ
عَلَيْهِ اَزْكٰى سَلَامِ

எலும்புகளை உயிர்ப்பிக்கும் இறைவனின் நேசரும், படைப்பினங்களுக்குப் பரிந்துரைப்பவருமான நபி மீது முக்கியத்துவமாக எங்களுடன் சேர்ந்து நீங்களும் ஸல வாத்துச் சொல்லுங்கள் அல்லாஹ்வின் மிகத் தூய சாந்தி அவர்கள் மீது உண்டாவதாக!

اَللّٰهُ صَلّٰى عَلَيْهِ
ثُمَّ اصْطَفَاهُ لَدَيْهِ
وَحِيْنَ اَوْحٰى اِلَيْهِ
عَلَا لِاَعْلٰى مَقَامِ

நபி (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் அருள்மழைப் பொழிந்தான். பின்னர், அவர்களைத் தன்பால் தெளிவாக்கி எடுத்துக் கொண்டான். அவர்களின் பால் அவன் வஹ்றி அறி வித்த நேரத்தில் மிக உயர்ந்த பதவி நோக்கி அவர்கள் உயர்ந்து விட்டார்கள்.

طِيْبُوْا بِطَيْبَةَ طِيْبُوْا
فَقَدْ تَجَلَّى الْحَبِيْبُ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

وَفَاحَ نَشْرٌ وَّطِيبٌ
يَفُوحُ مِسْكَ الْخِتَامِ

மங்களம் பெறுங்கள்! தூயநகர் மதீனாவைக் கொண்டு மங்களம் பெறுங்கள்! ஏனெனில் நன்னேசர் நிச்சயமாக திருக்காட்சிதந்து விட்டார். சுகந்தமும், நறுமணமும் கமழ்ந்து விட்டது. கஸ்தூரி முத்திரையை விட அதிகமாக அவர்கள் கமழ்கின்றார்கள்.

يَامَنْ يَّرُوْمُ النَّعِيْمَا
بِحُبِّهِ كُنْ مُّقِيْمًا
وَلَوْ تَكُوْنُ سَقِيْمًا
لَدَيْهِ بُرْءُ السَّقَامِ

'நயீம்' எனும் சுவனத்தை நாடுபவனே! நபியவர்களின் நேசத்தைப் பற்றிக் கொண்டு தங்குபவனாக நீ இரு! நீ நோயாளியாக இருந்தால் நபி (ஸல்) அவர்களிடம் நோயின் நிவாரணம் இருக்கிறது.

قَدْ طَابَ هٰذَا الرَّبِيْعُ
مُذْ جَاءَ فِيْهِ الشَّفِيْعُ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

لَهُ جَمَالٌ بَدِيعٌ
يَفُوقُ بَدْرَ التَّمَامِ

மன்றாடும் நபி மண்ணுலகிற்கு இந்த வசந்தத்தில் வருகை தந்ததிலிருந்து இந்த வசந்தம் நிச்சயமாக இதமாகி விட்டது. நபியவர்களுக்கு அற்புதமான அழகு இருக்கிறது. அந்த அழகால் அவர்கள் பூரண முழுமதியை விட பொலிவு பெற்று சிறக்கிறார்கள்.

طَابَتْ بِقَاعُ الْبَقِيعِ
مِنْ قُرْبِهَا لِلشَّفِيعِ
سُكَّانُهَا فِي رَبِيعٍ
مِنْ أُنْسِ تَاجِ الْكِرَامِ

பரிந்துரைக்கும் திருநபிக்குப் பக்கத்தில் இருப்பதினால் ஜன்னத்துல் பகீஃ எனும் புனித மக்பறாவின் திருத்தலங்கள் பொலிவு பெற்றன. மரியாதைக்குரியவர்களின் மகுடமான மாநபியின் நல்லன்பினால் இத்திருத்தலங்களில் நல்லடக்கமாகி வாழ்பவர்கள் வசந்தத்தில் இருக்கிறார்கள்.

هٰذَا الْبَشِيرُ النَّذِيرُ
هٰذَا السِّرَاجُ الْمُنِيرُ

PDF Compressor

إِنَّا بِهِ نَسْتَجِيرُ

فِيْ دَفْعِ كُلِّ انْتِقَامِ

எம்பெருமானாராகிய இவர்கள் சுவனத்தைப் பற்றி சுபச் செய்தி சொல்பவரும், நரகைக் குறித்து எச்சரிப்பவரும் ஆவார்கள். இவர்கள் ஒளி வீசும் விளக்கும் ஆவார்கள். நிச்சயமாக நாம், ஒவ்வொரு தண்டனையையும் தடுத்திடும் விஷயத்தில் இவர்களிடத்தில் பாதுகாப்புத் தேடுகிறோம்.

هٰذَا الَّذِيْ قَدْ تَرَقّٰى

إِلَى السَّمٰوٰتِ حَقًّا

وَخَاطَبَ اللّٰهُ صِدْقًا

بِوَحْيِ خَيْرِ الْكَلَامِ

வானங்களை நோக்கி உண்மையாகவே ஏறிச் சென்றவர் இவர்களாவார்கள். சிறந்த திருவாசகமாகத் திகழும் குர்ஆனின் வஹி மூலமாக இவர்களுடன்-உண்மையாக-அல்லாஹுௗ முன்னிலையாகப் பேசினான்.

هٰذَا النَّبِيُّ الْكَرِيْمُ

لَهُ مَقَامٌ عَظِيْمُ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

بِكُمْ رَؤُوْفٌ رَّحِيْمٌ
اَنْتُمْ بِهٖ فِيْ اغْتِنَامٍ

சங்கையான நன்னபி இவர்களாவார்கள். இவர்களுக்கு மகத்துவம் மிக்க பதவி இருக்கிறது. முஃமின்களாகிய உங்களிடம் இரக்கமும் இனிய அன்பும் உடையவர்களாவார்கள். இவர்கள் மூலமாக நீங்கள் செல்வப்பேறு பெற்றவர்களாவீர்கள்!

بِهٖ يَطِيْبُ الزَّمَانُ
وَفِيْ حِمَاهُ الْاَمَانُ
وَجَارُهٗ لَا يُهَانُ
فِيْ عِزَّةٍ وَّاحْتِرَامٍ

நபியாகிய இவர்களால் காலம் கமழ்கிறது. இவர்களின் காவலில் பாதுகாப்பு கிடைக்கிறது. இவர்களை அடுத்து வாழ்பவர்கள் இழிவாக்கப்பட மாட்டார்கள். இவர்கள் கண்ணியத்திலும், மதிப்பிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

حَوٰى جَمِيْلَ الصِّفَاتِ
وَغَايَةَ الْمَكْرُمَاتِ

لَهُ جَزِيلُ الْهِبَاتِ
مِنْهَا نَعِيمُ الدَّوَامِ

அழகிய குணங்களையும், மரியாதையின் எல்லையையும், இவர்கள் சேகரித்துள்ளார்கள். இவர்களுக்கு ஏராளமான பரிசுகள் கிடைக்கின்றன. "நயீம்" என்னும் நிலையான சுவனப் பேறு அவற்றில் ஒன்றாகும்.

بِهِ تَبَاهَى الْجَمَالُ
وَمِنْهُ تَمَّ الْكَمَالُ
وَبَانَ فِينَا الْحَلَالُ
بِهِ وَحُكْمُ الْحَرَامِ

இவர்களைக் கொண்டு அழகு பெருமையடித்தது. இவர்களால் முழுமையும் கூட முழுமை பெற்றது. ஆகுமானவை, ஆகாதவை ஆகியவற்றின் விதிமுறைகள் இவர்களால் எங்களிடையில் வெளிப்பட்டன.

يَا خَاتَمَ الْأَنْبِيَاءِ
يَا سَيِّدَ الْأَصْفِيَاءِ

يَاهَادِيَ الْأَوْلِيَاءِ
يَازَيْنَ كُلِّ اِمَامٍ

நபிமார்களின் முத்திரையே! தெளிந்த ஞானிகளின் தலைவரே! இறைநேசர்களின் வழிகாட்டியே! ஒவ்வொரு முன்னணித் தலைவருக்குமுரிய அலங்காரமே!

اِنِّيْ عُبَيْدٌ ذَلِيْلُ
مِنْ عَثْرَتِيْ اَسْتَقِيْلُ
وَمَا يَخِيْبُ النَّزِيْلُ
فِيْ حَيِّ رَاعِ الذِّمَامِ

நிச்சயமாக நான் இழிவான ஒரு சிற்றடிமையாவேன். என் குற்றங்களிலிருந்து என்னை நீக்கி விடக் கோருகிறேன் பொறுப்புகளைப் பேணுகிற பூமான் நபியின் குழுவில் இறங்கியவர் வீணாகி விடமாட்டார்.

يَارَبِّ اَحْسِنْ خَلَاصِيْ
وَاغْفِرْ بِغَيْرِ قِصَاصٍ

لَمَّا يَشِيبُ النَّوَاصِى
مِنْ هَوْلِ يَوْمِ الزِّحَامِ

இறைவா! நெருக்கடி மிக்க நாளின் அமளியினால் என்னுடைய முன் நெற்றி ரோமம் நரைத்திடும் போது பழிக்குப்பழி இல்லாமல் என்னை மன்னித்து என் ஈடேற்றத்தை இனிதாக்குவாயாக!

بِحَقِّ نُورِ مُحَمَّدْ
وَبِالْكِتَابِ الْمُمَجَّدْ
اِجْعَلْ لَّنَا النَّارَ تُخْمَدْ
يَوْمَ الْكُرُوبِ الْعِظَامِ

முஹம்மது (ஸல்) அவர்களின் ஒளியின் பொருட்டாலும், மகத்துவமாக்கப்பட்ட வேதத்தின் பொருட்டாலும் கடுமையான கவலைக்குரிய மறுமைநாளில் நரக நெருப்பு எங்களுக்காக அணைக்கப்பட்டதாக்குவாயாக!

بِمَنْ اَتٰى بِالْكِتَابِ
وَمَنْ هَدٰى لِلصَّوَابِ

جُدْلِيْ بِشُرْبِ شَرَابٍ
يَحْيٰ بِهٖ كُلُّ ظَامِيْ

வேதத்தைக் கொண்டு வந்தவரும் நன்னெறியின் பால் வழிகாட்டியவருமான மாநபி (ஸல்) அவர்கள் மூலமாக கவுஸரின் பானத்தைப் பருகிடும் வாய்ப்பை எனக்குக் கொடையாக வழங்கிடுவாயாக! தாகித்தவர் ஒவ்வொருவரும் இந்தப் பானத்தினால் புத்துயிர் பெறுவார்கள்.

صَلَّى الْإِلٰـهُ السَّلَامُ
عَلَى الَّذِيْ ذَا إِمَامُ
رُسُلٍ عَلَيْهِمْ سَلَامٌ
وَالْآلِ أَهْلِ اهْتِمَامِ

சாந்தி அளிப்பவனான இறைவன், திருத்தூதர்களின் தலைவராக இருக்கும் திருநபி மீதும், முக்கியத்துவத் திற்குரியவர்களான நபி கிளையார் மீதும், ஸலவாத்துச் சொல்வானாக! திருத்தூதர்கள் மீதும் இறைவனின் சாந்தி நிலவுக!

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْهُمَا ○ قَالَ
قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○ إِنَّ

This compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

اللهَ عَزَّ وَجَلَّ خَلَقَ السَّمٰوٰتِ سَبْعًا فَاخْتَارَ
الْعُلْيَا فَاَسْكَنَهَا مَنْ شَآءَ مِنْ خَلْقِهٖ ثُمَّ خَلَقَ
الْخَلْقَ فَاخْتَارَ مِنَ الْخَلْقِ بَنِيْ اٰدَمَ وَاخْتَارَ مِنْ
بَنِيْ اٰدَمَ الْعَرَبَ وَاخْتَارَ مِنَ الْعَرَبِ مُضَرَ وَاخْتَارَ
مِنْ مُضَرَ قُرَيْشًا وَاخْتَارَ مِنْ قُرَيْشٍ بَنِيْ هَاشِمٍ ○
وَاخْتَارَنِيْ مِنْ بَنِيْ هَاشِمٍ ○ فَاَنَا مِنْ خِيَارٍ اِلٰى
خِيَارٍ ○ فَمَنْ اَحَبَّ الْعَرَبَ فَبِحُبِّيْ اَحَبَّهُمْ وَمَنْ
اَبْغَضَ الْعَرَبَ فَبِبُغْضِيْ اَبْغَضَهُمْ ○

وَرُوِيَ اَنَّ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ:
قَالَ اِنَّ اللّٰهَ اصْطَفٰى مِنْ وُلْدِ اِبْرَاهِيْمَ اِسْمٰعِيْلَ ○
وَاصْطَفٰى مِنْ وُلْدِ اِسْمٰعِيْلَ بَنِيْ كِنَانَةَ ○
وَاصْطَفٰى مِنْ بَنِيْ كِنَانَةَ قُرَيْشًا ○ وَاصْطَفٰى
مِنْ قُرَيْشٍ بَنِيْ هَاشِمٍ ○ وَاصْطَفَانِيْ مِنْ بَنِيْ
هَاشِمٍ ○ وَرُوِيَ اَنَّهٗ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ
اِنَّ اللّٰهَ سُبْحَانَهٗ وَتَعَالٰى قَسَمَ الْخَلْقَ قِسْمَيْنِ فَجَعَلَنِيْ
فِيْ خَيْرِهِمَا قِسْمًا ○ وَذٰلِكَ قَوْلُهٗ تَعَالٰى اَصْحٰبُ الْيَمِيْنِ
وَاَصْحٰبُ الشِّمَالِ فَاَنَا مِنَ الْيَمِيْنِ ○ وَاَنَا خَيْرُ اَصْحٰبِ
الْيَمِيْنِ ○ ثُمَّ جَعَلَ الْقِسْمَيْنِ اَثْلَاثًا فَجَعَلَنِيْ

فِي خَيْرِهَا ثُلُثًا ۝ وَذٰلِكَ قَوْلُهُ تَعَالٰى اَصْحٰبُ الْيَمَنَةِ ۝
مَآ اَصْحَابُ الْمَيْمَنَةِ ۝ وَاَصْحٰبُ الْمَشْأَمَةِ مَا اَصْحٰبُ
الْمَشْئَمَةِ ۝ وَالسَّابِقُوْنَ السَّابِقُوْنَ فَاَنَا مِنَ السَّابِقِيْنَ ۝
وَاَنَا خَيْرُ السَّابِقِيْنَ ۝ ثُمَّ جَعَلَ الْاَثْلَاثَ قَبَآئِلَ
فَجَعَلَنِيْ مِنْ خَيْرِهَا قَبِيْلَةً ۝ وَذٰلِكَ قَوْلُهُ تَعَالٰى
وَجَعَلْنَاكُمْ شُعُوْبًا وَّقَبَائِلَ لِتَعَارَفُوْا اِنَّ اَكْرَمَكُمْ
عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ فَاَنَا اَتْقٰى وُلْدِ اٰدَمَ وَاَكْرَمُهُمْ
عَلَى اللّٰهِ وَلَا فَخْرَ ۝ ثُمَّ جَعَلَ الْقَبَآئِلَ بُيُوْتًا ۝
فَجَعَلَنِيْ فِيْ خَيْرِهِمْ بَيْتًا ۝ وَذٰلِكَ قَوْلُهُ تَعَالٰى اِنَّمَا
يُرِيْدُ اللّٰهُ لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ اَهْلَ الْبَيْتِ
وَيُطَهِّرَكُمْ تَطْهِيْرًا ۝

## 5வது ஹிக்காயத்

ஹஜ்ரத் இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறியதாகத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் நிச்சயமாக கண்ணியமும் வல்லமையும் மிக்க அல்லாஹ் வானங்களை ஏழாகப் படைத்தான். பின்னர் அவற்றில் மிக உயர்ந்த இடமான ஏழாம் வானைத் தேர்ந்தெடுத்தான். அதில் அவன் படைப்பிலிருந்து அவன் நாடியவர்களைக் குடியமர்த்தினான். பின்னர் அனைத்துப் படைப்பையும் மண்ணுலகில் படைத்தான். அப்படைப்பிலிருந்து ஆதமின் சந்ததியினரைத் தேர்ந்தெடுத்தான். ஆதமின் சந்ததியிலிருந்து அரபியர்களை தேர்ந்தெடுத்தான். அரபியர்களிலிருந்து 'முழர்' கோத்திரத்தைத் தேர்ந்தெடுத்தான். முழர்

PDFCompressor

கோத்திரத்திலிருந்து குறைஷி குலத்தைத் தேர்ந்தெடுத் தான். குறைஷி குலத்திலிருந்து ஹாஷிம் கிளையினரைத் தேர்ந்தெடுத்தான். எனவே நான், சிறந்தவர்களிலிருந்து சிறந்தவர்கள் வரை உள்ளவனாவேன். எனவே ஒருவர் அரபியரை நேசித்தால் என்னுடைய நேசத்தின் காரணத் தால் தான் அவர் அரபியரை நேசித்து விட்டார். ஒருவர் அரபி யரைக் கோபித்தால் என்னுடைய கோபத்தின் காரணத்தால் தான் அவர் அரபியரைக் கோபித்து விட்டார்.

மேலும் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். நிச்சயமாக தூயவனும், மேலான வனுமான அல்லாஹ் தன் படைப்பினத்தை இரு கூறாகப் பங்கிட்டான். எனவே, என்னை அவ்விரு பங்குகளி லிருந்துள்ள சிறந்த பங்கில் அமைத்து விட்டான். ''வலது பக்கத்துக்காரர்கள் மற்றும் இடது பக்கத்துக்காரர்கள்'' எனும் அல்லாஹ்வின் திருவாசகம் இதைத் தான் காட்டுகிறது. எனவே, நான் வலது பக்கத்திலிருந்துள்ளவன் ஆவேன். வலது பக்கத்துக்காரர்களில் நான் சிறந்தவன். பின்னர் இறைவன் அவ்விரு பங்குகளையும் மூன்று பிரிவு களாக்கினான். அந்த முப்பிரிவுகளில் உள்ள சிறந்த பிரிவில் என்னை ஆக்கினான்.

''வலது பக்கத்துக்காரர்கள். வலது பக்கத்துக்காரர்கள் என்றால் என்ன? இடது பக்கத்துக்காரர்கள்! இடது பக்கத்துக் காரர்கள் என்றால் என்ன? நன்மைகளில் முந்தியவர்கள் சுவனத்திலும் முந்தியவர்கள் ஆவார்கள்'' எனும் அல்லாஹ் வின் அருள்வாசகம். இதைத் தான் காட்டுகிறது. எனவே நான் முந்தியவர்களில் இருந்துள்ளவனாவேன். முந்தியவர் களில் நான் சிறந்தவனாவேன். பின்னர் அந்த மூன்று பிரிவு களையும் அல்லாஹ் பல்வேறு கோத்திரங்களாக ஆக்கி னான். எனவே என்னைச் சிறந்த கோத்திரத்தில் அமைதது விட்டான். ''மனிதர்களே! உங்களை நாம் பல்வேறு கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கி னோம். நிச்சயமாக அல்லாஹ் விடத்தில் உங்களிலே

கண்ணியமிக்கவர் உங்களிலேயே இறையச்சம் மிகுந்தவர் ஆவார் எனும் இறைமொழி (அல்குர் ஆன்) இக்கருத் தினையே காட்டுகிறது. எனவே நான், ஆதமின் பிள்ளை களில் இறையச்சம் மிகுந்தவரும் அல்லாஹ்விடத்தில் கண்ணியம் மிக்கவருமாவேன். இதில் பெருமையடித்தல் இல்லை. பின்னர் கோத்திரங்களை அல்லாஹ் வீடுகளாக அமைத்தான். எனவே என்னை வீடுகளிலேயே சிறந்த வீட்டுக்காரராக அல்லாஹ் அமைத்தான். ''நபியின் வீட்டினரே! உங்களை விட்டும் அசுத்தத்தை அகற்றி உங்களைத் தூய்மைப்படுத்துவதையே அல்லாஹ் நிச்சயம் நாடுகிறான்'' எனும் இறைமொழி (அல்குர் ஆன்) இக்கருத்தையே காட்டுகிறது.

## 5வது பைத்து

اَللّٰهُ يَااَللّٰهُ
يَامَلْجَأَ الْقَاصِدِ يَامُسْتَنَدِيْ

அல்லாஹ்வே! அல்லாஹ்வே! அல்லாஹ்வே! நாடி வரு வோர்தம் புகலிடமே! எமது இணைப்பிற்கு உரியவன் ஆக்கப்பட்டவ்னே!

يَامُصْطَفٰى يَامُرْتَضٰى يَاسَنَدِيْ
يَاسَيِّدِيْ يَاشَفِيْعِيْ خُذْبِيَدِيْ

தெளிவாக்கப்பட்டவரே! திருப்தியாக்கப்பட்டவரே! இறைவனுடன் எனக்குரிய இணைப்பே! என் எஜமானே! எனக்காக மன்றாடுபவரே! என் கரத்தைப் பற்றிடுவீர்!

أَزْكَى صَلَاةٍ وَّسَلَامٍ سَرْمَدِيْ
عَلَيْكَ مِنْ رَّبِّ الْعِبَادِ الصَّمَدِ

எவ்விதத் தேவையும் அற்றவனாகிய அடியார்களின் நாயனிலிருந்து தங்கள் மீது மிகத் தூய ஸலவாத்தும், ஸலாமும் நிரந்தரமாக உண்டாகுக!

بَسَطْتُ كَفَّ فَاقَتِيْ وَالنَّدَمِ
أَرْجُوْ جَزِيْلَ فَضْلِكُمْ وَالْكَرَمِ

என் வறுமை, என் கைசேதம் ஆகிய கைகளை நான் விரித்து விட்டேன். ஆகவே யான். தங்களின் மிகுதியான அருட்கொடை மற்றும் கொடைத் தன்மையை எதிர் பார்க்கிறேன்.

مُسْتَشْفِعًا نَّزِيْلَ هٰذَا الْحَرَمِ
فَلَاحِظُوْنِيْ بِدَوَامِ الْمَدَدِ

மதீனாவெனும் இந்த மகத்தான பூமியில் இறங்கிய மாநபியே! தங்களின் பரிந்துரையைத் தேடியவனாக தங்கள் முன் நிற்கின்றேன். எனவே நிரந்தரமான நல்லுதவி செய்வதின் மூலமாக என்பால் கடைக்கண் பார்வையைச் செலுத்துவீர்களாக!

قَدْ فُقْتُمُ الْخَلْقَ بِحُسْنِ الْخُلُقِ
فَأَنْجِدُوا الْمِسْكِينَ قَبْلَ الْغَرَقِ

அழகிய நற்குணங்களின் மூலமாகத் தாங்கள் நிச்சயமாகப் படைப்பினங்களை விட மேம்பட்டு விட்டீர்கள். எனவே யான், கவலையில் மூழ்குவதற்கு முன்னரே இந்த ஏழையைக் காப்பாற்றுங்கள்.

وَأَطْفِئُوا بِالْبَسْطِ وَهْجَ الْحُرَقِ
وَأَبْرِدُوا بِاللُّطْفِ حَرَّ الْكَبِدِ

நபியே! தங்களின் பரந்த மனப்பான்மையினால் கரிக்கும் நரக நெருப்பின் கொழுந்து விட்டெரியும் ஜுவாலையை அணைத்து விடுங்கள்! தங்களின் இரக்கத் தன்மையால் என் ஈரலின் வெப்பத்தைக் குளிரச் செய்யுங்கள்.

مَنْ فُتُّمُوهُ لَا يَزَالُ نَادِمَا
يَا سَعْدَ مَنْ رَضِيتُمُوهُ خَادِمَا

நபியே! எவரைத் தாங்கள் விட்டு விட்டீர்களோ அவர் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார். எவரைத் தங்களின் தொண்டனாகப் பொருந்திக் கொண்டீர்களோ அவருக்குக் கிடைக்கும் நற்பேறே! [illegible] மகத்துவம் தான் என்னே!

evaluation copy of CVISION PDFCompressor

فَحِلْمُكُمْ وَالسِّتْرُ عَمَّ الْعَالَمَا
نَعْمَاؤُكُمْ مِنْهَا نَعِيمُ الْأَبَدِ

எனவே நபியே, தங்களின் பொறுமையும் பிறர் குறைகளை மன்னித்து மறைக்கும் தன்மையும் தங்களின், அருட்கொடைகளும் அனைத்துலகையும் பொதுவாக சூழ்ந்துக் கொண்டது. நயீம் எனும் நிலையான சுவனம் தங்களின் அருட்கொடைகளில் ஒன்றாகும்.

أُحِبُّكُمْ لَكِنْ قَلِيلُ الْأَدَبِ
وَمِنْ هَوَى نَفْسِي تَوَالَتْ حُجُبِي

நபியே! தங்களை நான் நேசிக்கிறேன். ஆனால் என்னிடம் நல்லொழுக்கம் குறைவாகவே இருக்கிறது. மேலும், என்னுடைய மனோ இச்சையின் காரணத்தால் எந்தன் திரைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ச்சியாக அமைந்து விட்டன.

فَرَوِّحُوا رُوحِي بِكَشْفِ الْكُرَبِ
عِنَايَةً مِّنْ فَضْلِكُمْ مُعْتَمَدِي

எனவே, என் கவலையை அகற்றுவதன் மூலமாக என் ஆன்மாவை நிம்மதியுறச் செய்வீராக! என்னால் பற்றி நிற்கப்படுதற்குரிய நபியே! தங்களின் அருட்கொடை யிலிருந்து நான் நாடுகிறேன்.

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

أَقْسَمْتُ فِيْ نُصْرِيْ بِكُمْ عَلَيْكُمُ
وَسِيْلَتِيْ إِحْسَانُكُمْ إِلَيْكُمُ

நபியே! தங்களைக் கொண்டு யான் உதவி பெறுவதில் தங்களின் மீது சத்தியம் செய்கிறேன். தங்கள் பால் யான் வசீலா தேடுவது, தாங்கள் எமக்குச் செய்யும் உபகாரமாகும்.

مَالِيْ مَا أُحْظٰى بِهٖ لَدَيْكُمُ
سِوٰى صَرِيْحِ الْفَقْرِ وَالتَّوَدُّدِ

"தங்கள் மீது கொண்ட களங்கமற்ற தேவையையும் நல்லன்பையும் தவிர, தங்களிடம் எப்பொருளைக் கொண்டு யான் ஆசை வைக்கப்படுவேனோ அத்தகைய எதுவும் என்னிடமில்லை"

فِيْ طَيْبَةَ الْفَوْزُ بِمَهْدِ الرُّشْدِ
وَفِيْ ضَوَاحِيْهَا زَوَالُ النَّكَدِ

மதீனத்து மண்ணில் நேர்வழியின் தொட்டிலில் வெற்றி அமைந்திருக்கிறது. வறுமையை அகற்றுவது அந்த மதீனாவின் திறந்த வெளிகளில் இருக்கிறது.

إِنْ كُنْتُمْ تَرْجُوْنَ فَضْلَ الْأَمِيْنِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

فَشَاهِدُوْا اَنْوَارَهٗ فِيْ اُحُدِ

ஏக இறைவனின் அருட்கொடைக்கு நீங்கள் ஆசைப் படுவதாக இருந்தால் நபி அவர்களின் ஒளிகளை உஹதுக் களத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்!

اِنْ تَبْتَغُوْا وَسِيْلَةً لِّلْمَالِكِ
صَلُّوْا عَلٰى رَسُوْلِهِ الْمُبَارَكِ

மன்னவனாம் இறைவன் பால் நீங்கள் வஸீலா தேடு வதாக இருந்தால் அவனுடைய பறக்கத் தாக்கப்பட்ட திருத் தூதர் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள்!

اَلشَّافِعِ الْمُنْقِذِ مِنْ مَّهَالِكِ
وَاٰلِهٖ وَصَحْبِهٖ وَمَنْ هُدِيْ

அழிவுகளிலிருந்து காப்பாற்றுகிறவரும், மன்றாடுகிற வருமான நபியவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார். தோழர்கள் மற்றும் நேர்வழியாக்கப்பட்டவர்கள் மீதும் ஸலவாத்துச் சொல்லுங்கள்!

صَلَّى الْاِلٰهُ عَلَى النَّبِيِّ وَاٰلِهٖ
وَكُلِّ عِتْرَةٍ لَّهٗ وَعِيَالِهٖ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும், அவர்களின் ஒவ்வொரு வாரிசுகள் மீதும், அவர்களின் மனைவி, மக்கள் மீதும் அல்லாஹ் அருள்புரிந்தான்.

وَعِرْسِهٖ وَمَنْ عَلٰى مِنْوَالِهٖ
وَعَلٰى صَحَابَتِهِ الْكِرَامِ السُّجَّدِ

நபி அவர்களின் துணைவியர் மீதும் அவர்களின் கொடையிலிருப்பவர் மீதும் சங்யையானவர்களும் ஸஜ்தா செய்பவர்களுமான அவர்களின் திருத்தோழர்கள் மீதும் இறைவன் அருள் புரிந்தான்.

وَعَنْ عَطَآءِ بْنِ يَسَارٍ رَحِمَهُمَا اللّٰهُ قَالَ لَقِيْتُ عَبْدَ
اللّٰهِ ابْنَ عَمْرِو ابْنِ الْعَاصِ ○ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قُلْتُ
اَخْبِرْنِيْ عَنْ صِفَةِ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ○
قَالَ اَجَلْ وَاللّٰهِ اِنَّهٗ لَمَوْصُوْفٌ فِي التَّوْرٰىةِ بِبَعْضِ
صِفَتِهٖ فِي الْقُرْاٰنِ ○ يٰاَيُّهَا النَّبِيُّ اِنَّا اَرْسَلْنٰكَ شَاهِدًا
وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا ○ وَّحِرْزًا لِّلْاُمِّيِّيْنَ اَنْتَ عَبْدِيْ
وَرَسُوْلِيْ سَمَّيْتُكَ الْمُتَوَكِّلَ لَيْسَ بِفَظٍّ وَّلَا
غَلِيْظٍ وَّلَا صَخَّابٍ فِي الْاَسْوَاقِ ○ وَلَا يَدْفَعُ بِالسَّيِّئَةِ
السَّيِّئَةَ وَلٰكِنْ يَّعْفُوْ وَيَغْفِرُ وَلَنْ يَّقْبِضَهُ اللّٰهُ
حَتّٰى يُقِيْمَ بِهِ الْمِلَّةَ الْعَوْجَآءَ بِاَنْ يَّقُوْلُوْا

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَيَفْتَحُ بِهٖ اَعْيُنًا عُمْيًا ○ وَاٰذَانًا صُمًّا
وَّ قُلُوْبًا غُلْفًا ○ وَذُكِرَ مِثْلُهٗ عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ
سَلَامٍ ○ وَكَعْبِ الْاَحْبَارِ ○ وَفِيْ بَعْضِ طُرُقِهٖ عَنِ
ابْنِ اِسْحٰقَ ○ وَلَا صَخِبٍ فِي الْاَسْوَاقِ ○ وَلَا مُتَزَيِّنٍ
بِالْفُحْشِ وَلَا قَوَّالٍ لِّلْخُنَا اُسَدِّدُهٗ لِكُلِّ جَمِيْلٍ ○
وَاَهَبُ لَهٗ كُلَّ خُلُقٍ كَرِيْمٍ ○ وَاَجْعَلُ السَّكِيْنَةَ
لِبَاسَهٗ وَالْبِرَّ شِعَارَهٗ وَالتَّقْوٰى ضَمِيْرَهٗ ○ وَالْحِكْمَةَ
مَعْقُوْلَهٗ وَالصِّدْقَ وَالْوَفَا طَبِيْعَتَهٗ وَالْعَفْوَ وَالْمَعْرُوْفَ
خُلُقَهٗ ○ وَالْعَدْلَ سِيْرَتَهٗ وَالْحَقَّ شَرِيْعَتَهٗ ○
وَالْهُدٰى اِمَامَهٗ وَالْاِسْلَامَ مِلَّتَهٗ وَاَحْمَدُ اسْمُهٗ
أُهْدِيْ بِهٖ بَعْدَ الضَّلَالَةِ ○ وَاُعَلِّمُ بِهٖ بَعْدَ
الْجَهَالَةِ ○ وَاَرْفَعُ بِهٖ بَعْدَ الْخَمَالَةِ ○ وَاُسَمِّيْ
بِهٖ بَعْدَ النَّكِرَةِ ○ وَاُكَثِّرُ بِهٖ بَعْدَ الْقِلَّةِ ○
وَاُغْنِيْ بِهٖ بَعْدَ الْعَيْلَةِ وَاَجْمَعُ بِهٖ بَعْدَ
الْفُرْقَةِ ○ وَاُؤَلِّفُ بِهٖ بَيْنَ قُلُوْبٍ مُّخْتَلِفَةٍ وَّاَهْوَاءٍ
مُّتَشَتِّتَةٍ وَاُمَمٍ مُّتَفَرِّقَةٍ ○ وَاَجْعَلُ اُمَّتَهٗ خَيْرَ
اُمَّةٍ اُخْرِجَتْ لِلنَّاسِ ○

# வேது ஹிக்காயத்

அத்தாஃ இப்னு யஸார் (ரஹ்) அவர்கள் கூறியதாகத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தன்மையைப் பற்றி எனக்கு அறி வித்துத் தருக!'' என்று. நான் அம்ரு பின் ஆஸ் (ரழி) அவர் களின் திருமகனார், அப்துல்லாஹ் (ரழி), அவர்களிடம் கேட்டேன். அதற்கவர், 'ஆம்! கூறுகிறேன்' ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நிச்சயமாக நபி அவர்கள் குர்ஆனில் (கூறப் பட்டு) உள்ள அவர்களின் சில தன்மைகளைக் கொண்டு தௌராத்தில் வருணிக்கப்பட்டவராவார்கள். ''நபி அவர்களே நிச்சயமாக நாம் உம்மை மறுமையில் அனைவருக்கும் சாட்சி சொல்பவராகவும், சுவனத்தைப் பற்றி சுபச் செய்தி கூறுபவராகவும், நரகைக் குறித்து எச்சரிப்பவராகவும் எழுத்தறிவற்றவர்களின் பாதுகாப்புப் பெட்டகமாகவும் அனுப்பி வைத்துள்ளேன். நீவிர் என் னுடைய அடியாரும் திருத்தூதருமாவீர்கள்! ''அல்லாஹ் விடம் பொறுப்பை ஒப்படைப்பவர்'' என்று நாம் உமக்குப் பெயர் வைத்தோம்.

நபியாகிய அவர் கடுகடுத்தவரல்ல. கடின உள்ளம் கொண்டவரல்ல. கடைவீதிகளில் கூச்சலிட்டுப் பேசு பவரல்ல. அவர் தீமையை தீமையின் மூலம் தடுக்க மாட்டார். ஆனால் அதை பொறுத்து மன்னித்து விடுவார். கோணலான சமுதாய மக்கள், ''லாயிலாஹ இல்லல்லாஹ்'' என்று சொல்வதன் மூலமாக அவர்களை, அந்த நபியைக் கொண்டு நேராக்கும் வரையிலும், குருட்டுக் கண்களை அந்த நபியைக் கொண்டே திறக்கும் வரையிலும், செவிட்டுச் செவிகளையும், மூடிய இதயங்களையும் அந்த நபியைக் கொண்டு திறக்கும் வரையிலும் நபி அவர்களின் உயிரை நிச்சயமாக அல்லாஹ் கைப்பற்ற மாட்டான். மேலும் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரழி) மற்றும் கஃபுல் அஹ்பார் (ரழி) ஆகியவர்கள் கூறியதாகவும் இதைப் போன்ற கருத்து கூறப்பட்டுள்ளது.

இப்னு இஸ்ஹாக் கூறியதாக கஃபுல் அஹ்பாருடைய அறிவிப்பின் வழித்தடங்களிலிருந்து ஒன்றில் கீழ்க் கண்டவாறு வந்துள்ளது. நபியவர்கள் கடைவீதிகளில் கூச்சலிட்டுப் பேசுபவரல்ல. தீய சொற்களை எடுத்துச் சொல்பவரல்ல. தீய செயல்களை செய்யும் தன்மை உடையவரல்ல. அனைத்து வித அழகிய குணத்தின்பால் நான் அவரைச் சீர்படுத்துவேன். கண்ணியமான குணங்கள் அனைத்தையும் அவருக்கு நான் வழங்குவேன். அடக் கத்தை அவருக்கு ஆடையாகவும், நன்மையை அவரின் சின்னமாகவும், இறையச்சத்தை அவரின் இதயமாகவும், ஞானத்தை அவரின் மூளையாகவும், உண்மையையும், வாக்குறுதி நிறைவேற்றலையும் அவர்களின் இயற்கைத் தன்மையாகவும் மன்னிப்பையும் நற்செயல்களையும் அவர்களின் இயல்பாகவும், நீதியை அவர்களின் நடை முறையாகவும், சத்தியத்தை அவர்களின் சன்மார்க்கப் பாதையாகவும், நேர்வழியை அவர்களின் முன்னோடி யாகவும், இஸ்லாமிய நெறியை அவர்களின் சமுதாய மாகவும், அஹ்மது எனும் சொல்லை அவர்களின் திருப் பெயராகவும் நான் ஆக்குவேன். வழி கேட்டிற்குப் பின்னர் அவர்களின் மூலம் நேர்வழி காட்டுவேன். வறுமைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு செல்வமாக்குவேன். அறியாமைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு அறிவிப்பேன். தாழ்வு நிலைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு உயர்த்துவேன். பெயர் அடையாளங்கள் அறியப்படாத நிலைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு பெயர் சூட்டுவேன். குறைவுக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு அதிகமாக்குவேன். பிரிவினைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு ஒன்று சேர்ப்பேன். பிரிந்து விட்ட சமுதாயத்துக்கு மத்தியிலும், வெவ்வேறு இச்சைகளுக்கு மத்தியிலும், வேறுபட்ட இதயங்களுக்கு, மத்தியிலும், அவர்களைக் கொண்டு அன்பை ஏற்படுத்துவேன். மக்களை நோக்கி வெளியேற்றப்பட்ட சமுதாயத்தில் சிறந்த சமுதாயமாக அவருடைய சமுதாயத்தை ஆக்குவேன்.

இப்னு இஸ்ஹாக் கூறியதாக கஃபுல் அஹ்பாருடைய அறிவிப்பின் வழித்தடங்களிலிருந்து ஒன்றில் கீழ்க் கண்டவாறு வந்துள்ளது. நபியவர்கள் கடைவீதிகளில் கூச்சலிட்டுப் பேசுபவரல்ல. தீய சொற்களை எடுத்துச் சொல்பவரல்ல. தீய செயல்களை செய்யும் தன்மை உடையவரல்ல. அனைத்து வித அழகிய குணத்தின்பால் நான் அவரைச் சீர்படுத்துவேன். கண்ணியமான குணங்கள் அனைத்தையும் அவருக்கு நான் வழங்குவேன். அடக் கத்தை அவருக்கு ஆடையாகவும், நன்மையை அவரின் சின்னமாகவும், இறையச்சத்தை அவரின் இதயமாகவும், ஞானத்தை அவரின் மூளையாகவும், உண்மையையும், வாக்குறுதி நிறைவேற்றலையும் அவர்களின் இயற்கைத் தன்மையாகவும் மன்னிப்பையும் நற்செயல்களையும் அவர்களின் இயல்பாகவும், நீதியை அவர்களின் நடை முறையாகவும், சத்தியத்தை அவர்களின் சன்மார்க்கப் பாதையாகவும், நேர்வழியை அவர்களின் முன்னோடி யாகவும், இஸ்லாமிய நெறியை அவர்களின் சமுதாய மாகவும், அஹ்மது எனும் சொல்லை அவர்களின் திருப் பெயராகவும் நான் ஆக்குவேன். வழி கேட்டிற்குப் பின்னர் அவர்களின் மூலம் நேர்வழி காட்டுவேன். வறுமைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு செல்வமாக்குவேன். அறியாமைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு அறிவிப்பேன். தாழ்வு நிலைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு உயர்த்துவேன். பெயர் அடையாளங்கள் அறியப்படாத நிலைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு பெயர் சூட்டுவேன். குறைவுக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு அதிகமாக்குவேன். பிரிவினைக்குப் பின்னர் அவர்களைக் கொண்டு ஒன்று சேர்ப்பேன். பிரிந்து விட்ட சமுதாயத்துக்கு மத்தியிலும், வெவ்வேறு இச்சைகளுக்கு மத்தியிலும், வேறுபட்ட இதயங்களுக்கு, மத்தியிலும், அவர்களைக் கொண்டு அன்பை ஏற்படுத்துவேன். மக்களை நோக்கி வெளியேற்றப்பட்ட சமுதாயத்தில் சிறந்த சமுதாயமாக அவருடைய சமுதாயத்தை ஆக்குவேன்.

## வேது பைத்து

اَللّٰهُ خَالِقُنَا □ اَللّٰهُ رَازِقُنَا

اَللّٰهُ هَادِيْنَا □ سُبْحَانَ مَوْلٰنَا

⬡ تَمْجِيْدِنِ الْقَهَّارُ ⬡

அல்லாஹு எமைப் படைத்தவன். அல்லாஹு எமக்கு உணவளிப்பவன். அல்லாஹு எமக்கு வழிகாட்டுபவன். அடக்கி ஆள்பவனான எம் எஜமானை தலைமைப்படுத்தி தூய்மைப்படுத்துவோம்.

صَلُّوْا عَلَى الْمُخْتَارِ □ يَا مَعْشَرَ الْحُضَّارِ

ذِى الْحُسْنِ وَالْاَنْوَارِ □ وَاسْتَغْفِرُوا الْغَفَّارَ

⬡ تَنْجُوْ مَعَ الْاَبْرَارِ ⬡

வருகை தந்திருப்பவர்களின் கூட்டமே! அழகும் ஒளிகளும் உடையவர்களாகிய தேர்ந்தெடுக்கப்பட்ட திரு நபி மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். மிகப் பெரிய மன்னிப்பாளனாகிய அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருங்கள். இதனால் நீங்கள் உத்தமர்களுடன் சேர்ந்து ஈடேற்றம் பெற்றிடுவீர்கள்.

compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

يَامَوْلِدَ الْهَادِيْ ◻ أَذْهَبْتَ أَنْكَادِيْ

بُشْرٰى بِإِسْعَادِيْ ◻ لِلْجَارِ وَالْبَادِيْ

⬡ وَالْوَفْدِ وَالزُّوَّارِ ⬡

வழிகாட்டி நபியின் பிறந்தநாளே! என்னுடைய பற்றாக்குறையை நீ நீக்கி விட்டாய்! அண்டை வீட்டாருக்கும், கிராமவாசிகளுக்கும், தூதுக்குழுவினருக்கும், தரிசிப்பவர்களுக்கும் நற்பேறு வழங்கும் தன்மையால் மங்களம் உண்டாகுக!

نُوْرُ الْمُفَدّٰى لَاحْ ◻ وَافَتْ بِهِ الْأَفْرَاحْ

طَابَتْ بِهِ الْأَرْوَاحْ ◻ بِالسَّعْدِ وَالْإِفْلَاحْ

⬡ مِنْ رَّحْمَةِ السَّتَّارِ ⬡

அர்ப்பணம் செய்யப்படுகிற அருள் நபியின் ஒளி இலங்கியது. அந்த ஒளியினால் மகிழ்ச்சிகள் நிறைந்து விட்டன. குறைகளை மிகவும் மறைத்திடும் இறைவனின் கருணையின் காரணத்தால் வெற்றியளிப்பது மூலமாகவும், நற்பேறு மூலமாகவும் ஆன்மாக்கள் அந்த ஒளியினால் நறுமணம் பெற்று விட்டன.

هٰذَا حَبِيْبُ اللّٰهِ ◻ هٰذَا رَسُوْلُ اللّٰهِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

هٰذَا عَظِيْمُ الْجَاهِ □ مَنْ خَصَّهٗ مَوْلَاهُ

⬡ بِرِفْعَةِ الْمِقْدَارِ ⬡

இவர்கள் அல்லாஹ்வின் நேசராவார்கள். இவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராவார்கள். இவர்கள் கண்ணியமான தலைமைப் பதவி உடையவராவார்கள். எவரை அவருடைய எஜமான் உயர்ந்த அளவைக் கொண்டு குறிப்பாக்கினானோ அத்தகையவர் இவர்களாவார்கள்.

يَا هَادِيَ الْأَكْيَاسِ □ يَا مَالِيَ الْأَكْيَاسِ

قَدْ جِئْتُ بِالْإِفْلَاسِ □ إِلٰى شَفِيْعِ النَّاسِ

⬡ مِنْ فَوْحِ حَرِّ النَّارِ ⬡

கூர்மதியாளர்களின் நேர்வழி காட்டியே! என்னுடைய பைகளில் நிறைந்திருக்கும் நிதியே! நரக வெப்பத்தின் தகிப்பிலிருந்து மனிதர்களுக்கு மன்றாடும் நபிபால் நிச்சயமாக நான் கைப்பொருள் இழந்து வந்து விட்டேன்.

ضَاقَتْ بِيَ الْأَسْبَابُ □ فَجِئْتُ هٰذَا الْبَابُ

أُقَبِّلُ الْأَعْتَابُ □ أَبْغِيْ رِضَا الْأَحْبَابِ

⬡ وَالسَّادَةِ الْأَخْيَارِ ⬡

எனக்குக் காரணங்கள் (உபாயங்கள்) நெருக்கடியாகி விட்டன. எனவே நபியே தங்களின் இந்த வாசலுக்கு நான் வந்துவிட்டேன். தங்களின் வாசலின் இந்தப் படிகளை முத்தமிடுகிறேன். நேசர்கள் உடையவும், நல்லவர்களான தலைவர்கள் உடையவும், பொருத்தத்தை தேடுகிறேன்.

ضَاءَتْ لَنَا الْاٰفَاقُ □ مِنْ طِيْبِ الْاَخْلَاقِ
بِالنُّوْرِ وَالْاِشْرَاقِ □ قَدْ خَصَّكَ الْخَلَّاقُ
⬡ يَا عَالِيَ الْمِقْدَارِ ⬡

நற்குணங்கள் நறுமணமான நன்னபியின் காரணத்தால் எங்களுக்காக ஒளியைக் கொண்டும், ஒளிகளின் உதயத்தைக் கொண்டும் வானவெளிகள் இலங்கின. அளவால் உயர்ந்த அருள் நபியே! அளப்பரிய படைப்பாளனாகிய அல்லாஹ் நிச்சயமாகத் தங்களைக் குறிப்பாக்கி விட்டான்.

فِيْ طَيْبَةَ الْاَوْقَاتُ □ طَابَتْ مَعَ السَّادَاتْ
اِحْسَانُهُمْ عَادَاتُ □ مِنْ عَفْوِهِمْ مَّافَاتْ
⬡ تُمْحٰى مِنَ الْاَوْزَارِ ⬡

மதீனத்து மண்ணில், நேரங்கள் தலைவர்களுடன் மணம் தந்து விட்டன. அவர்களுக்குரிய வழக்கங்களே, மற்றவர் களுககு அவர்கள் நன்மை செய்வதாகும். அந்த உத்தமா

களின் மன்னிக்கும் தன்மையிலிருந்து எவரும் விடுபட்டு விடவில்லை. பாவச் சுமையாம், கறைகளிலிருந்து நீ அழிக்கப்பட்டு விடுவாய்!

فَلَمَّا كَانَ وَقْتُ ظُهُوْرِهٖ ○ وَاِشْرَاقُ الْكَوْنِ بِنُوْرِهٖ
فَبَيْنَمَا اٰمِنَةُ فِيْ بَيْتِهَا وَحِيْدَةٌ ○ مُسْتَاْنِسَةٌ
بِبَرَكَتِهٖ وَهِيَ فَرِيْدَةٌ ○ وَلَمْ تَشْعُرْ اِلَّا وَقَدْ
اَشْرَقَ فِيْ بَيْتِهَا النُّوْرُ ○ وَعَمَّهَا الْفَرَحُ وَالسُّرُوْرُ
وَاَقْبَلَتِ الْمَلَائِكَةُ وَالْحُوْرُ ○ وَحَفَّ حُجْرَتَهَا
اَنْوَاعُ الطُّيُوْرِ ○ وَهِيَ تَسْمَعُ لِازْدِحَامِهِمْ
وَاحْتِفَالِهِمْ بِقُدُوْمِ الْحَبِيْبِ هَمْسًا وَكَيْفَ
لَا وَسَيِّدُ الْعَالَمِيْنَ فِيْ بَيْتِهَا اٰمْسٰى ○

## 7வது துஹிக்காயத்

நபி (ஸல்) அவர்கள் மண்ணுலகில் வெளிப்படும் நேரம் வந்த போது- அவர்களின் ஒளியினால் இவ்வுலகம் இலங்கத் தொடங்கிய போது ஆமினா அம்மையார் தன்னுடைய வீட்டிற்குள் தனித்திருக்கும் தருணத்தில், தன்னந்தனியாக இருக்கும் நிலையிலேயே, தாஹா நபி (ஸல்) அவர்களின் பரக்கத்தினால் மகிழ்ச்சியாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த தருணத்தில் - நிச்சயமாக அம்மையாரின் வீட்டிற்குள் ஒளி ஒன்று இலங்கிய நிலையினைத் தவிர, வேறெதையும் அம்மையார் உணரவே இல்லை. ஆனந்தமும் மகிழ்ச்சிகளும் அம்மையாரைப் பொதுவாக்கிக் கொண்டன. மலக்குகளும் ஒளியுடன் முன்னோக்கி

வந்தனர். பல்வேறு இனப்பறவைகள் அம்மையாரின் அறையைச் சூழ்ந்துக் கொண்டன. அல்லாஹ்வின் நேசர் அகிலத்தை முன்னோக்கி வந்ததையொட்டி ஆமினாவின் இல்லத்தில் மலக்குகள் திரண்ட காரணத்தாலும் அவர்களின் நெருக்கடியினாலும் எழுந்த மெல்லிய ஒலியை ஆமினா அம்மையார் கேட்டார்கள். ஆம்! அனைத்து உலகங்களின் அருமைத் தலைவர் ஆமினா அம்மையாரின் இல்லத்திற்குள் அமைந்து விட்ட நிலையில் எப்படி இவ்வாறு இல்லாமல் இருக்க முடியும்?

## 7வது பைத்து

صَلَوَاتُ اللّٰهِ عَلَى الْمَهْدِيْ
وَمُغِيْثِ النَّاسِ مِنَ الْوَهَجِ
صَلَوَاتُ اللّٰهِ بِكُلِّ فَمٍ
تَغْشَى الْهَادِيْ لِهُدَى الْبَلَجِ

வழி காட்டப்பட்டவரும் வாட்டும் நரக நெருப்பிலிருந்து மக்களைக் காப்பாற்றுவோருமான நபி (ஸல்) மீது அல்லாஹ்வின் ஸலவாத் உண்டாகுக! ஒவ்வொரு வாயினாலும் சொல்லப்படுகிற அல்லாஹ்வின் ஸலவாத்து, ஒளிமயமான நேர்வழியின் பால் வழி காட்டும் நபியைச் சூழ்ந்து கொள்ளும்.

إِنَّ بَيْتًا أَنْتَ سَاكِنُهُ
لَيْسَ مُحْتَاجًا إِلَى السُّرُجِ
وَجْهُكَ الْوَضَّاحُ حُجَّتُنَا
يَوْمَ يَأْتِي النَّاسُ بِالْحُجَجِ

நபியே! நிச்சயமாகத் தாங்கள் குடியிருக்கும் வீடு விளக்குகளின் பால் தேவைப்படக் கூடியதாக இல்லை. ஆதாரங்களைக் கொண்டு மக்கள் வரும் மறுமை நாளில் சுடர் விட்டு இலங்கும் தங்கள் திருமுகம் எங்களின் ஆதாரமாகத் திகழும்.

وَمَرِيضًا أَنْتَ عَائِدُهُ
قَدْ أَتَاهُ اللّٰهُ بِالْفَرَجِ
فَازَ مَنْ قَدْ كُنْتَ بُغْيَتَهُ
وَسَمَا فِي أَرْفَعِ الدَّرَجِ

தாங்கள் நலம் விசாரிக்கச் சென்ற நோயாளிக்கு அல்லாஹ் ஆனந்தத்தைக் கொண்டு வந்தான். தாங்கள் யாருக்குத் தேட்டமாக இருந்தீர்களோ அத்தகையவர் வென்று விட்டார். மேலும் அவர் மிக உன்னதமான பதவியில் உயர்ந்துவிட்டார்.

وَنَدَى فِي الْحُبِّ مُهْجَتَهُ
سَامِحًا فِي الرُّوحِ وَالْمُهَجِ
يَا كَرِيمًا جَدَّ رَاحَتُهُ
فَكَفَيْتَ الْبَحْرَ وَاللُّجَجِ

உயிரையும், உதிரங்களையும் கொடை கொடுக்கும் நிலையில்- இத்தகையவர், இனிய நபி நேசத்தில் தன்னுடைய உதிரத்தைக் கொடை கொடுத்து விட்டார். தன்னுடைய உள்ளங்கை கண்ணியமாகி விட்ட சங்கை யாளரே! அதனால் தாங்கள் கடலையும், பெரும் அலை களையும் தடுத்து விட்டீர்!

اَنْتَ مُنْجِيْنَا مِنَ الْحُرَقِ
مِنْ لَّهِيْبِ النَّارِ وَالْاَجَجِ
ذَنْبُنَا مَاحِيْ لِيَمْنَعُنَا
مِنْ ذُرُوْفِ الدَّمْعِ وَالْعَجَجِ

நரக நெருப்பின் ஜுவாலையினாலும் அதன் கடும் வெப்பத்தினாலும் கரிந்து போகாமல் எங்களைக் காப்பாற்று வது தாங்களே ஆவீர்! எங்களின் பாவங்கள் அழிப்பவரே! தாங்கள் பாவங்களை அழிப்பது எங்களைக் கண்ணீர் வடிப் பதிலிருந்தும், கதறுவதிலிருந்தும் தடுத்துவிடும்.

حُبُّكُمْ فِيْ قَلْبِنَا مَحْوٌ
مِنْ رَّيْنِ الذَّنْبِ وَالْحَرَجِ
صَبُّكُمْ وَاللّٰهِ لَمْ يَخِبِ
لِكَمَالِ الْحُسْنِ وَالْبَهَجِ

தங்களின்பால் நாங்கள் வைத்திருக்கும் நேசம் எங்களின் இதயத்திலிருக்கிறது. அது எங்களின் பாவக் கறைகளிலிருந்தும், குற்றத்திலிருந்தும் உள்ளவற்றை அழித்து விடும். தங்களின் நேசன் முழுமையான அழகையும் ஒளியையும் பெறுகிற காரணத்தால் அல்லாஹ்மீது சத்தியமாக அவர் இழப்பினை அடையவில்லை.

اِنَّنَا نَرْجُوْا بِشَافِعِنَا
لِصَلَاحِ الدِّيْنِ وَالنَّهَجِ
وَمُنَجِّيْنَا مِنَ الْبَلْوٰى
طِيْبُهٗ فِي الْعَالَمِ الْاَرِجِ

மார்க்கத்துடையவும், வாழ்க்கைப் பாதையுடையவும் நன்மையை நாங்கள் அடைவதற்காக வேண்டி, எங்களுக்கு பரிந்துரைக்கும் நபியைக் கொண்டு நாங்கள் ஆதரவு வைக்கிறோம். அவர்கள் எங்களை வேதனையிலிருந்து காப்பாற்றினார்கள். அவர்களின் நறுமணம் சுகந்தத்தின் உலகில் சுற்றி வருகிறது.

رَبِّ وَارْزُقْنَا زِيَارَتَهُ
قَبْلَ قَبْضِ الرُّوْحِ وَالْخُرُجِ
صَلِّ يَارَبِّيْ عَلَى الْهَادِيْ
لِسَبِيْلِ الْحَقِّ وَالْفَرَجِ

இறைவா! எங்களின் உயிரைக் கைப்பற்றுவதற்கும், நாங்கள் உலகை விட்டு வெளியேறுவதற்கும் முன்னரே நபியின் புனித ரவ்ழா தரிசனத்தை எங்களுக்குத் தந்தருள் வாயாக! சத்தியப் பாதை மற்றும் மகிழ்ச்சிப் பாதையின் பால் வழிகாட்டும் நபி மீது இறைவா! நீ ஸலவாத்துச் சொல் வாயாக!

وَجَاءَتْ حُوْرُ الْجِنَّاتِ ○ بِأَنْوَارِهَا الْوَاضِحَاتِ
تَنُوْبُ عَنِ الْقَوَابِلِ الْبَشَرِيَّةِ ○ وَتَتَشَرَّفُ
بِالطَّلْعَةِ الْمُحَمَّدِيَّةِ وَجَاءَهَا الْمَخَاضُ ○
لِيَقْضِيَ اللّٰهُ مَاهُوَ قَاضٍ ○ وَكَبَّرَتِ الْأَمْلَاكُ
وَسَبَّحَتِ الْأَفْلَاكُ ○ وَتَزَخْرَفَتِ الْجِنَانُ وَ
تَزَيَّنَتِ الْحُوْرُ وَالْوِلْدَانُ ○ ثُمَّ لَمَّا جَدَّ بِآمِنَةَ
طَلْقُ الْوِلَادَةِ وَاَنَّ ظُهُوْرُ بُرُوْزِ نُوْرِ جَمَالِ
السَّعَادَةِ ○ لَمْ تَجِدْ كَمَا تَجِدُ النِّسَاءُ كَالْعَادَةِ
تَلَأْلَأَ الْجَوُّ نُوْرًا وَاَضَاءَ ○ وَنَشَرَتْ لَهُ فِى الْكَوْنِ

أَعْلَامُ الرِّضَا ○ فَوَضَعَتِ الْحَبِيبَ الْمُصْطَفَى
الْمُخْتَارَ ○ سَاجِدًا لِلّٰهِ الْوَاحِدِ الْقَهَّارِ ○
بِوَجْهٍ أَبْهٰى مِنَ الْقَمَرِ وَأَنْوَرَ ○ وَعَرْفٍ
أَذْكٰى مِنَ الْمِسْكِ الْأَذْفَرِ ○ رَافِعًا طَرْفَهُ
إِلَى السَّمَا ○ مُشِيرًا بِإِصْبَعِهِ مُتَبَسِّمًا ○
فَجَعَلَ اللّٰهُ مَكَانَ مَوْلِدِهِ وَمَنْشَاهُ حَرَمًا ○ وَ
عَلَا فِي مَجْدِ الْفَخَارِ سُؤْدَدُهُ وَسَمَا ○ وَوُلِدَ
صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ مَخْتُونٌ مَدْهُونٌ
مَكْحُولٌ ○ عَلَى الصِّفَاتِ الْجَمِيلَةِ وَالْخُلُقِ
الْعَظِيمِ مَجْبُولٌ ○

## 8வது ஹிக்காயத்

முஹம்மது (ஸல்) அவர்களின் உதயத்தினால் சிறப் படையக் கூடியவர்களும், மானிட இனத்து மழலைகளை தாய் வயிற்றிலிருந்து வெளியிலெடுக்கும் தாதியர் களுக்குப் பதிலாக அமைந்தவர்களுமான சுவனத்து சுந்தரி களாம் ஹுருல் ஈன்கள்- ஆமினா அம்மையாரின் இல்லத் திற்கு சுவனத்தின் தெளிவான ஒளிகளைக் கொண்டு வந்த னர். அல்லாஹ் விதித்த ஒன்றை விதிப்பதற்காக ஆமினா அம்மையாருக்கு பிள்ளைப்பேற்றின் வலிக்குரிய நிலை வந்தது. வானவர்கள் அந்நேரம் தக்பீர் முழங்கினர். வானத்துக் கோளங்கள் தஸ்பீஹ் செய்தன. சுவனங்கள் சுந்தர வடிவம் பெற்றன. சுவனத்துக் கன்னிகளும், பணி

விடைச் சிறுவர்களும் தம்மைச் சிங்காரித்துக் கொண்டனர். மேலும் ஆமினா அம்மையாருக்குப் பிள்ளைப் பேற்றின் வலி ஏற்பட வேண்டிய நிலை உச்சகட்டமான போது-நற்பேற்றிற்குரிய அழகின் ஒளியுடைய உதய நேரம் வந்த போது வனிதையர்கள் வழக்கமாக அடைகின்ற வன்மை யான வலி மற்றும் உதிரப்போக்கு போன்ற நிலையை ஆமினா அம்மையார் அடையவில்லை. வானவெளி அந் நேரம் வண்ண ஒளியால் சுடர் விட்டிலங்கியது. திருப்தி யின் திருக்கொடிகள் அருள் நபி அவர்களுக்காக அக்கணம் அகிலமெங்கும் ஏற்றப்பட்டன.

அந்நேரம், தேர்ந்தெடுக்கப்பட்டவரும் தெளிவாக்கப் பட்டவருமான நன்னேசர் நபிமணி (ஸல்) அவர்கள் வான்மதியை விஞ்சி நிற்கும் வண்ண ஒளி வீசும் வதனத்துடனும், வாசம் கமழும் கஸ்தூரியை விட மேம் பட்ட நறுமணத்துடனும் விண்ணை நோக்கித் தம் கண் களை உயர்த்திய நிலையிலும் புன்னகை பூத்த வண்ண மாகவும் ஏகனாகிய அடக்கியாள்பவனாம் அல்லாஹ்வுக்காக ஸஜ்தாச் செய்த நிலையிலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை ஆமினா அம்மையார் ஈன்றெடுத்தார்கள்.

எனவே, நபி (ஸல்) அவர்கள் பிறந்து வளர்ந்த இடத்தை புனிதத் தலமாக அல்லாஹ் ஆக்கி விட்டான். மேலும், நபி (ஸல்) அவர்களின் தலைமைப் பதவி, பெருமையின் பதவியினில் ஓங்கி உயர்ந்து விட்டது. மேலும் விருத்த சேதனம் செய்யப்பட்ட நிலையிலும், கண்ணுக்குச் சுருமா தீட்டப்பட்ட நிலையிலும் அழகிய தன்மைகள் மகத்தான குணம் இயல்பாக அமைக்கப்பட்ட நிலையிலும் பெருமான் நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

## 8வது பைத்து

يَارَبَّنَا يَارَبَّنَا يَارَبَّنَا
يَارَبِّ صَلِّ عَلَى النَّبِيِّ مُحَمَّدٍ

எங்கள் இறைவா! எங்கள் இறைவா! எங்கள் இறைவா! முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லிடுவாய் என்னிறைவா!

كُلُّ السُّرُوْرِ بَدَا بِشَهْرِ الْمَوْلِدِ
شَهْرٌ بَدَا فِيْهِ جَمَالُ مُحَمَّدٍ

மாநபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதத்தில் மகிழ்ச்சி களெல்லாம் வெளிப்பட்டன. எந்த மாதத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின் அழகு வெளிப்பட்டதோ அந்த மாதம் இந்த மாதமாகும்.

فِيْ لَيْلَةٍ مِنْهُ اَضَاءَ عَلَى الْوَرٰى
نُوْرُ الْمُؤَيَّدِ بِالْفَخَارِ الْاَوْحَدِ

ஏகாந்தனான இறைவனின் எல்லையிலா பெருமையின் மூலம் வலுவாக்கப்பட்ட வள்ளல் நபியொளி, இம்மாதத் தில் ஒரிரவில் படைப்பினங்கள் மீது பரிணமித்தது.

وَضَعَتْهُ اٰمِنَةٌ وَّلَمْ يَشْعُرْ بِهَا
اَحَدٌ لِّيُخْفٰى عَنْ عُيُوْنِ الْحُسَّدِ

பொறாமைக்காரர்களின் கண்களை விட்டு மறைக்கப்பட வேண்டும். என்பதற்காக ஆமினா அம்மையாரைப் பற்றி எந்த நபரும் அறியாதிருக்கும் நிலையிலேயே அண்ணலாரை அம்மையார் பெற்றெடுத்தார்கள்.

وَاَتَتْ مَلٰئِكَةُ السَّمَآءِ تَزُوْرُهٗ
وَتَنَالُ مِنْ رُّؤْيَاهُ اَشْرَفَ مَقْصَدِ

அண்ணலாரைத் தரிசித்திடவும் அவர்களைப் பார்ப்பதினால் தமது மிகச் சிறந்த நாட்டத்தை அடைந்திடவும் வானத்து அமரர்கள் அன்று வையகத்திற்கு வருகை தந்தனர்.

جَآؤُا بِاِبْرِيْقٍ وَّطَشْتٍ رُصِّعَتْ
جَنَبَاتُهٗ مِنْ لُّؤْلُؤٍ وَّزَبَرْجَدِ

கேத்தல் மற்றும் கிண்ணங்களுடன் அந்த அமரர்கள் வந்தனர். அவற்றின் சுற்றுப் பாகங்கள் முத்தினாலும், மரகதத்தினாலும் பதிப்பிக்கப்பட்டிருந்தன.

غَسَلُوْا جِلَاهُ وَخَتَّمُوْهُ بِخَاتَمٍ
تَمَّتْ بِرُؤْيَتِهٖ نُبُوَّةُ اَحْمَدِ

நபி அவர்களின் கண்ணில் போடப்பட்டிருந்த சுருமாவை மலக்குகள் கழுவி அந்த சுருமாவினால் இறுதி நபித்துவ முத்திரை பதித்தார்கள். அந்த முத்திரைக் காட்சியினால் அஹ்மது நபி (ஸல்) அவர்களின் நபித்துவம் முடிவு பெற்றது.

مِنْ مَّآءِ زَمْزَمَ كَانَ غَسْلُ صُدُوْرِهٖ
وَلِزَمْزَمَ الشَّرَفُ الْجَسِيْمُ بِمُسْنَدِ

ஜம் ஜம் கிணற்று நீரினால் நபி (ஸல்) அவர்களின் நெஞ்சம் கழுவப்பட்டிருந்தது. அந்த நெஞ்சத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டதால் ஜம் ஜம் நீருக்கே மிகப் பெரும் சிறப்பு கிடைத்தது.

نَادٰىهُمُ الرَّحْمٰنُ اَنْ طُوْفُوْا بِهٖ
بِالْعَرْشِ مَعَ دَارِ النَّعِيْمِ الْاَرْغَدِ

"உல்லாசபுரியான " தாருன்னயீம்" சுவனம் உள்பட அர்ஷுக்கு அருள் நபியை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டுங்கள்" என்று, அளவற்ற அருளாளன் அமரர்களை அழைத்துச் சொன்னான்.

ثُمَّ اعْرِضُوْهُ عَلَى الْخَلَائِقِ كُلِّهَا
مِنْ كُلِّ رُوْحَانٍ وَّكُلِّ مُجَسَّدِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

''பின்னர், அனைத்து வகை ஆன்மாக்கள் மற்றும் அனைத்து வகை ஸ்தூலங்கள் ஆகிய எல்லாவிதப் படைப் பினங்களுக்கும், ஏந்தல் நபியை எடுத்துக் காட்டுங்கள்!'' என்று இறைவன் கூறினான்.

فَهُوَ الَّذِيْ مَنْ كَانَ فِي الدُّنْيَا لَهٗ
طَوْعًا يُهَنَّا بِالسَّلَامَةِ فِيْ غَدٍ

''எத்தகையவருக்கு இம்மையில் கட்டுப்பட்டவர் நாளை மறுமையில் ஈடேற்றம் பெறுவார்'' என்று, வாழ்த்து கூறப் படுகிறதோ அத்தகையவர் நபி மணி (ஸல்) ஆவார்கள்.

صَلَّى الْاِلٰهُ وَمَنْ يَّحُفُّ بِعَرْشِهٖ
وَالطَّيِّبُوْنَ عَلَى النَّبِيِّ مُحَمَّدٍ

இறைவனும் அவனது அர்ஷைச் சூழ்ந்திருக்கும் மலக்கு களும் ஏனைய தூயவர்களும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறினர்.

فَلَمَّا نَظَرَتْ اِلَيْهِ اٰمِنَةُ دَهِشَتْ فِيْ جَمَالِهٖ ۝
وَابْتَهَجَتْ بِرَوْنَقِ كَمَالِهٖ ۝ وَهُوَ فِيْ حُلَلِ
الْبَهَاۤءِ وَالْوَقَارِ مَلْفُوْفٌ ۝ وَالْمَلٰۤئِكَةُ مِنْ
حَوْلِهٖ صُفُوْفٌ ۝ فَسَمِعَتْ قَاۤئِلًا يَقُوْلُ طُوْفُوْا
بِمُحَمَّدٍ جَمِيْعَ الْاَقْطَارِ ۝ وَاعْرِضُوْهُ عَلٰى اَهْلِ

السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَالْبِحَارِ ○ فَغُيِّبَ عَنْهَا سَيِّدُ الْكَوْنَيْنِ ○ ثُمَّ رُدَّ اِلَيْهَا فِيْ اَسْرَعَ مِنْ طَرْفَةِ عَيْنٍ فَاَرْسَلَتْ اِلٰى جَدِّهٖ عَبْدِ الْمُطَّلِبِ ○ فَجَآءَ اِلَيْهَا وَسَئَلَهَا عَنْ حَالِهَا وَمَا لَدَيْهَا ○ فَاَخْبَرَتْهُ بِاَسْرِ الْاَخْبَارِ ○ وَمَا شَاهَدَتْهُ مِنْ مُّعْجِزَاتِ صَاحِبِ الْاَنْوَارِ ○ فَاَخَذَهٗ جَدُّهٗ عَبْدُ الْمُطَّلِبِ ○ وَنَظَرَ اِلَيْهِ فَتَبَسَّمَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيْ وَجْهِ جَدِّهٖ وَاَقْبَلَ عَلَيْهِ فَقَالَ شِعْرًا ○

## 9வது ஹிக்காயத்து

எனவே, ஆமினா அம்மையார் தன்னருமைப் பாலகனைப் பார்த்த போது அவர்களின் பேரழகினால் பிரமித்துப் போனார்கள். அவர்களின் முழுமையின் அழகொளியினால் அன்னை ஆமினாவும் அழகினைப் பெற்றார்கள். ஒளி மற்றும் ஒப்பற்றக் கம்பீரம் ஆகிய துணிகளுக்குள் நபியவர்கள் சுற்றி வைக்கப்பட்டிருந்தார்கள். அமரர்கள் அவர்களைச் சுற்றி அணிவகுப்பாயினர். "அண்ட கோடிகளின் அனைத்துக் கோணங்களிலும் அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொண்டு சுற்றி வாருங்கள். மேலும் விண்ணவர்கள் மண்ணவர்கள் மற்றும் கடல்களின் மீதெல்லாம் அவர்களை எடுத்துக் காட்டுங்கள்," என்று, அறிவிப்புச் சொல்லக் கூடிய ஒருவரின் கூற்றை ஆமினா அம்மையார் கேட்டார்கள். எனவே, ஈருலகத்தலைவர், அம்மையாரை விட்டும் மறைக்கப்பட்டார்கள். பின்னர்

கண்ணிமைக்கும் நேரத்தை விட மிகத் துரிதமாக அம்மையாரை நோக்கித் திருப்பிக் கொண்டு வரப்பட்டார்கள். பின்னர் அண்ணலாரின் பாட்டனார் அப்துல் முத்தலிபுக்கு அம்மையார் ஆளனுப்பவே அம்மையாரை நோக்கி வந்த அப்துல் முத்தலிப்- அம்மையாரின் நிலை குறித்தும், அம்மையாரிடம் இருக்கும் அன்புமழலையின் நிலை குறித்தும் விசாரித்தார்கள். அப்போது அப்துல் முத்தலிபிடம் செய்திகளனைத்தையும் அம்மையார் எடுத்துச் சொன்னார்கள். ஒளிகளுக்கு உரியவரான உத்தம நபியின் அற்புதங்களிலிருந்து தான் பார்த்ததையெல்லாம் அம்மையார் பகர்ந்தார்கள். அப்போது அண்ணலாரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் தன் அன்புப் பேரரை கையிலெடுத்து நோட்டமிட்டார்கள். அப்போது தன் பாட்டனாரின் முகத்தை நோக்கிப் பூமான் நபி (ஸல்) அவர்கள் புன்னகை பூத்து அந்த முகத்தை முன்னோக்கினார்கள். அப்போது அப்துல் முத்தலிப் கீழ்க் கண்டவாறு கவிதை பாடினார்கள்.

## 9வது பைத்து

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَعْطَانِيْ

هٰذَا الْغُلَامَ الطَّيِّبَ الْاَرْدَانِ

قَدْ سَادَ فِي الْمَهْدِ عَلَى الْغِلْمَانِ

اُعِيْذُهٗ بِاللّٰهِ ذِى السُّلْطَانِ

حَتّٰى اَرَاهُ بَالِغَ الْبَيَانِ
اُعِيْذُهُ مِنْ شَرِّ ذِيْ شَنْاٰنِ
مِنْ حَاسِدٍ مُّضْطَرِمِ الْعَيْنَانِ
اَنْتَ الَّذِيْ سُمِّيْتَ فِي الْقُرْاٰنِ

"மணமான இந்த மழலையினை எனக்குத் தந்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்! இம்மழலை ஏனைய மழலைகளுக்குத் தொட்டிலிலேயே தலைவராகி விட்டார். இவர் நபித்துவ விளக்கத்தைப் பெற்று விட்டதை நான் பார்க்கும் வ்ரை அதிகாரம் மிக்க அல்லாஹ்விடம் இவர் களுக்காக நான் பாதுகாப்புத் தேடுகிறேன். கரித்து விடும் கண்களை உடைய பொறாமைக்காரரிலிருந்தும் தீங்கிலி ருந்தும் இவருக்காகப் பாதுகாப்புத் தேடுகிறேன். பேரரே! நீவிர் பேணி ஓதப்படும் வேதத்தில் பெயர் சொல்லப் பட்டி ருக்கிறீர்!"

اَحْمَدَ مَكْتُوْبًا عَلَى الْجِنَانِ
صَلّٰى عَلَيْكَ اللّٰهُ فِي الْاَحْيَانِ
اَحْمَدُهٗ فِي السِّرِّ وَالْاِعْلَانِ
حَقًّا عَلَى الْاِسْلَامِ وَالْاِيْمَانِ

சுவனங்களின் மீது அஹ்மது எனும் திருப்பெயர் எழுதப் பட்டவராக உள்ளீர்! உம்மீது அல்லாஹ் எல்லா நேரங்களி லும் ஸலவாத்துச் சொல்வானாக! இரகசியமாகவும் பகிரங்க மாகவும் - இஸ்லாமின் மீதும் ஈமானின் மீதும் - உண்மை யாக அல்லாஹ்வை நான் புகழ்கிறேன்.

صَلَّى عَلَيْكَ خَالِقُ الْجِنَانِ
مَادَامَ اَبَدُ الرَّحْمَةِ الرَّحْمَانِ

அளவற்ற அருளாளனின் அருள் நீடிக்கும் கால மெல்லாம், சுவனங்களைப் படைத்தவன் தங்கள் மீது ஸலவாத்துச் சொல்வானாக.

طَابَتِ الْقُلُوْبُ غُفِرَتِ الذُّنُوْبُ ○ سُتِرَتِ الْعُيُوْبُ ○
كُشِفَتِ الْكُرُوْبُ ○ طَابَتِ الْاَرْوَاحُ ○ عَاشَتِ الْاَشْبَاحُ ○
زَالَتِ الْاَتْرَاحُ تَوَالَتِ الْاَفْرَاحُ ○ اَشْرَقَتِ الْبِطَاحُ ○
بِاَنْوَارِ سَيِّدِ الْمِلَاحِ ○ نَارَ وَاسْتَنَارَ الْكَوْنُ بِوُجُوْدِهٖ
رُفِعَتْ بِالْبُشْرٰى اَلْوِيَةٌ بِنُوْدِهٖ ○ شَاعَ ذَاعَ سَطَعَ
نُوْرُ جَمَالِهٖ ○ فَرِحَ طَرِبَ الْعَالَمُ ابْتَهَجَ بِرَوْنَقِ كَمَالِهٖ ○
عَظُمَ كَرُمَ قَدْرُهٗ وَشَانُهٗ ○ بَهَرَ ظَهَرَ اٰيَـٰتُهٗ وَ
بُرْهَانُهٗ ○ عَذُبَ حَلَا جَلَا نُطْقُهٗ وَكَلَامُهٗ ○
ذَكَا زَكَا نَسَبًا نُوْرًا ابْتِنَا آيُهٗ وَاخْتِتَامُهٗ ○ رَحْمَةً

نِعْمَةٌ مِنَّةٌ بَعْثُهُ وَاِرْسَالُهُ ○ غَمَرَ عَمَّ شَمِلَ
نَوَالُهُ وَاِفْضَالُهُ ○ اَحْمَدُ حَامِدٌ وَّمَحْمُوْدٌ ○
وَصَاحِبُ الشَّفَاعَةِ وَالْحَوْضِ الْمَوْرُوْدِ ○ وَاللِّوَاءِ
الْمَعْقُوْدِ وَالْكَرَمِ وَالْجُوْدِ ○

اَلَّذِيْ مَا خَلَقَ اللّٰهُ لَا اَطْيَبَ وَلَا اَعْذَبَ ○ وَلَآ
اَرْتَبَ وَلَآ اَهْيَبَ ○ وَلَآ اَقْرَبَ وَلَآ اَسْمَحَ ○ وَلَآ اَفْصَحَ
وَلَآ اَمْلَحَ ○ وَلَآ اَنْجَحَ وَلَآ اَرْجَحَ ○ وَلَآ اَسْيَدَ وَلَآ
اَمْجَدَ ○ وَلَآ اَعْبَدَ وَلَآ اَحْمَدَ ○ وَلَآ اَرْشَدَ وَلَآ
اَسْعَدَ ○ وَلَآ اَطْهَرَ وَلَآ اَظْهَرَ، وَلَآ اَزْهَرَ وَلَآ اَبْهَرَ
وَلَآ اَشْهَرَ وَلَآ اَنْوَرَ، وَلَآ اَجْلَا وَلَآ اَحْلَا وَلَآ اَعْلَا وَلَآ
اَغْلَا وَلَآ اَزْهٰى وَلَآ اَبْهَا وَلَآ اَزْكٰى وَلَآ اَذْكٰى وَلَآ
اَشْرَفَ وَلَآ اَعْرَفَ، وَلَآ اَرْءَفَ وَلَآ اَلْطَفَ وَلَآ اَظْرَفَ
وَلَآ اَتْرَفَ وَلَآ اَرْفَعَ وَلَآ اَنْفَعَ وَلَآ اَشْجَعَ وَلَآ اَطْوَعَ
وَلَآ اَقْنَعَ وَلَآ اَوْرَعَ وَلَآ اَجْمَلَ وَلَآ اَفْضَلَ وَلَآ اَكْمَلَ
وَلَآ اَمْثَلَ وَلَآ اَعْدَلَ وَلَآ اَنْبَلَ وَلَآ اَرْحَمَ وَلَآ اَعْلَمَ،
وَلَآ اَحْلَمَ وَلَآ اَفْهَمَ وَلَآ اَقْوَمَ وَلَآ اَعْظَمَ، وَلَآ
اَفْخَمَ وَلَآ اَكْرَمَ ○ عَلَى اللّٰهِ مِنْ مُّحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ
وَسَلَّمَ وَزَادَهُ فَضْلًا وَّشَرَفًا لَّدَيْهِ ○

# 10வது ஹிக்காயத்

இதயங்கள் இனிய மணம் பெற்றன; பெரும் பிழைகள் மன்னிக்கப்பட்டன; குறைகள் மறைக்கப்பட்டன; கவலைகள் அகற்றப்பட்டன; ஆன்மாக்கள் வாசம் பெற்றன; உடல்கள் வாழ்க்கைப் பெற்றன; துயரங்களகன்றன. ஆனந்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்தன. சமுதாய மாலுமிகளுக்குத் தலைவரான திருநபியின் பேரொளிகளால் பரந்த சமவெளிகள் பரிணமித்தன. அவர்களின் உள்ளமையால் உலகம் ஒளிவீசி இலங்கின; நபியவர்களின் அசைவினால் நற்செய்திகளைக் கொண்டு கொடிகள் ஏற்றப்பட்டன; அவர்களின் அழகொளி பரந்து விரிந்து பளிச்சிட்டன. உலகம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தன. அவர்களின் முழுமையின் அழகொளியினால் அகிலமே அழகைப் பெற்றது. அவர்களின் சிறப்பும் மகத்துவமும் கண்ணியமாயின; சங்கையாயின; அவர்களின் ஆதாரமும் அத்தாட்சியும் தோன்றித் துலங்கின. அவர்களின் வாய்மொழியும் வாசகமும் இனிமையாயின; இன்பமாயின; இலங்கின; அவர்களின் தொடக்கமும், முடிவும் ஒளியால் அழகு பெற்று, தூய்மை பெற்று கூர்மை பெற்றன.

அவர்களை நபியாகவும், திருத்தூதராகவும் இறைவன் அனுப்பி வைத்தது, அவனுடைய அருளாகவும், அருட்கொடையாகவும், நன்மையாகவும், அமைந்து விட்டது. அவர்களின் கொடைத் தன்மையும், அருட்கொடை வழங்கலும் அதிகரித்து அனைவருக்கும் அது பொதுவாகி அனைவரையும் அது தன்னகத்தே தாங்கியுள்ளது. அவர்கள் மிகுந்த புகழுக்குரியவரும், இறைவனைப் புகழ்வோரும், புகழப்பட்டவர்களும் ஆவார்கள். அவர்கள் மறுமையில் உள்ள மன்றாட்டத்திற்கும் தாகித்தவர்களால் வருகை தரப்படும் தண்ணீர்த் தடாகத்திற்கும் சுட்டப்படுகின்ற கொடிக்கும், கொடைத் தன்மைக்கும் வள்ளல் தன்மைக்கும் உரியவர்கள் ஆவார்கள்.

நபியவர்கள் எத்தகையவரெனில் - முஹம்மது (ஸல்)
ஆகிய அவர்களை விட, மிகுந்த மணமானவரையோ,
மிகுந்த மதுரமானவரையோ மகத்தான பதவி உடைய
வரையோ, கம்பீரம் மிக்கவரையோ, இறைவனுடன் மிகவும்
நெருக்கமானவரையோ, கொடைத்தன்மை மிக்கவரையோ,
நாவன்மை மிக்கவரையோ, உறுதியானவரையோ, பெருந்
தலைவரையோ, தலைமைப் பதவியில் சிறந்தவரையோ,
மிகவும் வழிபடுகிறவரையோ, மிகவும் புகழ்கிறவரையோ,
நேர்வழிமிக்கவரையோ, மிகவும் வெளிப்படையானவ
ரையோ, அழகு மிக்கவரையோ செழிப்பு மிக்கவரையோ
பிரபலம் மிக்கவரையோ, ஒளி மிகுந்தவரையோ, மிகவும்
பளிச்சிடுபவரையோ, எழில் மிக்கவரையோ, மிகவும்
ஒளிமயமானவரையோ, மிகுந்த தூய்மையாளரையோ,
கூர்மதி மிக்கவரையோ, மிகவும் சிறந்தவரையோ மிகவும்
அறிந்தவரையோ, மிகவும் இரக்கமுடையவரையோ மிகுந்த
மென்மையாளரையோ மிகுந்த அறிவாற்றல் உடையவ
ரையோ அருட்பேறு மிக்கவரையோ மிகவும் உயர்ந்த
வரையோ, மிகவும் பயனுள்ளவரையோ, மிகுந்த வீரமுடை
யவரையோ, மிகவும் கட்டுப்படுகிறவரையோ, போது
மென்ற மனம் மிகுந்தவரையோ பேணுதல் மிக்க வரையோ,
முழுமை மிக்கவரையோ, சிறப்பு மிக்கவரையோ, முழுமை
மிக்கவரையோ, நேர்மை மிக்கவரையோ மகத்துவம் மிக்கவ
ரையோ, கருணை மிக்கவரையோ, அறிவு மிக்கவரையோ,
மிகுந்த பொறுமை யாளரையோ, மிகுந்த விளக்கம் உடைய
வரையோ, மிகுந்த நேரானவரையோ, கண்ணியம் மிக்கவ
ரையோ, பெருமை மிக்கவரையோ, அல்லாஹு படைக்க
வேயில்லை. நபியவர்களுக்கு அலலாஹ தன்னிடத்தில்
மகத்துவத்தையும் சிறப்பையும் அதிகமாகக் கொடுத்திருக்
கிறான்.

## 10வது பைத்து

أُهْدِى الصَّلَاةَ مَعَ السَّلَامِ السَّرْمَدِيْ
لِلْمُصْطَفَى الْهَادِى الشَّفِيْعِ مُحَمَّدٍ

மன்றாடுகிறவரும், நேர்வழி காட்டியும், தெளிவாக்கப் பட்டவருமான முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நிரந்தர மான ஸலாமுடன் கூடிய ஸலவாத்தினை நான் காணிக்கை யாக்குகிறேன்.

اَحْيَا رَبِيْعَ الْقَلْبِ شَهْرُ الْمَوْلِدِ
كُلَّ الْاَنَامِ بِذِكْرِ مَوْلِدِ اَحْمَدٍ

மாநபி (ஸல்) அவர்களின் பிறப்பு மாதம் இதயத்தின் வசந்தத்தை உயிர் பெறச் செய்தது. படைப்பினமெல்லாம் அஹ்மது நபி (ஸல்) அவர்களின் பிறப்பு நேரத்தின் நினைவில் இருக்கிறார்கள்.

جَاءَتْ لِمَوْلِدِهِ الشَّرِيْفِ بَشَائِرٌ
وَخَوَارِقُ الْعَادَاتِ لَيْلَةَ مَوْلِدِ

நபியவர்களின் சிறப்பான பிறப்பு நேரத்திற்குரிய நற் செய்தியாளர்கள் பலர் வந்தனர். அவர்களின் பிறப்பு இரவில், வழக்கத்திற்கு மாறான அற்புதங்கள் பல நிகழ்ந் தன.

شَرُفَ الزَّمَانُ وَأَهْلُهُ بِوُجُودِهِ
شَرَفًا يَرُوحُ عَلَى الزَّمَانِ وَيَغْتَدِي

“நபியவர்களின் பிறப்பினால் அக்காலமும் அக்காலத்தவர்களும் எல்லாக் காலங்களை விடவும் காலையிலும் மாலையிலும் தொடரும் நிரந்தர சிறப்பாகச் சிறப்புற்றனர்”

وَفِي وَلَيْلُ الْجَهْلِ قَدْ حَجَبَ الْهُدَى
فَبَدَى الصَّبَاحُ بِنُورِهِ الْمُتَوَقِّدِ

அறியாமை எனும் இரவு நேர்வழிக்கு திரையிட்ட நிலையில் நபி அவர்கள், அனைத்தையும் நிறைவு செய்தார்கள் அவர்களின் ஏற்றப்பட்ட ஒளியினால் விடியல் பிறந்தது.

فَهَدَى ضَلَالَ الْحَائِرِينَ بِنُورِهِ
حَتَّى اسْتَبَانَ عِنَادُ مَنْ لَمْ يَهْتَدِي

நேர்வழி பெறாதவனின் பிடிவாதம் அகன்று விடும் அளவுக்கு நபியவர்கள், தடுமாறியவர்களின் வழிகேடகற்றத் தனது ஒளியினால் வழிகாட்டினார்கள்.

أَبْدَى لَنَا سُبُلَ الرَّشَادِ وَلَمْ يَدَعْ
مِنْهَا سَبِيلًا فَهُوَ أَكْرَمُ مُرْشِدِ

நேர்வழியின் பாதைகளை நமக்காக நபியவர்கள் வெளிப் படுத்திக் காட்டினார்கள். அப்பாதைகளிலிருந்து எதையுமே அவர்கள் விட்டு வைக்கவில்லை. எனவே நபியவர்கள் நேர்வழி காட்டியவர்களில் கண்ணியமிக்கவராவார்கள்.

فَامَدَّ فِينَا بَحْرَ عِلْمٍ زَاخِرٍ
عَذْبًا لَّذِيذَ الْوِرْدِ سَهْلَ الْمَوْرِدِ

எனவே, நபியவர்கள், ஆழமான அறிவுக்கடலை நம்மில், மதுரமாகவும் - தாகம் தீர்க்க வருபவர்களுக்கு இனிமை யாகவும் - தாகம் தீர்க்கும் இடத்தில் இலகுவானதாகவும் - நீடிக்க வைத்தார்கள்.

آيَاتُهُ وَالْمُعْجِزَاتُ كَثِيرَةٌ
شَهِدَتْ بِصِحَّتِهَا عُقُولُ الْحُسَّدِ

நபியவர்களின் அத்தாட்சிகளும் அற்புதங்களும் அதிக மாக உள்ளன. அவையெல்லாம் சரியானவையே என்று பொறாமைக்காரர்களின் புத்திகள் கூட சாட்சியம் நின்றன.

اَلْبَدْرُ شُقَّ بِأَمْرِهِ وَالشَّمْسُ إِذْ
غَرَبَتْ لَهُ رُدَّتْ بِغَيْرِ تَرَدُّدِ

அவர்களின் உத்தரவினால் முழுமதி பிளக்கப்பட்டது. சூரியன் அணைந்த போது தடுமாற்றமின்றி அவர்களுக்காக மீட்டபபட்டது.

وَالْوَحْشُ وَالْاَشْجَارُ قَدْ سَجَدَتْ لَهٗ
وَعَلَيْهِ قَدْ سَلَّمْنَ بَعْدَ تَشَهُّدِ

விலங்குகளும், மரங்களும் அவர்களுக்குச் சிரம் பணிந்தன. ஷஹாதத் கலிமா கூறியபின் அவைகள் அவர் களுக்கு ஸலாம் கூறின.

وَمِنَ الْيَسِيْرِ سَقٰى وَاَطْعَمَ جَيْشَهٗ
حَتّٰى اكْتَفَوْا وَيَسِيْرُهٗ لَمْ يَنْفَدِ

நபியவர்கள் சிறிதளவு உணவுப் பொருளிலிருந்து தன் படைகளுக்கு அப்படைகள் போதும் என்று சொல்லும் வரை நீரைப் புகட்டினார்கள். உணவும் ஊட்டினார்கள். அந்தச் சிறிதளவு உணவுப் பொருள் கூட தீர்ந்துவிட வில்லை - வற்றிவிடவில்லை.

وَسَرٰى وَقَدْ اَسْرٰى بِهٖ سُبْحَانَهٗ
يَقْظَانَ مُمْتَطِئًا اَعَالِى الْفَرْقَدِ

நபியவர்கள் இரவுப் பயணம் மேற்கொண்டார்கள். ஃபர்கத் எனும் தாரகைக்கும் மிக உயர்ந்த இடங்களைக் கடந்து நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டவராக நபியவர்களை அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா நபியின் விழிப்பு நிலையில் இரவு நடத்தாட்டினான்.

وَعَلَا عَلَى الْأَفْلَاكِ وَالْأَمْلَاكُ فِيْ
مَسْرَاهُ يَشْهَدُ ثُمَّ مَا لَمْ تَشْهَدِ

வானத்துக் கோளங்களைவிட வள்ளல் நபி அவர்கள் மேல் நோக்கிப் பயணமானார்கள். அவர்களின் பயணப் பாதையில் வானவர்கள் நின்றனர். அங்கே அவ்வானவர்கள் பார்க்காத காட்சிகளை அவர்கள் பார்த்தார்கள்.

وَلَهُ مَدَى اَنْفَاسِهِ مَعَ رَبِّهِ
مَاشِئْتَ مِنْ قُرْبٍ وَّلَذَّةِ مَشْهَدِ

நபியவர்கள் மூச்சுவிடும் காலமெல்லாம் அவர்களுக்கு அவர்களின் நாயனுடன் நீ நினைக்கும் அளவுக்கு நெருக்கமும் இறை சன்னிதானக் காட்சியின் இன்பமும் இருந்தது.

وَلَهُ الْوَسِيْلَةُ وَالْفَضِيْلَةُ وَالْعُلٰى
وَمَقَامُهُ الْمَحْمُوْدُ يَوْمَ الْمَوْعِدِ

'வஸீலா' எனும் பதவியும் 'பளீலா' எனும் சிறந்த பதவியும் மிக உயர்ந்த பல பதவிகளும் மகாமுல் மஹ்மூத் எனப்படும். புகழப்பட்ட தங்குமிடமும் வாக்களிக்கப்பட்ட மறுமை நாளில் வள்ளல் நபியவர்களுக்கு உரியதாக அமையும்.

أَوْصَافُهُ مَا يَنْتَهِي تَعْدَادُهَا
فَالْمَدْحُ يَقْصُرُ عَنْ بُلُوْغِ الْمَقْصَدِ

நபி அவர்களின் தன்மைகளை எண்ணிக் கணக்கிட்டால் அது முடியாது. எனவே, புகழ்ச்சி தனக்குரிய குறிக்கோளை எட்டிப் பிடிக்க முடியாமல் சுருங்கி விடுகிறது.

يَاسَيِّدَ السَّادَاتِ جِئْتُكَ قَاصِدًا
أَرْجُوْا حِمَاكَ فَلَا تُخَيِّبْ مَقْصَدِيْ

தலைவர்களுக்குரிய பெருந்தலைவரே! தங்களை நாடி நான் வந்துள்ளேன். தங்களின் பாதுகாப்பை நான் எதிர்பார்க் கிறேன். எனவே, என் நோக்கத்தைப் பாழாக்கி விடாதீர்கள்.

مَالِيْ سِوٰى حُبِّيْ لَدَيْكَ وَسِيْلَةٌ
فَامْنُنْ عَلَيَّ بِفَضْلِ جُوْدِكَ أَسْعَدِ

தங்களிடம் நான் வைத்திருக்கும் அன்பைத் தவிர இறை விடம் நான் நெருங்க எனக்கு எவ்வித வஸீலாவும் இல்லை. எனவே தங்கள் கொடையின் அருட்பொழிவு கொண்டு என் மீது நலம் புரியுங்கள்! நற்பேறடையச் செய்யுங்கள்!

إِنِّيْ نَزِيْلُكَ وَالنَّزِيْلُ لَدَيْكَ يَا
خَيْرَ الْأَنَامِ بِكُلِّ خَيْرٍ يَغْتَدِيْ

நபியே! நிச்சயமாக நான் தங்களின் விருந்தாளியாவேன். படைப்பினத்தில் சிறந்தவரே! தங்களிடம் விருந்தாளியாக இருப்பவர் அனைத்துவகை நன்மையையும் உணவாக உட்கொள்வார்.

فَعَلَيْكَ مِنَّا كُلَّ وَقْتٍ دَآئِمًا
أَزْكَى الصَّلَاةِ مَعَ السَّلَامِ السَّرْمَدِيْ

எனவே, நித்திய ஸலாமுடன் மிகத் தூய ஸலவாத்து, தங்கள் மீது - எங்களிலிருந்து எந்நேரமும் நிரந்தரமாக உண்டாகும்.

وَعَلَى صَحَابَتِكَ الْكِرَامِ جَمِيْعِهِمْ
وَالتَّابِعِيْنَ لَهُمْ بِخَيْرٍ فَاجْهَدِ

மேலும் தங்களின் சங்கையான தோழர்கள் அனைவர் மீதும் நன்மையைக் கொண்டு அவர்களைப் பின்பற்றிய வர்கள் மீதும் ஸலாம் உண்டாவதாக! எனவே நன்மையைக் கொண்டு என்னை வலுவாக்குங்கள்!

قَدْ حَلَّ بِيْ مَا قَدْ عَلِمْتَ مِنَ الْأَذَى
وَالظُّلْمِ وَالضُّعْفِ الشَّدِيْدِ فَاسْعِدِ

இடையூறு, அநியாயம், கடுமையான பலவீனம் போன்றவை நிச்சயமாக என் மீது இறங்கியுள்ளது என்பதை தாங்கள் நிச்சயமாக அறிவீர்கள். எனவே இவற்றைப் போக்குவதில் எனக்கு உதவுங்கள்!

اِشْفَعْ لِرَبِّكَ اَنْ يُّعَافِيَنِيْ وَاَنْ
لَا يُشْمِتَ الْاَعْدَآءَ بِيْ يَاسَيِّدِيْ

என் எஜமானே! தாங்கள் எனக்கு ஆரோக்கியத்தை வழங்குவதற்கும் என்னை வைத்து என் எதிரிகளை மகிழ்ச்சி அடையாமல் ஆக்குவதற்கும் உங்கள் நாயனிடம் எனக்காகப் பரிந்து பேசுங்கள்.

يَارَبِّ يَا اَللّٰهُ هٰذَا الْمُصْطَفٰى
شَفِّعْهُ فِيَّ وَعَافِ سَمْعِيْ وَرُدَّ

என் இறைவா! அல்லாஹ்வே! உன்னால் தெளிவு செய்யப்பட்ட இந்தத் திருநபியை என் விஷயத்தில் பரிந்துரை செய்ய வைப்பாயாக! என் செவிப்புலனுக்கு நல்ல ஆரோக்கியத்தை வழங்கி ஆற்றலை மீட்டித் தருவாயாக!

هٰذَا اسَمَاعُ حَدِيْثِ مَوْلِدِهٖ انْتَهٰى
وَالْحَمْدُ لِلّٰهِ الْمُعِيْنِ الْمُسْعِدِ

நபி அவர்களின் பிறப்பு நாளைப் பற்றிய செய்தியினை செவியுற வைக்கும் இந்நூல் நிறைவு பெற்றது. துணையும் உதவியும் செய்யும் அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்!

بَرَكَاتُهُ نَرْجُوْا بِهَا فِيْ هٰذِهِ
الدُّنْيَا الْمَصَالِحَ وَالشَّفَاعَةَ فِيْ غَدٍ

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் 'பறக்கத்' எனும் அபிவிருத்திகளால் இந்த உலகில் இணக்கமான நிலைகளையும் நாளை மறுமையில் மன்றாட்டத்தையும் எதிர்பார்க்கிறோம்.

يَارَبَّنَا اَصْلِحْ سَرَائِرَنَا وَسِيْـ
رَتَنَا بِاَسْرَارِ النَّبِيِّ مُحَمَّدٍ

எங்கள் இறைவா! முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அந்தரங்கங்களின் பொருட்டால் எங்களின் அந்தரங்கங்களையும், நடைமுறை வாழ்வையும் சீர்திருத்துவாயாக!

يَارَبِّ وَارْحَمْنَا وَوَفِّقْنَا وَجُدْ
وَالْطُفْ وَاَلْهِمْنَا الرَّشَادَ وَسَدِّدِ

என் இறைவா! எங்கள் மீது கருணை பொழிவாயாக! எங்கள் செயல்பாடுகளுக்கு உறுதுணை புரிவாயாக கொடையினை வழங்குவாயாக! இரக்கம் காட்டுவாயாக! நேர்வழியை எங்களுக்கு உதிப்பாக்குவாயாக! எங்கள் செயல்பாடுகளை சீராக்குவாயாக!

وَاصْفَحْ وَمُنَّ بِجَمْعِ شَمْلٍ وَاغْفِرَنْ
لِمُحَمَّدِ ابْنِ مُحَمَّدِ ابْنِ مُحَمَّدِ ۝

எங்கள் குறைகளைப் பொறுத்திடுவாயாக! பிரிவினையை ஒருங்கிணைப்பதின் மூலம் நன்மையைப் பொழிவாயாக! முஹம்மதின் மகனான முஹம்மதின் மகனான இந்த முஹம்மதுக்கு நிச்சயம் நீ பிழை பொறுப்பாயாக!

## جِنّ دُعَا

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى رَسُوْلِكَ سَيِّدِنَا مُحَمَّدٍ
اَعْلَمِ الْعَالَمِيْنَ ۝ وَاَشْرَفِ الْمُرْسَلِيْنَ ۝ مَخْزَنِ
كَنْزِ الْوُجُوْدِ ۝ وَمِفْتَاحِ خَزَائِنِ الْجُوْدِ ۝ وَقِبْلَةِ
الْوَاجِدِ وَالْمَوْجُوْدِ ۝ وَصَاحِبِ لِوَآءِ الْحَمْدِ وَالْمَقَامِ
الْمَحْمُوْدِ ۝ حَمَامِ بُرُوْجِ الْمَلَكُوْتِ ۝ وَطَاؤُوْسِ
حَضْرَةِ الْجَبَرُوْتِ ۝ وَمُدَرِّسِ مَسْجِدِ اللَّاهُوْتِ
وَمَحْبُوْبِ الْمَلِكِ الْحَيِّ الَّذِيْ لَا يَنَامُ وَلَا يَمُوْتُ ۝
وَصَلِّ عَلٰى جَمِيْعِ الْاَنْبِيَآءِ وَالْمُرْسَلِيْنَ ۝ وَاٰلِ
كُلٍّ مِنْهُمْ وَصَحْبِهِمْ اَجْمَعِيْنَ ۝ وَسَلِّمْ

عَلَيْهِمْ تَسْلِيْمًا كَثِيْرًا ○
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○

## சின்ன துஆ

அல்லாஹ்வே! அகிலத்தார்களில் மிக அறிந்தவரும் உன்னுடைய திருத்தூதரும் எங்களின் எஜமானுமாகிய முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக! அவர்கள் திருத்தூதர்களில் மிகச் சிறந்தவர் ஆவார்கள். உள்ளமை உடைய நிதியின் கருவூலமாவார்கள் கொடையுடைய களஞ்சியங்களின் திறவுகோலாவார்கள் உண்டாக்குகிற பரம் பொருளுக்கும், உண்டாக்கப்பட்ட பொருளுக்கும் கிப்லா ஆவார்கள். 'லிவாவுல் ஹம்து' எனும் புகழின் கொடிக்கும், மகாமுல் மஹ்மூத் எனும் மறுமையில் புகழப்பட்ட பதவிக்கும் உரியவராவார்கள், 'ஆலமுல் மலகூத் எனும் உலகின் கிரகங்களுடைய புறா ஆவார்கள். 'ஆலமுல் ஜபரூத்' எனும் உலகின் மகத்தான திருச்சன்னிதான மயில் ஆவார்கள். ஆலமுல் லாஹூத்' எனும் உலகின் இறை இல்லத்துப் போதகராவார்கள். தூக்கமும் மரணமும் இல்லாத நீடித்த- ஜீவனுள்ள- மன்னவனால் நேசிக்கப்பட்டவராவார்கள். இத்தகைய சிறப்புமிகு எங்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும், மற்றும் அனைத்து நபிமார்கள், திருத்தூதர்கள் மீதும் இவர்கள் அனைவரின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் எல்லோரின் மீதும், ஸலவாத்தும் அதிகமான ஸலாமும் கூறுவாயாக! அனைத்துலகங்களின் அதிபதியாம் அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்!

## 11-வது பைத்து

مَوْلَايَ صَلِّ وَسَلِّمْ دَائِمًا أَبَدًا

عَلَى حَبِيْبِكَ مَمْدُوْحًا بِفُرْقَانٍ

உன் திருவேதமாம் புர்கானின் மூலம் புகழப்பட்டவரான உன் நேசர் மீது எங்கள் எஜமானே எக்காலும் நிரந்தரமாய் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக!

حُبُّ النَّبِيِّ عَلَى الْإِنْسَانِ مُفْتَرَضٌ

وَحُبُّ أَصْحَابِهِ نُوْرٌ بِبُرْهَانٍ

நபி பெருமான் (ஸல்) அவர்கள் மீது நேசம் வைப்பது மனித இனத்தின் மீது கடமையாக்கப்பட்டதாகும். அவர் களுடைய தோழர்கள் மீது வைக்கிற நேசம் தெளிவான அத்தாட்சியின் மூலம் ஒளிமயமானதாகும்.

مَنْ كَانَ يَعْلَمُ أَنَّ اللّٰهَ خَالِقُهُ

لَا يَرْمِيَنَّ أَبَا بَكْرٍ بِبُهْتَانٍ

நிச்சயமாக அல்லாஹ் தன்னைப் படைத்தவன் என்பதை ஒருவர் தெரிந்து வைத்திருந்தால், - அவர், ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்கள் மீது அவதூறான வார்த்தையைப் பேசவே மாட்டார்.

watermarked evaluation copy of CVISION PDFCompressor

وَلَا أَبَا حَفْصٍ نِ الْفَارُوقَ صَاحِبَهُ
وَلَا الْخَلِيفَةَ عُثْمَانَ ابْنَ عَفَّانْ

ஹப்ஸா நாயகியின் தந்தையான ஹஜ்ரத் உமர்ஃபாருக் (ரழி) எனும் நபித்தோழரையும் மூன்றாம் கலீபாவான ஹஜ்ரத் உதுமான் இப்னு அப்பான் (ரழி) அவர்களையும் எதிர்த்து எந்தச் சொல்லையும் வீசக் கூடாது.

وَلَا عَلِيًّا أَبَا السِّبْطَيْنِ نِعْمَ فَتًى
أَوْصَى بِهِ اللّٰهُ فِي سِرٍّ وَّإِعْلَانْ

மிகச் சிறந்த இளைஞரும் அருள் நபி (ஸல்) அவர்களின் அருமைப்பேரர்களாம் ஹஸன் ஹுஸைன் (ரழி) ஆகியவர்களின் தந்தையுமான ஹஜ்ரத் அலி இப்னு அபீதாலிப் அவர்களையும் எதையும் சொல்லக் கூடாது. இவர்களைப் பற்றி இரகசியமாகவும் பகிரங்கமாகவும் இறைவன் அறிவுரை கூறியுள்ளான்.

وَلَا سَعِيدًا وَّسَعْدًا طَلْحَةَ وَّزُبَيْـ
ـرًا عَامِرًا وَّابْنَ عَوْفٍ عَبْدَ رَحْمَانِ

மேலும் ஹஜ்ரத் ஸயீத் (ரழி) ஸஃது (ரழி) தல்ஹா (ரழி) ஸுபைர் (ரழி), ஆமிர் (ரழி), அப்துர் ரஹ்மான் இப்னு 'அவ்ப் (ரழி) ஆகியவர்கள் குறித்தும் எதுவும் சொல்லக்கூடாது.

PDF compression, OCR,

رُكْنُ الشَّرِيْعَةِ بَحْرُ الْعِلْمِ مُنْتَخَبٌ
وَالْبَيْتُ لَا يَسْتَوِيْ اِلَّا بِاَرْكَانٍ

இவர்கள் ஷரீ அத்தின் தூணும், அறிவுக் கடலும், தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவார்கள். தூண்களில்லாமல் வீடு சமமாகாது.

شَاعَتْ مَنَاقِبُهُمْ فِي النَّاسِ كُلِّهِمِ
مَابَيْنَ عِلْمٍ وَّاَحْكَامٍ وَّتِبْيَانٍ

இவர்களின் மகத்துவங்கள் - அறிவு, சட்டங்கள், விளக்கம், ஆகியவை மக்கள் அனைவரிடையில் பரவி யுள்ளது.

لَا يَسْتَطِيْعُ الْعِدٰى مِنْهُمْ مُّحَارَبَةً
وَلَوْ اَتَوْهُمْ بِاَبْطَالٍ وَّشُجْعَانٍ

இவர்களை எதிர்த்துப் போராட எதிரிகள் இவர்களிடம் பெரும்படைகளுடனும், வீரர்களுடனும் வந்தாலும் கூட அந்த எதிரியால் எதுவும் முடியாது.

فَهُمْ صَحَابَةُ خَيْرِ الْخَلْقِ خَصَّهُمُ

OCR, ... using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

رَبُّ الْعِبَادِ بِجَنَّاتٍ وَّرِضْوَانِ

ஏனெனில் இவர்கள் படைப்பில் சிறந்த மாநபியின் தோழர்களாவார்கள். சுவனங்கள் மற்றும் தன் திருப் பொருத்தம் ஆகியவை கொண்டு அடியார்களின் நாயன் இவர்களைக் குறிப்பாக்கி உள்ளான்.

فَمَنْ اَحَبَّهُمْ قَدْ نَالَ مَنْزِلَةً
عِنْدَ الْاِلٰهِ وَجَازَاهُ بِاِحْسَانِ

எனவே, இவர்களை நேசிக்கிறவர் இறைவனிடத்தில் நல்ல பதவியை நிச்சயம் பெற்று விட்டார். இறைவன் இவருக்கு நலம் புரிவதன் மூலம் கைமாறு வழங்கி விட்டான்.

عَلَيْهِمْ مِنْ سَلَامِ اللّٰهِ اَطْيَبُهُ
مَانَاحَتِ الْوُرْقُ فِيْ اَوْرَاقِ اَغْصَانِ

அல்லாஹ்வின் சாந்தியிலிருந்து நறுமணம் மிக்க சாந்தி இவர்களின் மீது, மரக்கிளைகளின் இலைகளில் ஓசை யெழும் காலமெல்லாம்- உண்டாவதாக!

بَعْدَ الصَّلَاةِ عَلٰى مَبْعُوْثِ رَحْمَانِ
مُحَمَّدٍ وَّذَرَارِيْهِ وَعَصَبَتِهِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

அளவற்ற அருளாளனால் அனுப்பப்பட்ட முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து சொல்லப்பட்ட பின், அவர்களுடைய சந்ததிகள் மீதும் அவர்களுடைய குடும்ப அங்கங்களின் மீதும் ஸலவாத்து சொல்லப்பட்ட பிறகு மேற்கூறப்பட்டவர்கள் மீது இறைவனின் சாந்தி உண்டாவதாக!

## دُعَا

تَمَّ الْمَوْلِدُ الشَّرِيْفُ ○ مَوْلِدُ الْمُصْطَفَى الْمُجْتَبَى
الرَّؤُوْفِ الْمُنِيْفِ ○ صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَصَحْبِهٖ
وَسَلَّمُ ○ جَعَلَنَا اللهُ وَاِيَّاكُمْ مِمَّنْ يَسْتَوْجِبُ
شَفَاعَتَهٗ ○ وَيَرْتَجِيْ بِهٖ مِنَ اللّٰهِ رَحْمَتَهٗ وَرَأْفَتَهٗ ○
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○ اَللّٰهُمَّ بِحُرْمَةِ
هٰذَا النَّبِيِّ الْكَرِيْمِ ○ وَاٰلِهٖ وَاَصْحَابِهِ السَّالِكِيْنَ
لِنَهْجِهِ الْقَوِيْمِ ○ اِجْعَلْنَا مِنْ خِيَارِ اُمَّتِهٖ ○
وَاسْتُرْنَا بِذَيْلِ حُرْمَتِهٖ ○ وَاحْشُرْنَا غَدًا فِيْ زُمْرَتِهٖ ○
وَاسْتَعْمِلْ اَلْسِنَتَنَا فِيْ مَدْحِهٖ وَنُصْرَتِهٖ وَاَحْيِنَا
مُسْتَمْسِكِيْنَ بِطَاعَتِهٖ ○ وَاَمِتْنَا عَلٰى سُنَّتِهٖ وَجَمَاعَتِهٖ
اَللّٰهُمَّ اَدْخِلْنَا مَعَهُ الْجَنَّةَ فَاِنَّهٗ اَوَّلُ مَنْ يَدْخُلُهَا ○
وَاَنْزِلْنَا مَعَهٗ فِيْ قُصُوْرِهَا فَاِنَّهٗ اَوَّلُ مَنْ يَنْزِلُهَا ○
وَارْحَمْنَا بِهٖ يَوْمَ يَسْتَشْفِعُ بِهِ الْخَلَائِقُ فَتَرْحَمُهَا ○

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

اَللّٰهُمَّ اِنَّا قَدْ حَضَرْنَا وَقَرَأْنَا مَوْلِدَ نَبِيِّكَ الْكَرِيْمِ ○
فَافِضْ عَلَيْنَا بِبَرَكَتِهٖ لِبَاسَ الْعِزِّ وَالتَّكْرِيْمِ ○ وَ
اَسْكِنَّا بِجِوَارِهٖ فِيْ دَارِ النَّعِيْمِ ○ وَنَعِّمْنَا فِي الْجَنَّةِ
بِالنَّعِيْمِ الْمُقِيْمِ ○ اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ بِجَاهِ النَّبِيِّ
الْمُصْطَفٰى ○ وَاٰلِهٖ اَهْلِ الصِّدْقِ وَالْوَفَا ○ اَنْ كُنْ لَنَا
مُعِيْنًا وَّمُسْعِفًا ○ وَبَوِّئْنَا مِنَ الْجَنَّةِ غُرَفًا ○ وَارْزُقْنَا
بِجَاهِهٖ ○ عِنْدَكَ قَبُوْلًا وَّعِزًّا وَّشَرَفًا ○ اَللّٰهُمَّ
اِنَّا نَتَوَسَّلُ اِلَيْكَ بِنَبِيِّكَ الْمُخْتَارِ ○ وَاٰلِهِ الْاَطْهَارِ
وَاَصْحَابِهِ الْاَخْيَارِ ○ وَالسَّادَاتِ الْاَبْرَارِ ○ اَنْ كَفِّرْ
عَنَّا الذُّنُوْبَ وَالْاَوْزَارَ ○ وَاحْرُسْنَا مِنْ جَمِيْعِ
الْمَخَاوِفِ وَالْاَخْطَارِ ○ وَاجْمَعْ بَيْنَنَا وَبَيْنَهٗ فِيْ دَارِ
الْقَرَارِ ○ وَتَقَبَّلْ مِنَّا مَا قَدَّمْنَاهُ مِنْ يَّسِيْرِ اَعْمَالِنَا
فِي الْاِعْلَانِ وَالْاِسْرَارِ ○ وَارْحَمْنَا بِرَحْمَتِكَ وَاغْفِرْ لَنَا
بِمَغْفِرَتِكَ اِنَّكَ اَنْتَ الْعَفُوُّ الْغَفَّارُ ○ الرَّحِيْمُ
السَّتَّارُ ○ اَلْكَرِيْمُ الْجَبَّارُ ○ اَلْوَاحِدُ الْقَهَّارُ ○ شعر

## மௌலிது நிறைவு துஆ

அருள்நபியின் பிறப்புச் செய்தி பற்றிய சிறப்பான மவ்லிது பூரணமாகி விட்டது. உயர்வுமிக்க இரக்கமுள்ள ...தாவு செய்யப்பட்ட தெளிவு செய்யப்பட்ட திருநபியின்

PDF compression

மவ்லிது நிறைவு பெற்று விட்டது. அவர்களின் மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் தோழர்களின் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக! நபியவர்களின் மன்றாட்டத்தை அவசியமாகப் பெறுகிறவர்களின் கூட்டத்திலும் அல்லாஹ்வின் கனிவையும் கருணையையும் நபியவர்களின் பொருட்டால் எதிர்பார்க்கிறவர்களின் கூட்டத்திலும் எங்களையும், உங்களையும் அல்லாஹ் ஆக்கியருள்வானாக! அகிலங்களின் அதிபதியாம் அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது. அல்லாஹ்வே! சங்கைமிக்க இந்த நபியின் கண்ணியத்தின் பொருட்டாலும் மேலும் அவர்களின் கிளையார்கள் அவர்களின் நேரான பாதையின் பால் நடந்தவர்களான அவர்களின் தோழர்களின் கண்ணியத்தின் பொருட்டாலும் எங்களை நபியவர்களுடைய சமுதாயத்திலுள்ள சிறந்தவர்களில் ஆக்கியருள்வாயாக! நபி அவர்களின் கண்ணியம் எனும் முந்தானையினால் எங்களை மறைத்திடுவாயாக! மறுமையில் எங்களை நபி அவர்களின் குழுவில் ஒன்று சேர்ப்பாயாக! நபி அவர்களின் புகழ்ச்சியிலும் அவர்களுக்குத் துணை நிற்பதிலும் எங்கள் நாவுகளைப் பயன்படுத்துவாயாக! நபி அவர்களுக்குக் கட்டுப்படுவதைப் பற்றிப் பிடித்தவர்களாக எங்களை வாழ வைப்பாயாக! நபி அவர்களின் 'ஸுன்னத் வல்ஜமா' அத்நெறியில் எங்களை மரணிக்க வைப்பாயாக!

அல்லாஹ்வே! நிச்சயமாக நபி அவர்கள் சுவ்னத்தில் நுழைபவர்களில் முதலானவராக இருப்பதால் அவர்களுடன் எங்களையும்சுவனத்தில் நுழைய வைப்பாயாக! சுவனத்து மாளிகைகளில் இறங்கக் கூடியவர்களில் நிச்சயமாக நபி அவர்கள் முதலானவராக இருப்பதால் அவர்களுடன் எங்களையும் அந்த சுவன மாளிகைகளில் இறங்க வைப்பாயாக! நபி அவர்களைக் கொண்டு படைப்பினங்கள் பரிந்துரை தேடும் நாளில் அப்பரிந்துரையால் படைப்பினங்கள் பால் நீ கருணை காட்டுவாயாக!

அல்லாஹ்வே! நிச்சயமாக நாங்கள் இங்கே வருகை தந்து
[illegible]

எனவே நபி அவர்களுடைய பரக்கத்தின் பொருட்டினால் மதிப்பு மற்றும் மரியாதை செய்தல் எனும் ஆடையை எங்கள் மீது பொழிந்தருள்வாயாக! 'நயீம்' எனும் சுவன வீட்டில் நபி அவர்களின் பக்கத்தில் எங்களைக் குடியமர்த்து வாயாக! மேலும் அந்த சுவனத்தில் நிலையான அருட் பேறு களை நாங்கள் அனுபவிக்கச் செய்வாயாக!

அல்லாஹ்வே! எங்களுக்கு நீ உதவி செய்பவனாகவும், உறுதுணை புரிபவனாகவும் ஆகிவிடவேண்டும் என்று தெளிவு செய்யப்பட்ட திருநபியின் மகத்துவத்தின் பொருட்டினாலும் உண்மையாளர்களும் வாக்குறுதி நிறை வேற்றுபவர்களுமான நபி அவர்களுடைய குடும்பத்தார் களின் கண்ணியத்துடைய பொருட்டாலும் நிச்சயமாக நாங்கள் உன்னிடம் கேட்கிறோம். சுவனத்து அறைகளில் எங்களுக்கு இட ஒதுக்கீடு செய்வாயாக! மேலும் நபி அவர் களுடைய மகத்துவத்தின் பொருட்டினால் எங்களுக்கு உன்னிடத்திலுள்ள அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் சிறப்பையும் தருவாயாக!

தேர்ந்தெடுக்கப்பட்ட திருநபியைக் கொண்டும் அவர் களின் தூயவர்களான குடும்பத்தினரைக் கொண்டும் அவர் களின் சிறந்தவர்களான தோழர்களைக் கொண்டும் நிச்சய மாக நாங்கள் உன்னிடம் வஸீலா தேடுகிறோம். எங்களின் பெரும்பிழைகளையும் பாவச் சுமைகளையும் எங்களை விட்டகற்றி அனைத்து அச்சங்களிலிருந்தும், ஆபத்துகளி லிருந்தும் எங்களைக் காப்பாற்றி நிலையான சுவன வீட்டில் எங்களுக்கும் எங்கள் நபி அவர்களுக்கும் மத்தியில் ஒன்று சேர்த்தலை ஏற்படுத்த நிச்சயமாக நாங்கள் உன்னிடம் வஸீலா தேடுகிறோம். பகிரங்கத்திலும் அந்தரங்கத்திலும் நாங்கள் செய்து முற்படுத்திய எங்களால் இயன்ற அமல் களை நீ ஏற்றுக் கொண்டு உன் கருணையினால் எங்கள் மீது நீ கருணைகாட்டி உன் மன்னிக்கும் தன்மையினால் எங்களை நீ மன்னித்திடுவாயாக! நிச்சயமாக பிழை பொறுப்

பவனும் பாவங்களை அதிகமாக மன்னிப்பவனும் அளவற்ற அன்பாளனும், குறைகளை மிகவும் மறைப்பவனும், சங்கையாளனும், சர்வாதிகாரியும் ஏகனும் அடக்கியாள் பவனும் நீயே ஆவாய்!

## துஆ பைத்து

اِلٰهِيْ تَمِّمِ النَّعْمَا عَلَيْنَا
وَوَفِّقْنَا لِشُكْرِكَ مَا بَقِيْنَا
اَذِقْنَا بَرْدَ عَفْوِكَ وَالْعَوَافِيْ
وَهَوِّنْ كُلَّ مَطْلُوْبٍ عَلَيْنَا

என் இறைவா! எங்கள் மீது உன் அருட்கொடைகளை பூரணமாக்குவாயாக! நாங்கள் வாழும் காலமெல்லாம் உனக்கு நன்றி செலுத்துவதற்கு உதவி செய்வாயாக! உன்னுடைய மன்னிப்பு, மற்றும் ஆரோக்கிய வாழ்வை வழங்குதல் ஆகியவற்றின் குளிர்ச்சியை நாங்கள் நுகரச் செய்வாயாக! எங்களின் தேட்டமனைத்தையும் எங் களுக்கு இலேசாக்கித் தருவாயாக!

فَاِنَّا لَا نُعَوِّلُ فِيْ مُهِمٍّ
اَلَمَّ بِنَا وَلَا مَا قَدْ لَقِيْنَا

عَلَى اَحَدٍ وَّلَا سَبَبٍ وَّلٰكِنْ
اِذَا ضَاقَتْ فَكُنْتَ لَهَا قَمِيْنَا

ஏனெனில், நிச்சயமாக நாங்கள்- எங்களில் இறங்கி விட்ட கவலைக்குரிய எந்த விஷயத்திலும் நாங்கள் சந்தித்து விட்ட எந்த விஷயத்திலும் எந்த நபரின் மீதும் எந்த ஒரு காரணத்தின் மீதும் நாங்கள் மீள மாட்டோம். உதவி கோரமாட்டோம். ஆனால் அந்தக் கவலைக்குரிய விஷயங் கள் எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டால் அவற்றை நீக்கிடத் தகுதி உள்ளவனாக நீ ஆகிவிட்டாய்!

وَصَلِّ عَلٰى رَسُوْلِكَ كُلَّ حِيْنٍ
مُحَمَّدِ النَّبِيِّ الزَّاكِي الْاَمِيْنَا
وَاٰلٍ ثُمَّ اَصْحَابٍ كِرَامٍ
وَتُبَّعِهِمْ وَكُلِّ الصَّالِحِيْنَا

உன்னுடைய திருத்தூதர் நம்பிக்கைக்குரிய தூய்மை யாளர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார், பின்னர் அவர்களின் சங்கையான தோழர்கள், அந்தத் தோழர்களைப் பின்பற்றியவர்கள் மற்றும் அனைத்து நல்லடியார்கள் மீதும் எல்லா நேரமும் ஸலவாத்துச் சொல்வாயாக!

بَعْدَ الصَّلَاةِ عَلٰى مَبْعُوْثِ رَحْمَانٍ
مُحَمَّدٍ وَّذَرَارِيْهِ وَعَصَبَتِهٖ

يَا اَللّٰهُ يَا اَللّٰهُ اِرْحَمِ الْمُؤْمِنِيْنَ
صَلَّى اللّٰهُ رَبُّنَا عَلٰى نُوْرِ الْعَالَمِيْنَ
اَحْمَدَ الْمُصْطَفٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ
وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ٣

அல்லாஹ்வே! அல்லாஹ்வே! இறைநம்பிக்கையாளர்கள் மீது கருணை காட்டுவாயாக! திருத்தூதர்களின் தலைவரும், தெளிவுசெய்யப்பட்டவரும், அனைத்துலகங்களின் பேரொளியுமான அஹ்மது நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார்கள் மற்றும் தோழர்கள் அனைவரின் மீதும், எங்கள் நாயன் அல்லாஹ், ஸலவாத்துச் சொல்வானாக!

كاتب شميراس

تَمَّتْ

இந்த மவ்லிது நிறைவுற்றது.

# يَاسَيِّدِىْ مَالِىْ

## யா செய்யிதீ மாலை

يَاسَيِّدِيْ يَارَسُوْلَ اللّٰهِ خُذْ بِيَدِيْ
مَالِيْ سِوَاكَ وَلَا اَلْوِيْ اِلٰى اَحَدِ

என் தலைவர் பெருந்தகையே!
இறையோனின் தூதுவரே!
அன்பாய் என் கைப்பிடித்தே
ஆதரித்துக் காத்தருள்வீர்!
இன்னுதவி செய்திடுவோர்
எனக்கில்லை தாங்களின்றி
அன்னியவே றெவரிடத்தும்
அடைக்கலம் யான் புகமாட்டேன்!

فَاَنْتَ نُوْرُ الْهُدٰى فِيْ كُلِّ كَائِنَةٍ
وَّاَنْتَ سِرُّ النَّدٰى يَاخَيْرَ مُعْتَمَدِيْ

எல்லா நல் லுலகினிலும்
ஏற்றமிகு நேர்வழியின்

சொல்லரிய பேரொளியாய்
சுடருவதும் தாங்களேதான்!
அல்லாஹ்வின் பெருங்கொடையின்
அந்தரங்கம் தாங்களேதான்!
ஒல்லும்வகை யான்பற்றும்
ஊன்றுகோலுள் சிறந்தவரே!

وَاَنْتَ حَقًّا غِيَاثُ الْخَلْقِ اَجْمَعِهِمْ
وَاَنْتَ هَادِى الْوَرٰى لِلّٰهِ ذِى السَّدَدِ

மெய்யாகப் படைப்புக்கெலாம்
மெய்க்காவல் தாங்களேதான்!
பொய்யாகக் காட்சிதரும்
பூவுலகப் படைப்புக்கெலாம்
ஐயமறும் சீரமைந்த
அல்லாஹ்வை நோக்கிச்செல்ல
துய்யவழி காட்டி வந்த
தூதுவரும் தாங்களேதான்!

يَامَنْ يَّقُوْمُ مَقَامَ الْحَمْدِ مُنْفَرِدًا
لِلْوَاحِدِ الْفَرْدِ لَمْ يُوْلَدْ وَلَمْ يَلِدِ

பிள்ளையென எவரையுமே
பெற்றெடுக்கா திருப்பவனும்
பிள்ளையென மற்றவர்க்குப்
பிறக்காத தனியவனும்

உள்ளுறையும் ஒருவனுமாய்
ஒளிருமிறை யிடம் தனித்தே
தெள்ளியநற் புகழ்ச்சியதன்
திருத்தலத்தில் நிற்பவரே!

يَا مَنْ تَفَجَّرَتِ الْاَنْهَارُ نَابِعَةً
مِّنْ اِصْبَعَيْهِ فَرَوَّ الْجَيْشَ بِالْمَدَدِ

இரு விரல்கள் மத்தியிலே
இனிமை மிகும் நன்னதிகள்
பெருமிதமாய் ஊற்றெடுத்தே
பீறிட்டுப் பாய்ந்திடவே
செருகளத்தில் மோதி வந்த
சீர்முஸ்லிம் படையினர்க்கு
அருளுதவி புரிந்த வண்ணம்
அருந்தாகம் தீர்த்தவரே!

اِنِّيْ اِذَا مَسَّنِيْ ضَيْمٌ يُرَوِّعُنِيْ
اَقُوْلُ يَا سَيِّدَ السَّادَاتِ يَا سَنَدِيْ

எனைநடுங்கச் செய்துவிடும்
ஏதேனும் பேரிடர்கள்
எனைத்தீண்டும் வேளையிலே
இன்னுதவி கேட்டவனாய்
"அனைத்துலகத் தலைவர்க்கெல்லாம்
அருந்தலைவர் ஆனவரே!
இணையில்லா என்னிணைப்பே!"
என்றுரைப்பேன் நிச்சயமாய்!

كُنْ لِّيْ شَفِيْعًا اِلَى الرَّحْمٰنِ مِنْ زَلَلِيْ

وَامْنُنْ عَلَيَّ بِمَا لَا كَانَ فِيْ خَلَدِيْ

சரியான நெறியினின்றும்
சறுகிவிடும் எந்தனுக்காய்
பரிவுமிகும் இறைவனிடம்
பரிந்துரைப்போர் ஆகிடுவீர்!
அரிதாக என் மனத்துள்
அமையாத நன்மையினை
பெரிதுமெந்தன் மேல் பொழிவீர்
பெருமானே நபிமணியே!

وَانْظُرْ بِعَيْنِ الرِّضَا لِيْ دَآئِمًا اَبَدًا

وَاسْتُرْ بِطَوْلِكَ تَقْصِيْرِيْ مَدَى الْاَمَدِ

கருணைமிகும் மாநபியே!
காலமெல்லாம் நித்தியமாய்
திருப்தியெனும் விழிகளினால்
தேம்புமெனைப் பார்த்தருள்வீர்!
பெருமானே! தங்களுயர்
பேரன்பால் என் குறையை
இருமையிலும் காலமெல்லாம்
இதமாக மறைந்திடுவீர்!

وَاعْطِفْ عَلَيَّ بِعَفْوٍ مِّنْكَ يَشْمَلُنِيْ

فَاِنَّنِيْ عَنْكَ يَا مَوْلَايَ لَمْ اَحِدِ

என்னெஜமான் ஆனவரே!
ஏற்றம்மிகு நுமைத்தவிர
அன்னியரை நிச்சயமாய்
அழையேனே, ஆதலினால்
மன்னவரே! தங்களுயர்
மன்னிக்கும் அரிய பண்பால்
என்னிடத்தில் கழிவிரக்கம்
என்றென்றும் காட்டிடுவீர்!

اِنِّيْ تَوَسَّلْتُ بِالْمُخْتَارِ اَشْرَفِ مَنْ
رَقَى السَّمٰوٰتِ سِرِّ الْوَاحِدِ الْاَحَدِ

திருத்தூதர் வரிசையிலே
தேர்ந்தெடுக்கப்பட்டவரும்
பெருவான்கள் ஏறிவந்த
பெருந்தகையுள் சிறந்தவரும்
ஒருமையிறை மர்மமுமாய்
ஓங்கிநிற்கும் நன்னபியை
அருமைவஸீ லாவெனயான்
அமைத்து விட்டேன் நிச்சயமாய்

رَبُّ الْجَمَالِ تَعَالَى اللّٰهُ خَالِقُهُ
فَمِثْلُهُ فِيْ جَمِيْعِ الْخَلْقِ لَمْ اَجِدِ

PDF compression, OCR, web optimization using a watermarked evaluation copy of CVISION PDFCompressor

அழகுக்கு அதிபதியாம்
அதிமேன்மை யான அல்லாஹ்
அழகின் திருவடிவமென
அண்ணலரைப் படைத்தவனாம்
அழகிய நற் குணநபிபோல்
அனைத்துலகப் படைப்பிலுமே
அழகியவே றெதனையுமே
அடியேன் யான் பார்த்ததில்லை!

خَيْرِ الْخَلَائِقِ أَعْلَى الْمُرْسَلِيْنَ ذُرًى
ذُخْرِ الْأَنَامِ وَهَادِيْهِمْ إِلَى الرَّشَدِ

எல்லா நற் படைப்புகட்கும்!
ஏற்றமுள்ள ஏந்தலரே!
வல்லானின் தூதர்க்கெலாம்
வளர்மேன்மை மிக்கவரே;
செல்வனெப் படைப்பினங்கள்
சேமித்த மாநிதியே!
நல்வழிபால் அனைவரையும்
நடத்துகின்ற நாயகரே!

بِهِ الْتَجَأْتُ لَعَلَّ اللّٰهَ يَغْفِرُ لِيْ
هٰذَا الَّذِيْ هُوَ فِيْ ظَنِّيْ وَمُعْتَقَدِيْ

என்பிழைகள் யான்வயுமே
ஏகனல்லாஹ் பொறுத்திடவே

நன்னபிகள் நாதரிடம்
நான் தஞ்சம் வேண்டிநின்றேன்
என்மனத்தின் நம்பிக்கையும்
இதுவேதான் ஐயமில்லை
என்கொள்கைப் பிடிப்பதுவும்
இத்தகைய தன்மையதே!

فَمَدْحُهُ لَمْ يَزَلْ دَأْبِيْ مَدَى عُمُرِيْ
وَحُبُّهُ عِنْدَ رَبِّ الْعَرْشِ مُسْتَنَدِيْ

எனவேயென் னுயிருடலில்
இணைந்திருக்கும் காலமெல்லாம்
இனியநபி தனைப்புகழும்
என் வழக்கம் நிலைத்திடுமே!
கனிநபிமேல் கொண்டிருக்கும்
காதலென்னை அர்ஷுடைய
நனிசிறந்த நாயனின்பால்
நலமாகச் சேர்த்திடுமே!

عَلَيْهِ أَزْكَى صَلَاةٍ لَمْ يَزَلْ أَبَدًا
مَعَ السَّلَامِ بِلَا حَصْرٍ بِلَا عَدَدٍ

எண்ணிக்கை வரையறைகள்
யாதுமின்றி பெருகிவரும்
கண்ணியஸ லாமெனும் சீர்
கமழுகின்ற சாந்தியுடன்

உன்தஞ்சேர் ஸலவாத்தாம்
உயர்தூய அருளின்மழை
புண்ணியர்மேல் நீக்கமறப்
பொழியுகவே நித்தியமாய்!

وَالْاٰلِ وَالصَّحْبِ اَهْلِ الْمَجْدِ قَاطِبَةً
بَحْرِ السَّمَاحِ وَاَهْلِ الْجُوْدِ وَالْمَدَدِ


பெரும் பதவிக் குரியவரும்
பேணும் கொடைப் பெருங்கடலும்
இருமை புகழ் ஈகையுடன்
இன்னுதவிக் குரியவராம்
பெருமானார் குடும்பத்தினர்
பிரிய தோழர் அனைவரின் மேல்
கருணைமிகும் பேரிறைவன்
காலமெல்லாம் அருள்புரிக!

ثُمَّ الصَّلَاةُ عَلٰى خَيْرِ الْبَرِيَّةِ مَنْ
اَتٰى اِلَيْهِ بِوَحْيِ اللّٰهِ جِبْرِيْلُ

எத்தகைய புனிதரின் பால்
ஏற்றமலக்கான 'ஜிப்ரீல்'
மெத்த புகழ் வஹியுடனே
மேதினியில் வந்தாரோ
அத்தகைய நபிமணியும்
அல்லாஹ்வின் சீர்படைப்பில்
உத்தமரும் ஆனவர்மேல்
ஒப்பில்லிறை அருள்புரிக!

فَيْضُ الصَّلَاةِ عَلَىٰ خَيْرِ الْهُدَاةِ جَرَىٰ
مَا لَعْلَعَ الْبَرْقُ مِنْ اٰفَاقِ نَجْمَاءِ

விண்மீன்கள் நீந்துகின்ற
விண்ணகத்தூப் பெருவெளியில்
எண்கவரும் மின்னல்கள்
இலங்குகின்ற காலமெல்லாம்
நன்னெறியைக் காட்டுகின்ற
நாதர்களில் சிறந்தவராம்
பொன்னபிமேல் அருட்பொழிவு
பொலிவோடு தவழுகவே!



كاتب شميراس